(A) பசல் அலி (B) கே.எம். பணிக்கர்

(C) எச்.என்.குன்ஸ்ரூ (D) பொட்டி ஸ்ரீ ராமுலு

7) தவறான இணையைக் கண்டறிக.

I. வரைவுக் குழு - பி.ஆர். அம்பேத்கர்

II. அரசமைப்பு நிர்ணய சபை - சர்தார் வல்லபாய் பட்டேல்

III. இடைக்கால அரசாங்கம் - ஜவகர்லால் நேரு

IV. மொழிவாரி மாநிலம் - பட்டாபி சீத்தாராமையா

(A) I (B) III (C) IV (D) II

8) சுதந்திரத்திற்குப் பின் எத்தனை விழுக்காடு மக்கள் விவசாயத்தைச் சார்ந்து இருந்தனர்?

(A) 50 (B) 60 (C) 70 (D) 80

9) இந்திய அரசியலமைப்பின் படி விவசாயம் ………………………… கீழ் வருகிறது.

(A) மத்திய பட்டியலின் (B) மாநில பட்டியலின்

(C) பொதுப் பட்டியலின் (D) எஞ்சிய பட்டியலின்

10) முதல் தொழிற்துறை கொள்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

(A) 1950 (B) 1956 (C) 1975 (D) 1991

11) இந்தியாவில் பொருளாதார தாராளமயமாக்கல் நடைபெற்ற ஆண்டு

(A) 1961 (B) 1991 (C) 2008 (D) 2005

12) ஐந்தாண்டு திட்டங்களைப் பொறுத்தவரை, பின்வரும் எந்த நாட்டை முன்னுதாரணமாக இந்தியா பின்பற்றியது?

(A) சோவியத் யூனியன் (B) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

(C) கனடா (D) பிரிட்டன்

13) 12 வது ஐந்தாண்டு திட்டத்தின் காலம் எது?

(A) 1952 - 57 (B) 1992 - 97 (C) 2012 - 17 (D) 2007 - 12

14) இந்தியாவின் திட்டக் குழு எந்த ஆண்டில் நிதி ஆயோக் என மாற்றம் செய்யப்பட்டது?

(A) 2014 (B) 2015 (C) 2016 (D) 2017

15) இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?

(A) 1951 (B) 1952 (C) 1976 (D) 1978

16) கொடுக்கப்பட்டுள்ள விடைக் குறிப்புகளைக் கொண்டு பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(a) தொழில் மேம்பாடு கொள்கைத் தீர்மானம் - 1. 1951-56

(b) இந்திய அறிவியல் நிறுவனம் - 2. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்

(c) மகலனோபிஸ் - 3. 1909

(d) முதலாவது ஐந்தாண்டு திட்டம் - 4. 1956

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

17) தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

(A) 1951 (B) 1961 (C) 1971 (D) 1972

18) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?

(A) 2005 (B) 2006 (C) 2007 (D) 2008


www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**TEACHER'S CARE ACADEMY**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB
# HISTORY
# 2022-2023



## UNIT – 5
## History of Tamil Nadu upto 1565 A.D.

*Your Success is Our Goal....*

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com


# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

# வரலாறு

## UNIT – 5

## தமிழ்நாட்டின் வரலாறு கி.பி. 1565 வரை




2022UGHIS00013HZX

# COMPETITIVE EXAM

# For

# UG TRB - HISTORY- 2022-23

www.Padasalai.Net

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: 266-C - Advaitha Ashram Road, Opp to New Bus Stand,Salem - 4.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

# UG TRB - 2022 - 2023

# HISTORY - UNIT - 5

## தமிழ்நாட்டின் வரலாறு கி.பி. 1565 வரை


| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 5.1 | **தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்**<br>5.1.1 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்:-<br>5.1.2 சேர நாடு:-<br>5.1.3 சோழ நாடு<br>5.1.4 இட விவரம் (Topography)<br>5.1.5. மேற்கு கிழக்கு மலைத் தொடர்கள்:-<br>5.1.6. தட்பவெப்ப நிலையும், பருவக் காற்றுகளும்:-<br>5.1.7 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (ம) தொடக்க காலம்<br>5.1.8 தமிழ் பிராமி கல்வெட்டுகள்<br>5.1.9 நடுகற்கள் (Middle stones)<br>5. 1. 10 கல்வெட்டுக்கள்<br>5.1.12 நாணயங்கள்<br>5.1.13 தமிழ் அல்லாத பிற மொழிச் சான்றுகளும் வெளிநாட்டினரின் குறிப்புகளும் | 1 |
| 5.2 | **தொல்பொருள் சான்றுகள் (அ) ஆதாரங்கள் மூன்று வகைகள் அவை,**<br>5.2.1 அசோகருடைய கல்வெட்டுக்கள் (Inscriptions of Ashoka) | 21 |
| 5.3 | **பண்டைய தமிழ் நாகரிகம் (Ancient Tamil Civilization)**<br>5.3.1 தமிழர்களின் தோற்றம் (Origin of Tamils)<br>5.3.2 தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகள் | 25 |

| | | |
|---|---|---|
| | 5.3.3 இலக்கியச் சான்றுகள்<br>5.3.4 தமிழ் அல்லாத இலக்கியங்கள்:- | |
| 5.4 | **சங்க காலம்:** | 28 |
| 5.5. | **சங்க காலச் சேரர்கள்**<br>5.5.1. சங்க காலச் சோழர்கள்<br>5.5.2. சங்க கால பாண்டியர்கள்<br>5.5.3. சங்க கால அரசியல் மற்றும் இலக்கியங்கள்<br>5.5.4. பாண்டியர்கள் | 32 |
| 5.6 | **நிர்வாகம்**<br>5.6.1 நிதியும் சட்டமும்:-<br>5.6.2 படை<br>5.6.3 வருவாய் (ம) நிதித் துறை<br>5.6.4 வருவாய் (ம) செலவினங்கள்:-<br>5.6.5 நாணயங்கள்:-<br>5.6.6 சோழர் காலத்தில் அவைகளின் மதிப்புகள்:<br>5.6.7 சங்க கால அரசியல்:-<br>5.6.8 சமூகம்:-<br>5.6.9 பெண்கள்:- | 47 |
| 5.7 | **சமூக பொருளாதார நிலை**<br>5.7.1 சமுதாயம்<br>5.7.2 கல்வி:-<br>5.7.3 பெண்கள்:<br>5.7.4 பிற்கால சோழர்கள் காலத்தில் அரச குடும்பப் பெண்களின் பங்களிப்பு:-<br>5.7.4 சோழர் கால நிலங்களை 3 வகையாக பிரிக்கலாம்:- | 57 |
| 5.8 | **சங்க இலக்கியங்கள்**<br>5.8.1 தொல்காப்பியம்:-<br>5.8.2 எட்டுத்தொகை<br>5.8.3 பத்துப்பாட்டு | 64 |
| 5.9 | **சங்கத்திற்குப் பின்** | 67 |
| 5.10 | **களப்பிரர்கள்** | 70 |
| 5.11 | **பல்லவர்கள்** | 73 |

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


| | | |
|---|---|---|
| | 5.11.1 பல்லவர்களின் தாயகம்:-<br>5.11.2 முற்காலப் பல்லவர்கள்<br>5.11.3 பிற்காலப் பல்லவர்கள்<br>5.11.4 முதலாம் மகேந்திரவர்மன் கி.பி.600-630 | |
| 5.12 | **தோற்றம்**<br>5.12.1. முதலாம் மகேந்திரவர்மன் கி.பி.600-630<br>5.12..2. முதலாம் நரசிம்மவர்மன் கி.பி.630-655<br>5.12.3. இரண்டாம் மகேந்திரவர்மன் (655-60)<br>5.12.4. முதலாம் பரமேஸ்வரன்:- (660-80)<br>5.12.5 இரண்டாம் நரசிம்மவர்மன் கி.பி.680-700<br>5.12.6 தண்டிவர்மன் (கி.பி.755-826)<br>5.12.7 மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.826-849)<br>5.12.8 நிருபதுங்கன் (ம) அபராஜிதன் (கி.பி849-875) | 76 |
| 5.13 | **பல்லவர் கால ஆட்சிமுறை (ம) சமூக பொருளதார நிலை** | 82 |
| 5.14. | **பல்லவர் கால கலை மற்றும் கட்டிடக்கலை** | 86 |
| 5.15. | **பல்லவர் கால சமூகப் பொருளாதார நிலை:-**<br>5.15.1. சமூக நிலை:-<br>5.15.2. பெண்களின் நிலை:-<br>5.15..3. உணவு முறை<br>5.15.4. பொருளதார நிலை:-<br>5.15.5. பல்லவர் கால போக்குவரத்து முறை:-<br>5.15.6. நிலமானியங்கள்<br>5.15.7. கிராம வாழ்க்கை<br>5.15.8. ஏரி பாசனம்<br>5.15.9. வருவாயும் வரிவிதிப்பும்<br>5.15. 10. பல்லவப் படைகள்<br>5.15. 11. கடல்வழி வாணியம் | 92 |
| 5.16 | **பக்தி இயக்கமும் இலக்கியமும்** | 103 |
| 5.17 | **விஜலாயன் சோழன் முதல் முதலாம் குலோத்துங்கன் வரை**<br>5.17.1. தஞ்சைச் சோழர்கள்:- | 113 |


www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 5.17.2. சாளுக்கிய சோழர்கள் | |
| 5.18. | **சோழர் நிர்வாகம் - அரசர்**<br>5.18.1. மண்டலங்கள்<br>5.18.2. உள்ளாட்சி அமைப்பு<br>5.18.3. ஊரார்<br>5.18.4. சபையார்<br>5.18.5. நகரத்தார்<br>5.18.6. நாட்டார்<br>5.18.7. உத்திரமேரூர் கல்வெட்டுகள் | 123 |
| 5.19. | **சோழர்களின் சமூக வாழ்க்கை மற்றும் கல்வி** | 130 |
| 5.20. | சங்க கால பாண்டியர்கள் (முற்கால பாண்டியர்கள்) | 136 |
| 5.21. | பிற்காலப் பாண்டியர் (மானூர் கல்வெட்டு – உள்ளாட்சி முறை பற்றி அறிய) | 141 |
| 5.22. | **அரசியல் மற்றும் நிர்வாகம்** | 146 |
| 5.23. | **கலை மற்றும் கட்டிடக்கலை** | 149 |
| 5.24. | மாலிக்காபூர் மலபார் படையெடுப்பு:- | 152 |
| 5.25. | **மதுரை சுல்தான்களின் கீழ் அரசு** | 154 |
| 5.26. | **பயணங்கள்** | 154 |
| 5.27. | **மார்கோ போலோவின் சான்றுகள்** | 154 |
| 5.28. | **மதுரை சுல்தான்** | 156 |
| 5.29. | **விஜயநகர ஆட்சியின் கீழ் தமிழ்நாடு** | 156 |
| | **முக்கிய தகவல்கள்** | 159 |
| | வினாக்கள் (100) | 213 |

# PG TRB HISTORY PREVIOUS YEAR QUESTIONS

1. சங்க காலத்தில் காடுகளை திருத்தி, விளை நிலைத்தையும், நிலையான நீர்ப்பாசன வசதிகளையும், ஏற்படுத்திய புகழ்மிக்க சோழ மன்னர்

(A) ராஜேந்திர சோழன் - I (B) குலோத்துங்க சோழன்

(C) ராஜ ராஜ சோழன் (D) கரிகாலச் சோழன்

2. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகத்து" இந்த வரிகள் எந்த தமிழ் இலக்கிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) மணிமேகலை (B) சிலப்பதிகாரம்

(C) திருக்குறள் (D) தொல்காப்பியம்

3. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்பட்ட காலம் எது?

(A) சங்க காலம் (B) பல்லவர்

(C) சோழர் (D) பாண்டியர்

4. சசிவர்ணதேவர் முதல் அரசராக ஆட்சி பொறுப்பேற்ற பகுதி ..........

(A) மதுரை (B) செஞ்சி

(C) தஞ்சாவூர் (D) சிவகங்கை

5. தென்னிந்தியாவில் முக்கியத்துவம் பெற்ற தக்கோலப் போர், யார் யாருக்கிடையே நடைபெற்றது?

(A) சோழர்கள் மற்றும் பாண்டியர்கள்

(B) சோழர்கள் மற்றும் ஹொய்சாளர்கள்

(C) சோழர்கள் மற்றும் ராஷ்டிரக்கூடர்கள்

(D) சோழர்கள் மற்றும் சாளுக்கியர்கள்

TEACHER'S CARE ACADEMY Padasalai.Net

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# 5. தமிழ்நாட்டின் வரலாறு கி.பி. 1565 வரை

## 5.1 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்

**தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பகுதி தமிழகம் என்றழைக்கப்பட்டது.**

- தெற்கே - இந்தியப் பெருங்கடலும்
- கிழக்கில - வங்காள விரிகுடாவும்
- மேற்கில் - அரபிக்கடலும்
- வடக்கி - வேங்கடமலையும் (இவையனைத்தும் - தமிழகத்தின் எல்லையாக அமைந்துள்ளது.




www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

### 5.1.1 தமிழ் நாட்டின் புவியியல் கூறுகள்:-

- மனித வாழ்வினை உருவாக்கும் பணியில் மேற்கூறிய புறமாறுதல்களுக்கான காரணிகள் ஒவ்வொன்றின் பங்கும் நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது. ஆனால் ஒரு நாட்டின் அங்கு வாழும் மனிதர்களின் வரலாறுகள் உறுதியாக நிலவியலமைப்பினாலேயே பெரிதும் நடத்திச் செல்லப்படுகின்றன.
- தமிழர்கள் வாழும் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியில் அமைந்துள்ளது. தமிழகம் 15 டிகிரி வட அட்சரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. நக்கீரர் தன் இறையனார் அகப்பொருள் என்னும் நூலில், முதற்சங்க காலத்தில் தமிழகம் இப்போதிருப்பதைவிடத் தெற்கிலும், கிழக்கிலும் விரிந்திருந்ததகாவும் 49 முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார்.
- மண்ணியல் விற்பன்னர்களும் (Geologists) மானிட வளர்ச்சிச் சரித்திர வல்லுநர்களும் (Anthropologists) தென் கோடியிலிருந்த இந்திய நிலப்பரப்பு குமரிக் கண்டம் (அ) லெமூரியா என்றழைக்கப்பட்டதாகவும், அந்நிலப்பரப்பு நெடுங்காலத்திற்கு முன்பே இந்துப் பெருங்கடலால் கடல் கோட்பட்டதாகவும் கூறுவர்.
- மூன்றாம் தமிழ்ச் சங்கக் காலத்துத் தமிழக வட, தென் எல்லைகள் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு" என்னும் கூற்றால் விளங்கும்.
- வடகிழக்கில் - வேங்கடமலையும், வடக்கிலும், வடமேற்கிலும் - மைசூர் பீடபூமியும் அமைந்துள்ளது.
- தமிழர்கள் தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என பிரித்திருந்தனர், வேங்கடப் பிரதேசம் கடக்க முடியாத காடுகளால் அமைந்திருந்தது. மூந்நீரின் இணைப்பைப் புலப்படுத்துவதாகக் கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் சந்திக்கின்றன. இது ஒரு புனித யாத்திரைத் தலமாகும்.
- வேங்கட மலைக்கு வடபுறம் வாழ்ந்த மக்கள் **"படுகர்"** என அழைக்கப்பட்டனர். மலைத் தொடரை அடுத்தத் தமிழகத்தையொட்டிய வடபுலத்தில் எருமை நாடு இருந்தது. எருமை நாட்டிற்கு மேற்கில் துளு நாடு, குடநாடு, கொங்கணம் ஆகியவை இருந்தன. தீபகற்ப இந்தியாவின் தென்கிழக்கில் ஹீலங்கா (இலங்கை) அமைந்துள்ளது.
- இந்தியாவிற்கும் - இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட மணி பல்லவத் தீவு காவிரிக் கரையிலமைந்திருந்த தொன்மை மிகு புகார் துறைமுகத்திலிருந்து 30 யோசனைத் தொலைவில் இருந்ததாக கூறப்படுகிறது.
- கொற்கையிலிருந்து ஜாவாவிற்குச் சென்ற கப்பல்கள் மணிப்பல்லவத்தீவின் வழியே சென்றதாகத் தெரிகிறது. நிர்வாண (காட்டு மிராண்டி) நாகர்கள் வாழ்ந்து வந்த தீவுகள் இலங்கைக்குக் கிழக்கே அமைந்திருந்தன.

- கி.பி. 9ம் நூற்றாண்டிற்குப் பின் பண்டைத் தமிழகம், தமிழ்நாடு கேரளா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- தமிழகம் 12 நாடுகள் (அ) மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது அவை முறையே பாண்டிநாடு, கிட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணாடு, பூளிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடஅருவாநாடு, சீதநாடு, மல்நாடு, புனல்நாடு என்பவையாகும். இவை பன்னிரண்டும் பாண்டியநாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, சொங்குநாடு, வேளிர் நாடு என்ற பெரும்பிரிவுகளுக்குள் அடங்கும்.
- காவிரிக்குத் தெற்கிலுள்ள இக்காலத்து மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பரப்பே அக்காலத்துப் பாண்டிய நாடு என அழைக்கப்பட்டது. இது வெள்ளார் நதிக்குத் தெற்கிலும் கன்னியாகுமரிக்கு வடக்கிலும், பெருவேலிக்கு கிழக்கிலும், வங்காள விரிகுடாவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது.
- இது பல கூற்றங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இங்கு செந்தமிழ் பேசப்பட்டு வந்தது. இதன் தலைநகராகவும் சிறந்த உள்நாட்டு பட்டிணமாகவும் மதுரை விளங்கிற்று. இது வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது. இது கோபுரம் சார்ந்த கோட்டைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். எனவே இது **"நான் மாடக் கூடல்"** என்றும் அழைக்கப்பட்டது. வடஇந்தியாவின் மதுரா என்னும் நகரிலிருந்து இவ்வூரை வேறுபடுத்திக் காட்ட தமிழ்புலவர்கள் இவ்வூரைத் **"தென் மதுரை"** (அ) தெக்கண மதுரை என்றும் அழைத்தனர். தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொற்கை இந்நாட்டின் துறைமுகமாகும்.
  - ✓ கொற்கை மக்களின் முக்கிய தொழில் - முத்துக்குளித்தல்
  - ✓ இதர துறைமுகங்கள் - விளினம், சாலியூர்.

### 5.1.2 சேர நாடு:-

- இக்கால கேரளமும் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்ட முழுவதும் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியும் கொண்ட நிலப்பரப்பே அக்காலச் சேர நாடாகும்.
- இந்நாடு 12 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது.
  - ✓ இது வடக்கில் - பழனிமலைகளாலும்
  - ✓ கிழக்கில் - திருச்செங்கோடாலும்
- மேற்கில் தெற்கிலும் கடலாலும் சூழப்பட்டிருந்தன. இந்நாட்டின் தலைநகர் பேரியாற்றின் கரையிலுள்ள திருவஞ்சைக்களம் (எ) வஞ்சி. இந்நகரம் வலுவான கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டது.

**தலைநகரில் அமைந்துள்ள முக்கிய கட்டிடங்கள்**

- ✓ ஒரு விஷ்ணு கோயில், ஒரு புத்த விஹாரகரம், ஒரு (நிகரத்த) சமண மடாலயம்.

பேரியாற்றின் முகத்துவாரத்திற்கருகில் **முசிறி** எனப்படும் துறைமுகம் இருந்தது. மேற்கு கரையில் அமைந்திருந்த துறைமுகம் **தொண்டி** ஆகும்.

**5.1.3 சோழ நாடு**

- பன்றி நாட்டுக்கப்பால் புனல்நாடு என அழைக்கப்படும் சோழ நாடு அமைந்திருந்தது. புனல் நாடு என்னும் சொல் நீரினைக் குறிக்கும். இது கோடிக்கரைக்குக் கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும், வெள்ளாற்றிக்கு வடக்கிலும் அமைந்திருந்தது.
- சோழர் தலைநகர் - உறையூர் ஆகும். இது காவிரியின் தென் கரையில் அமைந்திருந்தது. காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த புகார் (காவிரி பூம்பட்டினம்) சிறந்த ஏற்றுமதி வணிக தளமாகும். புகார், மருவூர்ப்பாக்கம், பட்டிணப்பாக்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தலைநகரில் பல பெரிய கட்டிடங்கள் காணப்பட்டன.

**தொண்டை மண்டலம்:-**

- பவள மலைக்கு கிழக்கிலும், வேங்கடமலைக்குத் தெற்கிலும் உவரிக்கு மேற்கிலும் அமைந்திருந்த நிலப்பரப்பு தொண்டை நாடாகும்.
- இதன் தலைநகர் - காஞ்சிபுரம். இது திரையர்களால் ஆளப்பட்டது. பின்னர் பல்லவர்கள் இப்பகுதியை கைப்பற்றினர். படிப்படியாகச் சோழ நாடு முழுவதிலும் தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

**கொங்கு நாடு:-**

- ✓ வடக்கில் - தலைமலையாலும்
- ✓ தெற்கில் - வைகாபூர் (அ) பழனிமலையாலும்
- ✓ மேற்கில் - வெள்ளியங்கிரியாலும்

- சூழப்பட்டுள்ள நிலப்பரப்பே கொங்குநாடு ஆகும். இந்நாடு இக்காலக் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும், சேலம் மாவட்டத்தின் தென்பகுதியும் கொண்டதாக இருந்தது.
- வேளிர் எனப்படும் சிற்றரசர்கள் 7 பேரும்ட தனக்கென ராஜ்ஜியங்களை தனித்தனியாக கொண்டிருந்தன.

   1) பறம்பு நாடு, 2. தகடூர், 3. கோவிலூர், 4. ஆயக்குடி, 5. நாஞ்சில் நாடு, 6. மோகூர், 7. குதிரை மலை, 8. செங்கண்மா, 9. மிழமை என்பன குறிப்பிடத்தக்க வேளிர் தவிர்த்த வேறு சில சிற்றரசுகள் ஆகும்.

- காலத்தால் மூத்த தமிழ் நூலாம், தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகளை நிலவியல் அடிப்படையில் 4 வகை நிலங்களாகப் பிரித்தனர். பூமியை நானிலம் எனவும் கூறுவர்.

1) குறிஞ்சி - மலையும் மலைச் சார்ந்த இடமும்.
2) முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்.
3) மருதம் - நிலமும் நிலம் சார்ந்த இடமும்.
4) நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்.
5) பாலை - நீர் வறண்ட முப்புதர்கள் நிறைந்த மணற் பகுதியாகும்.

### 5.1.4 இட விவரம் (Topography)

- அரபிக்கடலுக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டிருக்கும் இத்தீபகற்ப நாடு தென்புறம் குறுகி, கன்னியாகுமரி முனையில் முடிகின்றது.
- குமரி முனையிலிருந்து மேற்றிசையில் வடக்க நோக்கிச் செல்கின்ற மலையாளக் கடற்கரை மற்றும் கொங்கணக் கடற்கரையும் கீழ்த்திசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற சோழமண்டலக் கடற்கரையும் தமிழகத்தின் விளிம்புகளாக அணி செய்கின்றன. இதன் இரு கரைகளிலும் துறைமுகங்கள் அழகு சேர்த்தன. இவை ஆழமானவை சீனாவையும் மத்திய தரைக்கடல் நாடுகளையும் சேர்க்கும் கடல் வழியில் ஏறத்தாழ நடுநாயகமாக அமைந்துள்ள தமிழகத்தின் அமைவிடம் அது. அது கிழக்கு, மேற்கு நாடுகளுடன் விறுவிறுப்பான கடல் வாணிபத்தில் ஈடுபடப் பெரிதும் துணையாக இருந்தது.
  - ✓ கிழக்கு கடற்கரையில் - காவிரிப் பூம்பட்டிணம், கொற்கை .
  - ✓ மேற்குக் கடற்கரையில் - தொண்டி, முசிறி
- அக்காலத்து நாட்டுக் கப்பல்கள் மட்டுமே வந்து தங்குவதற்கு ஏற்றவையாக அவை இருந்தன.

### 5.1.5. மேற்கு கிழக்கு மலைத் தொடர்கள்:-

- கிழக்கு, மேற்கு மலைத் தொடர்கள் தீபகற்பத் தமிழகத்தில் முறையே கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுக்கு இணையாகச் செல்லுகின்றன. காசர்கோட்டில் தொடங்கி, ஆரம்பொழியில் முடிவுறும் மேற்கு மலைத் தொடர்கள் தமிழகத்தின் இயற்கை அரணாக பிரம்மாண்டமான கடல் தடுப்புச் சுவராக அமைந்துள்ளது.
- நெடிதுயர்ந்த, கரடுமுரடான மலைத் தொகுப்பான வடக்கில் கடல்மட்டத்திலிருந்து 2000 அடி வரை உயர்ந்துள்ளன. கொங்கு நாட்டு நீலகிரியில் இருமலைத்தொடர்களும் சந்திக்கின்றன. நீலகிரி மலைகளின் ஆண்டு மழைப்பொழிவு அதிகம். இது பல்வகைத் தாவரங்களுக்கும் வனப்புமிகு இயற்கைக் காட்சிகளுக்கும் பெயர் பெற்ற தலமாகும். இவ்விரு மலைத் தொடர்களுக்கும் இடையில், தொண்மைமிகு நாகரீகத் தொட்டில்களான பரந்த தாழ் நிலங்கள் அமைந்துள்ளன.

- மேற்கு மலைத் தொடரில் பல கணவாய்கள் அமைந்துள்ளன. 24 மைல் அகலமுள்ள பாலக்காட்டு கணவாய் மிக அகன்ற ஒன்று இக்கணவாய் கன்னடத்திற்கும், மலபாருக்குமான நெருங்கிய தொடர்பிற்கு வழிவகுத்து.
- கொச்சி, கள்ளிக்கோட்டை போன்ற மேற்குக்கரை நகரங்களிலிருந்து கன்னடத்திற்கும் இதர உள்நாட்டு நகரங்களுக்குமான எளிதான பாதையாகி வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. பாலக்காட்டுக் கணவாய் இவ்வாறு சற்று ஆபத்து நிறைந்த பாதையாக இருந்ததால், கேரளத்திற்கும், கிழக்கிலுள்ள அண்மை நாடுகளுக்குமான சிறந்த தொடர்பு வழியாகச் செங்கோட்டை, ஆரல்மொழிகணவாய்கள் பயன்படுத்தப்பட்டன.
- ஆரல்மொழி, செங்கோட்டை கணவாய்களின் மூலம் ஏற்பட்ட படையெடுப்புகளும் நுழைவுகளும் கணக்கிலடங்காதவையாகும். ஆரல்மொழி கேரளத்தின் **"போர்க்களமாகச்"** செயல்பட்டது என்றே கூறலாம்.
- இம்மலைத் தொடரின் தென்புலத்தில் காணப்படும் மலைகளில் பழனி கொடைக்கானல், சேர்வாரயன், பொதிகை, ஆணை மலைகள் குறிப்பிடத்தக்கவை. ஆணை மலையிலுள்ள சில சிகரங்கள் சுமார் **8000 அடி** வரை உயர்ந்துள்ளன.
- அடர்ந்த காடுகளில் காணப்படும் தாவரங்களில் விலை மதிப்புள்ள தேக்கு, சந்தனம், மூங்கில் முதலியவை குறிப்பிடத்தக்கவை. அன்றியும் காப்பி, தேயிலை, ஏலம், மிளகு போன்ற மலைத் தோட்ட பயிர்களும் இங்கு விளைவிக்கின்றன. காடர், இருளர், புலையர் போன்ற பழங்குடியின மக்களின் உறைவிடங்களாக உள்ளன.
- கிழக்குத் தொடர்ச்சிமலை, மேற்குத்தொடர்ச்சி மலைகளைப் போல நேரானதும், தொடர்ச்சியானதும் அல்ல இவை இடையிலேயே பிளவுபட்டு, சிதறுண்டு காணப்படுகின்றன. அன்றியும் மேற்கு மலைத் தொடரை விடச் சற்றுத் தாழ்வானவை.
- மண்ணியலடிப்படையில் மேற்கு மலைத் தொடரைவிட கிழக்கு மலைத்தொடர் காலத்தால் முந்தியது. ஆனால் விளைபொருட்களிலும் இவ்விரண்டு மலைதொடர்களும் மாறுப்பட்டவை.
- கிழக்கு மலைத்தொடர் பிளவுண்டு சிதறிக் கிடக்கின்ற ஒரு மலைத் தொடர்பு எனலாம். ஒரிஸ்ஸாவில் தொடங்கி, கிழக்குக் கரைக்கு இணையாகச் செல்லும் இம்மலைத் தொடர் சென்னையை அடுத்துத் தென்மேற்காகத் திரும்பித் தக்கானப் பீடபூமியின் தெற்கு விளிம்பாக அமைகிறது.
- பழனிமலை, சேலம் மாவடத்திலுள்ள சேர்வராயன் மலைகள் போன்றவை தனித்து நிற்கும் மலைகள் இவை பிரதான மலைத் தொடரிலிருந்து பிரிந்து செல்கின்றன. தமிழகத்தில் பாயும் ஆறுகளில் பெரும்பாலாவை மேற்கு மலையில் தோன்றி கிழக்கு மலைத் தொடரை ஊடறுத்துக் கொண்டு வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. எனவே இப்பிளவுகள் கிழக்குக்கரைச் சமவெளிக்கும் தக்காணப்பீடபூமிப் பகுதிக்குமான போக்குவரத்தினை எளிதாக்குகின்றன.

- பண்டைய தமிழகம் வடிவில் அமைந்துள்ளது அதன் முனை தெற்குநோக்கி நீண்டிருந்தது. இரு மலைத் தொடர்களும் நீலகிரி மலைவரை தமிழகத்தின் இரு விளிம்புகளையும் இணைப்பதாக அமைந்துள்ளது. பண்டையத் தமிழகத்தில் அரசியல் ஒன்றுமையின்மைக்கு இதுவே தலையாய காரணமாகும். இதுவே சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், திரையர், வேளிர் போன்ற குறுநில மன்னர்களும் தனக்கெனத் தனிநாடுகளை அமைத்துக் கொள்ள வழிவகுத்தது.
- வலிமையும், திறமையும் மிக்க **கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன், முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன்** போன்ற மன்னர்களின் காலத்தில் மட்டுமே தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையைக் காண முடிகிறது.




தென்னிந்தியா : கி.பி. 850–1200

**நதிகள்:-**

- தமிழகம், காவிரி, பாலாறு, வைகை, பெண்ணாறு, வெள்ளாறு, தாமிரபரணி, பரளியாறு, பரதப்புழா, பெரியாறு போன்ற ஆறுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. பெரியாறு, பரதப்புழா ஆகிய இரண்டு ஆறுகள் தவிர்த்த எனைய இவ்வாறுகள் மேற்க மலைத் தொடரில் உற்பத்தியாகி தமிழக நிலப்பரப்பில் பாய்ந்து வங்க விரிகுடாவில் கலப்பவை பெரியாறும், பரதப்புழாவும் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி கேரள மாநிலத்தில் பாய்ந்து அரபிக் கடலில் கலப்பவை.

- தென் கங்கை என அழைக்கப்படும் காவிரியை இளங்கோவடிகளும் இன்னபிற புலவர்களும் போற்றுகின்றனர். 760 கி.மீ நீளமுள்ள காவிரி ஆறு குடகு மலையில் உற்பத்தியாகிறது. புதுமணப் பெண்ணாய் ஆரவாரமின்றி கன்னட மாநிலத்தில் பாய்ந்து நுரை தங்கும் பலனருவியாய்த் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கின்றது. இடையில் கன்னட மாநிலத்துப் புனித்தலங்களான ஹீரங்கப்ட்டினம், சிவசமுத்திரம் ஆகியவற்றைத் தொடுகிறது. துமிழகத்திலும் திருச்சிராபள்ளிக்க மேற்கில் 15 கி.மீ தொலைவில் காவிரி, கொள்ளிடம் என இரு பிரிவகளாகப் பிரிந்து. ஒரு அரங்கத்தைத் தோன்றுவித்து அங்கு அரங்கநாதனைக் கிடந்த நிலையில் காட்சியளிக்கச் செய்கிறது.

- பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் கரிகாற்சோழன் காவிரிக்கு கரை எழுப்பி அதன் வெள்ளச் சேதம் மிகுதியும் குறைக்கப்பட்டது.

- அன்றியும் அவன் காவிரிக்குக் குறுக்கே எழுப்பிய கல்லணை, காவிரியின் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்திப் பாசன வசதிக்கு வகை செய்தது. இவ்வாற்றுப் பெருக்கால் வாயும் பெறும் சோழ நாட்டைப் புலவர்கள் “சோணாடு சோறுடைத்து” எனவும், **தஞ்சை** மாவட்டத்தைத் தமிழகத்தின் **நெற்களஞ்சியம்** எனவும் அழைப்பர்.

- மைசூர் மாநிலத்தில் **நந்திதுர்க்கத்தில்** பாலாறு உற்பத்தியாகிறது. இது வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களின் வழியே பாய்ந்து வங்க விரிகுடாவில் கலக்கிறது இவற்றின் கரையில் அமைந்துள்ள முக்கிய நகரங்கள், **வாணியம் பாடி**, வேலூர், ஆற்காடு, செங்கல்பட்டு, வாலாஜாபாத் ஆகியவை ஆகும்.

- **பெண்ணாறு** கன்னட மாநிலத்திலுள்ள சென்ரையான் பேட்டையில் உற்பத்தியாகிறது. இது பெங்களூர், சேலம் ஆகிய நகரங்களையொட்டிப் பாய்கிறது. கடலூருக்கு வடக்கே கடலோடு கலக்கிறது.

- வைகையாறு, பழனிமலைகளில் உற்பத்தியாகிறது, மதுரை நகரின் வழியே பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இதன் குறுக்கே கட்டப்பட்டுள்ள வைகை அணை, மதுரை - இராமநாதபுரம் மாவட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

- **மெகஸ்தனீஸின் இண்டிகா** என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கில் அமைந்துள்ள அடர்ந்த காடுகள் சார்ந்த பொதிகை மலையில் உற்பத்தியாகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தின் வழியே பாய்கிறது. இது வங்காள விரிகுடாவில் கலக்கிறது. இங்குதான் முத்துக் குளித்தலுக்குப் புகழ்பெற்ற கொற்கை துறைமுகம் அமைந்திருந்தது.
- கேரள மாநிலத்தில் மிக நீளமானது **ஆறு பரதரப்பழா 250 Km** ஆகும். இதன் கரையில் தான் சித்தூார், பாலக்காடு, திருநாவாய், பொன்னானி போன்ற சிறந்த நகரங்கள் எழுந்துள்ளன.
- பெரியாறு (234 K.M) வழிபாட்டிற்குரிய பெண் தெய்வமான கொற்றவை கோயில் கெண்டுள்ளதாக கருதப்படும் ஆயிரை மலையில் தோன்றுகிறது. இது காலடி, ஆலவாய் வழியே பாய்கிறது. இதன் கிளை நதிகளில் ஒன்று, சேர மன்னர்களின் தலைநகராக்க கருதப்படும் கொடுங்கோளுர் வழியே பாய்கிறது. தென் திருவாங்கூரில் பாயும் பல ஆறுகளுள் புறளியாறு என்றழைக்கப்படும் பறுளியாறு குறிப்பிடத்தக்க ஒன்று இது மகேந்திரகிரியில் தோன்றி, நாஞ்சில் நாட்டின் வழியே பாய்ந்து, மணக்குடி முகத்துவாரத்தில் கடலோடு கலக்கின்றது. இதன் குறுக்கே பாண்டியன் அணை கட்டப்படுள்ளது.
- தகடூரை ஆண்ட அதியமான நெடுமான் அஞ்சியின் முன்னோர்களுள் ஒருவரே தமிழகத்தில் முதன்முதலில் **கரும்பு** விளைவித்தார் என்ற கருத்து ஔவையாரின் 4 புறநானூற்றுப் பாடல் ஒன்றினால் அறியக் கிடைக்கிறது.
- காவிரி, வைகை, பாலாறு, பெரியாறு போன்ற ஆற்றங்கரைகளில் தான் தமிழகத்தில் தோன்றிய பேரரசுகளில் பல தம் தலைநகர்களைக் கொண்டு விளங்கின.

**மண் வளமும் கனிச் செல்வமும்:-**

- வளமிக்க வண்டல் மண்ணை ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலும், பருத்திப் பயிருக்கேற்ற கரிசல் மண்ணைச் சமவெளி நிலங்களிலும், இறுக்கமான செம்மணணை மத்தியப் பகுதிகளிலும் காணமுடிகிறது.
- கரிசல் மண் வளம் குன்றியது. எனவே பருத்தி இதர புன்செய் தானிய பயறு வகை விவசாயங்கள் இம்மண் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.
- கேரளா, சேலம் மாவட்டத்தில் மின் சக்தியும், நீர்வளமும் சற்று அதிகமாக கிடைக்கிறது சேலத்தில் இருமபுக்கனிமமும், மோனசைட், குரோமைட், குவார்ட்டஸ், பாக்சைட், சுண்ணாம்புகல், டாலமைட் போன்ற கனிமப் பொருட்களும் கிடைக்கின்றன.
- திருச்சிராப்பள்ளியில் ஜிப்சமும், இரும்பு கனிமங்களும் கிடைக்கின்றது.
- பாண்டிசேரி, விருத்தாச்சலம் பகுதிகளின் நீர் வறண்ட பொறுக்குப் பாறைப் பிரதேசங்களில் **லிக்னைட்** என்னும் பழுப்பு நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறது.

- சோடியம், நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருள்கள் பெறுவதற்குத் தேவையான கனிமவளம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரை மணற்பரப்பில் மிகுதியாகக் காணப்படுகிறது. பல்லாவரம், தென் ஆற்காடு, திருநெல்வேலி, நாஞ்சில் நாடு போன்ற இடங்களில் பாறைகளில் சிறபங்களை செதுக்கும் கோயில் கலை செழித்திருந்தது.
- சத்திய வீடு, நாகலாபுரம், காஞ்சிபுரம் இவற்றிற்கருகில் கிடைக்கும் மணற்கற்கள் (Sand Stone) கட்டிடங்கள் கட்டவும், கவினுறு வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகின்றன.
- சங்ககிரி-துர்க்கம் மலை பகுதிகளிலும், திருநெல்வேலிக்கருகில் தாழையூத்திலும் கிடைக்கும் வெள்ளைச் சுண்ணாம்புக்கற்கள் சிமெண்ட் உற்பத்திக்கும் சலவைத்தூள் (Bleaching Powder) தயாரிக்கவும் உதவகின்றன.

**மழைப் பொழிவு, நீர்ப்பாசனம் (ம) வேளாண்மை:**

- கேரளா முழுவதிலும் தென்மேற்கு காற்றினால் நல்ல மழையைப் பெறுகின்றன (ஜீன் முதல் அக்டோபர் வரை) ஆனால் தமிழகம் முழுவதற்கும் நல்ல மழை தருவது வடகிழக்குப் பருவக் காற்றேயாகும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) மழைப் பொழிவே நீர் பெறுவதற்கான அடிப்படை ஏதுவாகும்.
- தொல்காப்பியங்காலத்தில் மழைப்பொழிவு அடிப்படையில் தமிழகம் நான்கு பெரும் நிலப்பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தன. ஆனால் **இளங்கோவடிகள்** காலத்தில் இந்நால்வகை நிலங்களுடன் “பாலை” எனப்படும் ஐந்தாவது வகை நிலத்தையும் தமிழர் சேர்த்தனர்.
- தமிழகத்திலிருந்து மெசபடோமியாவிற்கு அரிசியும், ரோமபுரிக்கு முத்துக்களும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு மரமும், தென்னை நார்க்கயிறும் அனுப்பட்டன.

**5.1.6. தட்பவெப்ப நிலையும், பருவக் காற்றுகளும்:-**

- பூமி உருண்டையில் நிலநடுக் கோட்டிற்குச் சற்று வடக்காக அமைந்துள்ளமையால் தமிழகம் முழுவதும் வெப்ப மண்டலத்திலேயே அடங்குகிறது கன்னியாகுமரி 80 டிகிரி வட அட்ச ரேகையில் அமைந்துள்ளது. எனவே நாம் ஆண்டில் பல மாதங்கள் அதிக வெப்பத்தைப் பெறுகிறோம்.
- தமிழகம் மேலைநாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்ததற்கு சான்று பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள **அரிக்கமேடு** பகுதியில் கிடைத்த நாணயங்கள் சான்றாக திகழ்கின்றது.
- கிரேக்க, உரோமானிய எகிப்திய ஆசிரியர்களால் காவிரிப் பூம்பட்டிணம், கொற்கை, தொண்டி ஆகிய இடங்களில் நடைபெற்றுவந்த கடல் வாணிகத்தின் சிறப்பு பாராட்டி எழுதப் பட்டுள்ளது.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

**கலைச் சொற்கள்**

1. கணவாய் - மலைகளுக்கு இடையிலான பாதை
2. வடுகர் - வேங்கடம் பகுதியில் வாழ்ந்த மக்கள்
3. புலையர்கள் - மலைசாதி மக்கள்
4. மெகஸ்தனீஸ் - இண்டிகாவின் ஆசிரியர்.

**5.1.7 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (ம) தொடக்க காலம்**

- இந்தியத் தொல் பொருளியில் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், (ம) தமிழ்நாடு தொல்பொருள் துறை ஆகியோர் நடத்திய அகழ்வாய்வுகளிலிருந்து வரலாற்றுக்கு முற்பட்டகாலம் தொடக்க கால வரலாற்று நாகரீகங்கள் ஆகியவற்றறைப் பற்றி எண்ணற்ற செய்திகளை கொடுத்துள்ளனர்.
- உலகில் மனிதன் எவ்வாறு தோன்றினான் அவன் எவ்வாறு இயற்கையை வென்றான் என்பது பற்றிய படிப்பானது ஆர்வமுடைய ஒன்றாகும். சூரியனிலிருந்து சிதறி விழுந்த ஒரு பெரிய அனல் பிழம்பு திவலையே இந்த உலகம், பூமி குளிர்ச்சி அடைவதற்கு முன்பிருந்த காலம் **"Ice Age"** என்று கூறப்படுகிறது. அதே போல் சிதறி விழுந்த சிறுச்சிறு திவலைகளே மற்ற இதர கிரகங்கள்.
- பூமியில் முதலில் மிருதுவான (JELLY) பொருள்கள் தோன்றின. அதன்பின் ஒரு செல் உயிரினங்கள் தோன்றின.

**சங்க காலத்திற்கு முற்பட்ட காலம், தொடக்க காலம்:-**

- ஆதிமனிதன் தான் அன்றாடம் பயன்படுத்தி வந்த சில கருவிகளையும் அவற்றால் ஆக்கப்பெற்ற சில பொருள்களையும் எச்சங்களாக (Relics) விட்டுச் சென்றுள்ளான். இவ்வெச்சங்களைக் கொண்டே அக்கால மனிதர்களின் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளை நாம் அறிய முடியும்.
- **வரலாற்று முன்** காலத்தை பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதுக்கற்காலம், தாமிரக்கற்காலம் ஆதி உலோகக் காலம் எனப் பிரிக்கலாம். சென்னை நகரைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் பண்டைக்காலத் தமிழன் ஒருவகைக் கற்கோடரியை உபயோகித்து வந்தான். அத்தகைய கற்கருவிகளையாக்கிக் கொள்ளும் திறன் **மதராஸ் கைத்தொழில்** என்று தொல் பொருளியலாரால் அறியப்படும். இது வடமேற்கு இந்தியாவிலுள்ள ஸோஹன் பள்ளத்தாக்குக் கைத்தொழிலைப் போன்றது.
- பழங்கற்காலத்தை அடுத்து மனிதன் சிறு சிறு கற்களை ஆயுதமாக ஆக்கிக் கொண்ட காலம் ஒன்றிருந்தது. அதனைச் சிறுகற்காலம் என்பர் இதனைப் பின் கற்காலம் என்றும் கூறுவர். இக்காலம் கி.மு.6000க்கு முற்பட்டது எனலாம்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

**(i) பெருங்கற்காலம்:**

- இறந்தோரை தாழிகளில் வைத்து பெருங்கற்களால் அடக்கம் செய்தனர். மிகப் பண்டைய பெருங்கற்கள் **திருநெல்வேலி** மாவட்டத்தில் கிடைக்கின்றன. ஆயினும் செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைத்துள்ளது. இத்தகைய "பெருங்கல் சவ அடக்க முறை" உலகில் பல இடங்களில் காணப்படுகின்றது.
- அதே காலத்தில் இரும்புக் கருவிகளும் கருஞ்செம்பானைகளும் (Black and Red ware) பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் தான் நெல் சாகுபடி தென் இந்தியாவில் தொடங்கிற்று என்பது அறிஞர் **நீலகண்ட சாஸ்திரியின்** கருத்து. தென்மேற்கு ஆசியாவில் பரவியிருந்த ஒருவகைப் பெருங்கற் கலாச்சாரத்தோடு தொடர்புடையது என்று கூறப்படுகிறது. ஆயினும் தென் இந்தியப் பெருங்கற்கலாச்சாரம் கி.மு.300க்கும் கி.பி.100க்கும் முற்படாதது என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். மேலும் வட இந்தியாவில் கங்கை பகுதியிலும் (ம) சில இடங்களில் பெருங்கற்கலாச்சாரம் இருந்தது என்றும், இத கி.மு.1000 ஆண்டளவில் இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. மேற்கிலிருந்து கடல் கடந்தும், நில வழியாகவும் தமிழ்நாட்டுக்கு பெருங்கற்கலாச்சாரத்தை கொண்டு வந்தனர்.
- அடுத்தபடியாக வரலாற்று முன் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டது திருநெல்வேலிக்கருகிலுள்ள ஆதிச்சநல்லூர் என்னுமிடத்தில் அங்கு காணப்படும் எச்சங்களில் பல முதுமக்கள் தாழிகள் கிடைக்கின்றன. ஆதிச்சநல்லூரிலும் பெருங்கற்கள் காணப்பெறும் இடங்களிலும் இரும்பு கருவிகளும், கருஞ்செம்பானைகளும் கூடவே காணப்பெறுதலின் அவற்றிற்கிடையே தொடர்பு இருத்தல் வேண்டும் என்பது தெளிவு சில வெண்கலப் பொருள்களும் பொன்னாலான தலை அணிகளும், வாய் முகப்புகளம், திரிசூலங்களும், வேல்களும் ஆதிச்சநல்லூரில் காணப்பெறுகின்றன. இத்தகைய திரிசூலங்களும் வாய்முகப்புகளும் பாலஸ்தினத்திலும் சிரியாவிலும் அங்ஙனமே காணப்படும் (கி.மு.1200) சில பொருள்களைப் போலவே இருக்கின்றது.
- இங்கு கிடைத்துள்ள **வேலும், சேவலும்,** முருகன் வழிபாடு இங்கு இருந்ததை தெரிவிக்கின்றது.
- வெண்கலக் கொள்கலங்களில் அரிசியின் எச்சங்கள் கிடைப்பதால் ஆதிச்சநல்லூரில் நெற்சாகுபடி செய்தற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
- கற்கால மண்டை ஓடுகளும், எலும்பு கூடுகளை கொண்டும் அந்த மக்கள் எந்த இனத்தைசார்ந்தவர்கள் என்பதை அறியமுடியும் பிரம்ம கிரியில் இத்தகைய எச்சங்கள் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் எவ்விடத்திலும் பழைய மண்டையோடுகளோ எலும்புக்கூடுகளோ கிடைக்காததால் அக்காலத்துத் தமிழரின் இனம் இத்தன்மையது என்று கூற இயலாது இது ஆதிச்ச நல்லூர்க்கும் பொருந்தும்.
- விந்தியத்திற்கும் தண்டகாரண்யத்திற்கும் தென் பால் உள்ள பிரதேசங்களைப் பற்றி வடமொழி இலக்கியங்களான பாணினியும் அவருக்கு முந்தையோரும் அறிந்திலர்.

# MULTIPULE QUESTIONS

1. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தியுள்ளவற்றை தேர்ந்தெடுக்கவும்.

)A) டொமிங்கோ பயஸ் - ஸ்பானிய ஜெனரல்

)B) இபின் பதூதா - அரபு நாட்டுப் பயணி

)C) நிகிடின் - இத்தாலியப் பயணி

)D) அப்துல் ரசாக் - போர்த்துகீசியப் பயணி

2. வடக்கு கர்நாடகப் பகுதியில் ............... தனது நாட்டை சுதந்திர அரசாக அறிவித்துக் கொண்டார்.

)A) முகமது கவான் )B) ஜாபர்கான்

)C) முதலாம் முகமது )D) மூன்றாம் முகமது

3. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழ வம்சத்தை மீட்டெடுத்தவர்

)A) முதலாம் இராஜேந்திரன் )B) குலோத்துங்கன்

)C) விஜயபாலன் )D) சுந்தரச் சோழன்

4. ராஜராஜேஸ்வரம் என்ற கோவிலை கட்டியவர்

)A) முதலாம் இராஜராஜன் )B) முதலாம் இராஜேந்திரன்

)C) முதலாம் குலோத்துங்கன் )D) அதிராஜேந்திரன்

5. சோழப் பேரரசு தென்னிந்தியாவில் ஒரு வலுவான சக்தியாக விளங்கியது

)A) முதலாம் இராஜராஜன் )B) முதலாம் குலோத்துங்கன்

)C) முதலாம் இராஜேந்திரன் )D) எவருமில்லை

6. ஸ்ரீவிஜயம் என்று அழைக்கப்படும் பகுதி

)A) சுமத்ரா )B) ஜாவா )C) இலங்கை )D) கம்போடியா

7. 1279 -ல் மூன்றாம் இராஜேந்திரனை தோற்கடித்த பாண்டிய மன்னன்

)A) முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன்

)B) முதலாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன்

)C) மாறவர்மன் அரிகேசரி

)D) எவருமில்லை

8. சோழர்கால நிர்வாக அமைப்பை வரிசைப்படுத்துக.

)A) பேரரசு – மண்டலம் – கூற்றம் - நாடு

)B) பேரரசு – மண்டலம் – நாடு - கூற்றம்

)C) கூற்றம் – நாடு – மண்டலம் – பேரரசு

)D) பேரரசு – நாடு – மண்டலம் – கூற்றம்

9. சரியான கூற்றைத் தேர்வு செய்க.

(1) கம்பராமாயணமும், பெரிய புராணமும் சோழர் காலத்தில் இயற்றப்பட்டது

(2) அஞ்சு வண்ணத்தார் – மணிகிராமத்தார் எனப்படும் வணிகக்குழு அமைப்புகள்

(3) மணிகிராமத்தார் அமைப்பு உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்டனர்

(4) இரு அமைப்புகளும் கர்நாடக மாநிலம் “ஐகோலில் இருந்த தலைமை அமைப்பின் கீழ் இயங்கின

)A) 1 மற்றும் 2 சரி )B) 1, 2 மற்றும் 4 சரி

)C) 1 மற்றும் 4 தவறு )D) அனைத்தும் சரி

10. அரிகேசரி மாறவர்மனை சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியவர்

)A) அப்பர் )B) திருஞானசம்பந்தர்

)C) சுந்தரர் )D) மாணிக்கவாசகர்

11. வேள்விக்குடி செப்பேடுகளின் கொடையாளி என அழைக்கப்படுபவர்

)A) முதலாம் வரகுணன் )B) அரிகேசரி மாறவர்மன்

)C) இரண்டாம் வரகுணன் )D) கடுங்கோன்

12. முதலாம் பராந்தகனிடம் தோல்வியடைந்த பாண்டிய அரசன்

)A) முதலாம் இராஜசிம்மன் )B) இரண்டாம் இராஜசிம்மன்

)C) முதலாம் வரகுணன் )D) அரிகேசரி மாறவர்மன்

13. காயல் துறைமுகம் அரேபிய, சீனக் கப்பல்களால் நிரம்பி இருந்தது எனக் கூறியவர்

)A) நிகிடின் )B) நூனிஸ்

)C) மார்க்கோபோலோ )D) இபின் பதூதா

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


# TEACHER'S CARE ACADEMY

38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359


# UG TRB HISTORY 2022-2023



## UNIT – 6

## History of Tamil Nadu from 1565 A.D. to 2000 A.D.

*Your Success is Our Goal....*

www.Padasalai.net



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# TEACHER'S CARE ACADEMY
## KANCHIPURAM

## வரலாறு

## UNIT - 6

### தமிழ்நாட்டின் வரலாறு கி.பி 1565 முதல் கி.பி 2000 வரை



## COMPETITIVE EXAM
## For
## UG TRB - 2022-23

2022UGHIS00013HZX

www.Padasalai.Net

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**
**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**
**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: 266-C - Advaitha Ashram Road, Opp to New Bus Stand,Salem - 4.**
**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

# UG TRB - 2022 - 2023

# HISTORY - UNIT - 6

## தமிழ்நாட்டின் வரலாறு கி.பி 1565 முதல் கி.பி 2000 வரை


| வ.எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 6. | தமிழ்நாட்டின் வரலாறு கி.பி 1565 முதல் கி.பி 2000 வரை<br>6.1. நாயக்கர் காலத் தமிழகம் | 1 |
| 6.2 | ராமநாட்டின் சேதுபதிகள் | 11 |
| 6.3. | ஐரோப்பியர் வருகை<br>6.3.1. போர்ச்சுகீசியர்கள் (1498)<br>6.3.2. டச்சுக்காரர்கள் (1602)<br>6.3.3. ஆங்கிலேயர்கள் (1600) | 16 |
| 6.4. | ஆங்கிலேய - பிரெஞ்சுபோர் | 20 |
| 6.5. | கர்நாடகப் போர்கள் (1746 - 1763)<br>6.5.1. முதல் கர்நாடகப் போர் 1746 - 48<br>6.5.2. இரண்டாம் கர்நாடகப்போர் 1748 - 1754<br>6.5.3. மூன்றாம் கர்நாடகப் போர் 1758 - 1763 | 21 |

| | | |
|---|---|---|
| 6.6. | **பாளையக்கார கிளர்ச்சி** | 25 |
| 6.7. | **பூலித்தேவர் (1715 - 1767)** | 26 |
| 6.8. | **வீரபாண்டிய கட்டபொம்மன் (1760 - 1799)** | 27 |
| 6.9 | **1801 - திருச்சிராப்பள்ளி பிரகடனம்** | 34 |
| 6.10. | **வேலூர் கலகம் - 1806** | 35 |
| 6.11 | **தமிழ்நாட்டு பிரிட்டிஷ் நில வருவாய் நிர்வாகம்** | 41 |
| 6.12 | **சுதந்திர போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு**<br>6.12.1. வ.உ. சிதம்பரம்பிள்ளை (1872 - 1936)<br>6.12.2 சுப்பிரமணிய பாரதியார் (1882 – 1921)<br>6.12.3. சுப்ரமணிய சிவா (1884 - 1925)<br>6.12.4. திருப்பூர் குமரன் (1904 - 1932)<br>6.12.5. சி. ராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி) (1875 - 1972)<br>6.12.6. கே. காமராஜர் (1903 - 1975)<br>6.12.7 அன்னிபெசன்ட் அம்மையாரும் தன்னாட்சி இயக்கமும் | 47 |
| 6.13 | **தமிழ் நாட்டின் சமூக சமய சீர்திருத்த இயக்கம்**<br>6.13.1 தந்தை பெரியார் (1879 - 1973)<br>6.13.2. சுயமரியாதை இயக்கம் (1925)<br>6.13.3. நீதிக்கட்சி (Justice Party) (1917)<br>6.13.4 விதவை மறுமணம் (1856)<br>6.13.5 சாரதா சட்டம் (1929) | 63 |


TEACHERS ACADEMY Padasalai.Net

| | | |
|---|---|---|
| | 6.13.6. தேவதாசி முறையை ஒழித்தல் | |
| **6.14** | **இந்தி எதிர்ப்பு**<br><br>6.14.1. முதல் இந்தி எதிர்ப்பு மாநாடு<br><br>6.14.2. இந்தி எதிர்ப்பு வாரியம் (The Anti Hindi Command)<br><br>6.14.3. விடுதலைக்குப்பின் – இந்தித் திணிப்பு<br><br>6.14.4. உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடம்<br><br>6.14.5. குடியரசுத் தலைவரின் அறிவிப்பு<br><br>6.14.6. ஆட்சிமொழித் திருத்தச் சட்டம்<br><br>6.14.7. ஆட்சிமொழிச் சட்டத்தில் இந்தியின் இடம்<br><br>6.14.8. இந்தியைப் பரப்ப ஆய்வுக் குழு<br><br>6.14.9. மும் மொழித் திட்டம் | 92 |
| **6.15** | **காங்கிரஸ் ஆட்சியில் தமிழகத்தின் பங்கு (1937 -39)**<br><br>6.15.1. தி.மு.க<br><br>6.15.2. அ.இ.அ.தி.மு.க | 111 |
| **6.16** | **முக்கியத் தகவல்கள்:** | 127 |
| | வினாக்கள் (100) | 174 |

# PG TRB HISTORY PREVIOUS YEAR QUESTION

1. திருச்சி பிரகடனத்தை வெளியிட்டவர் ________

(A) மருது பாண்டியன் (B) கோபால நாயக்கன்

(C) கேரள வர்மா (D) நானா சாகிப்

2. மதுரையில் திருமலை நாயக்கர் மகாலைக் கட்டியவர் யார்?

(A) முத்து வீரப்ப நாயக்கர் (B) திருமலை நாயக்கர்

(C) சொக்கநாத நாயக்கர் (D) கிருஷ்ணப்ப நாயக்கர்

3. மதுரைக் காந்தி என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) ராஜன் (B) சுப்பாராமன்

(C) நடேசன் (D) தியாகராஜர்

4. “வைக்கம் வீரர்” என்ற பட்டத்தை ஈ.வெ.ரா - விற்கு யார் கொடுத்தார்?

(A) இராஜாஜி (B) பனகல் அரசர்

(C) காமராஜர் (D) கல்யாணசுந்தர முதலியார்

5. ஊமைத்துரையின் உண்மையான பெயர்

(A) துரைசிங்கம் (B) சுப்பையா

(C) குமாரசாமி (D) வெள்ளையத் தேவன்

6. ‘சுதந்திர சங்கு” என்ற செய்தித்தாளை ஆரம்பித்தவர் யார்?

(A) இராஜாஜி (B) பெரியார்

(C) சுப்பிரமணியம் (D) அண்ணாதுரை

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# 6. தமிழ்நாட்டின் வரலாறு கி.பி 1565 முதல் கி.பி 2000 வரை

## நாயக்கர்கள் மற்றும் மராட்டியர்களின் கீழ் தமிழ்நாடு

### 6.1 நாயக்கர் காலத் தமிழகம் (Tamil Nadu during the Nayak period)

**மதுரை நாயக்கர்கள் தோற்றம்**

- விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் தளபதி நாகம நாயக்கரின் மகனான விசுவநாத நாயக்கர் மதுரை மண்டலத்தின் நிர்வாகியாக தேர்வு செய்யப்பட்டார்.
- மதுரையை ஆண்ட **முதல் ஐந்து அரசர்கள்** விஜயநகரத்துக்கு கட்டுபட்டு நிறை செலுத்தி ஆட்சி செய்தனர்.
- 6-வதாக மதுரையை ஆண்ட **முத்து வீரப்ப நாயக்கர்** விஜயநகரத்துக்கு திறை கொடுப்பதை நிறுத்திக் கொண்டார். இவருக்குப் பிறகு வந்த திருமலைநாயக்கரை தொடர்ந்து 6 பேர் அட்சி செய்தனர். இவர்களில் **ராணி மங்கம்மாள்** குறிப்பிடத்தக்கவர்.
- **விசுவநாத நாயக்கர். (1524-64)** - பாளையக்காரர் முறையை உருவாக்கியர். இவை 72 பாளையங்களை உள்ளடக்கியது. இம்முறை கி.பி.1800 வரை நீடித்தது.
- **முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-72)** - விசுவநாதரின் மகனான இவர் பரமக்குடியில் தும்பிச்சி நாயக்கரின் கலகத்தை அடக்கினார்.
- **வீரப்ப நாயக்கர் (1572 - 1595)** – கிருஷ்ணப்பரின் மகனான இவரது ஆட்சியில் அமைதி நிலவியது, சிதம்பரம் 1000 கால் மண்டபத்தை கட்டினார்.
- **இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1595 -1601)** - இவர் விஜயநகர மன்னர் முதலாம் வேங்கடனுக்கு கப்பம் கட்டுவதை நிறுத்தி கொண்டார் என **"ஹிராஸ் பாதிரியார்"** கூறினார்.
- **முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609)** - சேதுபதிகளுடன் போர் செய்தவர், இவருடைய ஆட்சியில்தான் இவர் இறுதியாக விஜயநகரத்திற்கு கப்பம் கட்டினர். இவருடைய மகன்கள் :- 1. முத்து வீரப்பநாயக்கர், 2. திருமலை நாயக்கர்.

- **முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (1609-1623)** – இவர்காலத்தில் மதுரை நாயக்கர்களுக்கும் தஞ்சை நாயக்கர்களுக்கும் போர் மூண்டதால் தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார்.



## திருமலை நாயக்கர் (1623-59)

- **பிறப்பு** – 1584
- **இயற்பெயர்** - திருமலை சவுரி ஜயுலுகாரு
- **தந்தை** - முதலாம் முத்து கிருஷ்ணப்பர் (1601-09)
- **அண்ணன்** – முதலாம் முத்து வீரப்பர் (1609-23)
- **1623 - 1634** வரை திருச்சியை தலைநகராகவும், அதன் பிறகு மதுரையை தலைநகரமாக மாற்றி ஆட்சி செய்தார்.

## திருமலை நாயக்கரின் ஆட்சிப்பகுதிகள்.

1. திருநெல்வேலி (திருவிதாங்கூரின் தமிழக பகுதிகள் உட்பட), 2. மதுரை, 3. திண்டுக்கல், 4. ராமநாதபுரம், 5. சிவகங்கை, 6. புதுக்கோட்டை, 7. மணப்பாறை, 8. கோயம்புத்தூர், 9. சேலம், 10. திருச்சிராப்பள்ளி

## படையெடுப்புகள்

- திருவிதாங்கூர் மீது படையெடுத்து உன்னி கேரளவர்மனை அடிபணியச் செய்தார். (1634-35)
- ராமநாதபுரம் சேதுபதியை வென்று ரகுநாதரை பதிவியில் அமர்த்தினார்.
- வேலூரை ஆட்சி செய்த 2-ம் வேங்கடனுடன் இணைந்து ஸ்ரீரங்கனையும், முகமதியப்படைகளையும் வென்றார்.
- திருமலை நாயக்கரிடம் தோல்வி கண்ட **ஸ்ரீரங்கன்** மைசூர் அரசர் **சுந்திரவனிடம்** உதவியை நாடி சென்றார். இதனால் சுந்திரவன் மதுரைக்குள் நுழைந்து மதுரை மக்களின் மூக்கை அறுக்கும் கருவியால் மூக்கை அறுத்து மூட்டை மூட்டையாக மைசூருக்கு எடுத்து சென்றான்.
- இந்த இழிவான போக்கை கண்ட திருமலை நாயக்கர் படைகள்1656-ம் ஆண்டு மைசூர்மீது படையெடுத்து அரசரின் மூக்கையே அறுத்தனர் இந்த வீரச்செயலை

செய்த ரகுநாதத் தேவர் இனி கப்பம் செலுத்த தேவையில்லை என்றார் திருமலை நாயக்கர்.

- மைசூர் - மதுரை மூக்கறுப்பு போரின் போது **ராபர்ட்டி நொபிளி** என்ற ரோமன் கத்தோலிக்கர் பாதிரியார் ஒருவர் மதுரையில் தங்கி, துறவி போலவே உடையுடுத்தித் தம்மை **'ரோமாபுரி ஐயர்'** என்று கூறிக்கொண்டார்.
- **நீலகண்ட தீட்சிதர்** என்ற வடமொழியில் பேரறிஞராக விளங்கிய இவரை திருமலை நாயக்கர் ஆதரித்தார்.
- மதுரையை விழாநகரமாகவும், கலைநகரமாகவும் மாற்றியவர் **1636 ல் திருமலை நாயக்கர் மகால்** என அழைக்கப்படும் அரண்மனையைக் கட்டினார். இது தென்னிந்தியாவின் தாஜ்மகால் என்றழைக்கப்படுகிறது.
- புதுமண்டபம் ஒன்றையும் கட்டினார். இதன் பின்னர் இவரால் துவக்கப்பட்ட **ராய கோபுரம்** கட்டிடப்பணி முடிவுபெறாமலே உள்ளது.
- திருமலை நாயக்கர் திருவில்லிபுத்தூர் ஆண்டாளின் தீவிர பக்தன் மதுரையில் இருக்கும் போது ஆண்டாள் கோயிலின் மணியோசையை அறிந்துகொள்ள வழிநெடுக பல மணிமண்டபங்களை அமைத்தார்.
- 1654-ல் திருமலை நாயக்கரின் இறப்பிற்கு பிறகு அவரது மகன் இரண்டாம் முத்து வீரப்ப நாயக்கர் சில நாட்களே ஆட்சி செய்தார்.
- **சொக்கநாயக்கன்** (1659-82) அடுத்த நாயக்கராக பதவியேற்று 1663-ல் நடந்த பீஜப்பூர் படையெடுப்பிலும், 1670-ல் நடந்த ஈரோடு போரிலும் தோல்வி கண்டு கோவை, சேலம் பகுதிகளை மைசூர் மன்னர் வேராஜ் உடையாருக்கு கொடுத்தார்.
- 1665-ல் திருச்சிக்கு தனது தலைநகரை மாற்றினார்.
- 1682-ல் சொக்கநாதரின் இறப்பிற்கு பின் அவரது மகன் **3-ம் முத்து வீரப்பர்** அரசரானார்.
- மகனின் இறப்பிற்கு பின் சொக்கநாதரின் மனைவி இராணி மங்கம்மாள் ஆட்சிக்கு வந்தார்.

## இராணி மங்கம்மாள் – 1689 – 1706

- **தந்தை** – தப்பகுள லிங்கம நாயக்கர் (சொக்கநாதரின் தளபதி)
- **கணவர்** - சொக்க நாத நாயக்கர் – 1659-82
- **மகன்** - மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கர் -1682-89

- **பேரன்** - விஜயரங்க சொக்கநாதர் - 1706-31
- **பேரன் மனைவி** - மீனாட்சி (1731-1739)
- மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் போர்கள் அதிகம் நடைபெறவில்லை, இருப்பினும் தஞ்சை மராத்தியர்கள், முகலாயர்கள், திருவாங்கூர் அரசு பேன்றவர்களால் ஏற்பட்ட சவால்களை சந்தித்தார்.
- ஔரங்க சீப்பின் படை தளபதி தென்னிந்தியா மீது படையெடுப்பின் போது அவருடன் அமைதி உடன்பாடு செய்தார்.
- மங்கம்மாளின் தளவாய் **நரசப்பையா** தலைமையில் திருவிதாங்கூர் மீது படையெடுத்து ரவிவர்மாவை கப்பம் செலுத்த செய்தார்.
- இவரது 18 ஆண்டுகால ஆட்சிக்கு பிறகு பேரன் **விஜயரங்கர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.** வாரிசின்றி இறக்கவே இவரது மனைவி **மீனாட்சி** ஆட்சி பொறப்பேற்றார்.
- **அம்மைநாயக்கனூர்** போரில் தோற்ற ராணி மீனாட்சியை, சந்தா சாகிப்பின் படைவீரர்கள் கைது செய்ததால், அவமானத்தால் தற்காலை செய்துகொண்டார். இவரே கடைசி மதுரை நாயக்க அரசர் ஆவார்.

**நாயக்கர் கால ஆட்சிமுறை**

**அமைச்சர்கள்**

1. தளவாய் – தலைமை அமைச்சர், படைத்தலைவர்
2. பிரதானி – நிதியமைச்சர்
3. இராயசம் – தலைமை அதிகாரி, செயலர்
4. ஸ்தானாதிபதி – வெளியுறவு அமைச்சர்
5. அம்பலக்காரர் - உள்ளூரில் வரி வசூல் செய்தோர்
6. மணியக்காரர் - வெளியூரில் வரி வசூலித்தவர்

- ✓ திருமலை நாயக்கர் காலம் முதல் மதுரையில் சித்திரை திருவிழா தொடங்கப்பட்டது.
- ✓ வண்டியூர் தெப்பக்குளத்தை திருமலை நாயக்கர் வெட்டினார்.

**நாயன்காரர் ஆட்சிமுறை :**

- விஜயநகர மன்னர்கள் மாநிலப் பகுதியில் நாயன்காரர் ஆட்சிமுறையைக் கொண்டு வந்தனர். மன்னர்கள் தங்களின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே

இம்மாநிலங்களுக்குத் தலைவர்களாக நியமித்தார்கள். இந்த நாயக்கர்கள் தங்கள் பகுதியில் வரி வசூலித்து, ஆண்டுதோறும் விஜயநகர அரசிற்கு கப்பம் கட்டி வந்தனர்.

- பாளையப்பட்டு முறை இருந்ததால் ஸ்தல ஆட்சிமுறைக்கு வழி வகுத்தது.

**அமைச்சர்கள்**

**தளவாய்:**

- தலைமை அமைச்சர் பதவியும், படைத்தலைவர் பதவியும் சேர்ந்ததாகும். அரியநாத முதலியார் முதலில் இப்பதவியை வகித்தார்.

**பிரதானி:** நிதியமைச்சர்

**இராயசம்:**

- தலைமை அதிகாரி, செயலர் போன்று விளங்கக்கூடியவர்.
- இம்மூவர் தவிர கணக்கர், ஸ்தானாதிபதி (வெளியுறவு), திருமந்திர ஓலை நாயகம் போன்ற அமைச்சர்களும் இருந்தனர்.

**வரி :**

- கள்ளர், மறவர் பகுதியில் வரிவசூல் செய்தோர் அம்பலக்காரர் என்றும், பிற ஊர்களில் வரிவசூலித்தோர் மணியக்காரர் என்றும் அழைக்கப்பட்டனர். (நிலவரி சரிபாதி ½ பங்கு வசூலிக்கப்பட்டது (இலாபத்தில்). இவர்களுக்கு உதவ கர்ணங்கள் இருந்தனர். இவ்வரியை மாகாண அழகிரியிடம் கொடுப்பார். அவர் கணக்குப்பார்த்து பிரதானியிடம் சேர்ப்பார்.

**படை :**

- பாளையக்காரர்களே நாயக்கர்களுக்குப் படைகொடுத்து உதவினர். என்றாலும் தனியேவும் நாயக்கர் படை வைத்திருந்தனர். கடற்படைக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் போர்த்துகீசியரும், டச்சுக்காரரும் வளர்ச்சியுற்றனர்.

**சமுதாயம்**

- நாயக்கர்களின் ஆட்சி என்பது, தமிழர்களின் ஆட்சி என்பதைவிட தெலுங்கர்களின் ஆட்சி என்றே கூறலாம். நாயக்கர்கள் முக்கிய ஆட்சிப் பொறுப்புகளில் தெலுங்கர்களை நியமித்தார்கள். இருப்பினும் தமிழர்களின் மனக் குறையைப் போக்க தமிழ் வீரர்களைப் பாளையக்காரர்களாக நியமித்தார்கள். நாயக்க மன்னர்கள் பிராமணர்களைப் போற்றி ஆதரித்து அவர்களுக்கு அக்ரகாரம் அமைத்துக் கொடுத்தனர்.

**சமயநிலை**

1. **வைணவமும் சைவமும் :**

- வைணவம் - பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன். முழு ஆதரவு (ஆண்டாள், பெரியாழ்வார்) சமகாலத்தவர்கள்.


THE AVENUE CARE ACADEMY Padasalai.Net

- நாயக்கர்கள் சைவத்திற்கும் வைணவத்திற்கும் பெரும் தொண்டாற்றினர். வைணவத்தில் வடகலை – தென்கலை என்ற பிரிவுகள் வளர்ச்சியடைந்தன.

## 2. கிறித்துவம்

- ராபர்ட் - டி – நொபிலி, பெர்னாண்டஸ் ஆகியோர் கிறித்துவ சமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். கடற்கரையோர மக்கள் பலர் கிறித்தவ மதத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். குறிப்பாக ஆல்வாரஸ் பாதிரியாரின் போக்கினால் கங்குவார்பட்டியில் இந்துக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் சொக்கநாதர் கிறித்துவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார். மறவர் சீமையில் ஜான் - டி – பிரிட்டோ கொல்லப்பட்டார்.

## 3. திருவிழாக்கள் :

- திருமலைநாயக்கர் காலம் முதல் மதுரையில் சித்திரை திருவிழா தொடங்கப்பட்டது. மீனாட்சி திருக்கல்யாணம், தேரோட்டம், தைப்பூச விழா (திருமலை நாயக்கரின் நட்சத்திர பூசம்) இன்னும் பல திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

## கல்வி, இலக்கியம்

- தெலுங்கு மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.
- சுப்பிரதீபக் கவிராயரின் - கூளப்ப நாயக்கன் காதல்
- குமர குருபரரின் - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
- திரிகூடராசப்பக் கவிராயரின் - குற்றாலக் குறவஞ்சி
- வீரமா முனிவரின் (இத்தாலி) – தேம்பாவணி, பெருங்காப்பியம், சிறுகாப்பியம்,
- தொன்னூல் (இலக்கண நூல்), வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பரமார்த்த குருகதை – உரைநடை, சதுரகராதி – அகராதி.
- சீதக்காதியால் ஆதரிக்கப்பட்ட உமறுப்புலவரின் - சீறாப்புராணம்
- பரஞ்சோதி முனிவரின் - திருவிளையாடற்புராணம்
- எல்லப்ப நாவலரின் - அருணாசல புராணம் போன்ற இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

## கலை கட்டிடக்கலை

- திராவிடப்பாணியில் கோயில்கள் அமைக்கப்பட்டன.
- மதுரை மீனாட்சி கோயிலும், ஸ்ரீரங்கம் கோயிலும், ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலும் குறிப்பிடத்தக்கன.
- வண்டியூர் தெப்பக்குளத்தை திருமலை நாயக்கரே வெட்டினார். நடுவே மை மண்டபம் உள்ளது. மதுரை ராஜ கோபுரத்தைப் போன்று 64 இடங்களில் அமைக்க இருந்த திருமலை நாயக்கர் கைவிட்டுவிட்டார்.
- முதலாம் கிரு'ணய்யர் காலத்தில் மதுரை ஆயிரங்கால் மண்டபம் (அரியநாதரால்) கட்டப்பட்டது.

- தென்னாட்டின் தாஜ்மஹாலான திருமலை நாயக்கர் மஹால் ஒரு இத்தாலி நாட்டுச் சிற்பியால் வடிவமைக்கப்பட்டது.

### தமிழ்நாட்டில் மராத்தியரின் ஆட்சி

- கிருஷ்ணதேவராயர் தனது ஆட்சிக் காலத்தில் (1509 – 1529) நயங்காரா அமைப்பை உருவாக்கினார்.
- இதன் மூலம் தமிழகம் **செஞ்சி, தஞ்சாவூர், மதுரை** என மூன்று மிகப்பெரிய **நயங்காராக்களாக** பிரிக்கப்பட்டது.
- இந்த புதிய முறைப்படி துணைத்தலைவர்கள் பாளையக்காரர்களாக நியமிக்கப்பட்டனர்.
- சோழ சாம்ராஜ்யத்தின் பகுதியாக முதலிலிருந்த தஞ்சாவூர் பிறகு பாண்டிய அரசின் பகுதியாக உருவானது. பின்னர் இது மதுரை சுல்தானியத்தின் பகுதியாக உருவெடுத்தது. கடைசியில் நாயக்கர் கைகளுக்குச் சென்றது.
- மதுரை நாயக்கர் மற்றும் தஞ்சாவூர் நாயக்கர் இடையே நிலவிய பகை கடைசியில் 1673 இல் தஞ்சாவூரில் நாயக்க ஆட்சியை முடிவுறச் செய்தது.
- தஞ்சாவூரில் **1676 இல் மராத்திய தளபதி வெங்கோஜி** தன்னை அரசராக அறிவித்தார். இவ்வாறாக மராத்தியர் ஆட்சி தஞ்சாவூரில் துவங்கியது.
- கர்நாடகத்தின் மீது 1677 இல் படையெடுத்த சிவாஜி வெங்கோகியை அகற்றிவிட்டு தனது ஒன்றுவிட்ட சகோதரர் ஷாஜியை அப்பதவியில் அமர்த்தினார்.
- ஆனால் வெங்கோஜி மீண்டும் தஞ்சாவூரைக் கைப்பற்றினார். ஷாஜிக்கு வாரிசு இல்லாததால் அவரது சகோதரர் முதலாம் சரபோஜி அடுத்த ஆட்சியாளராக அமர்ந்தார்.
- 1712 முதல் 1728 வரை 16 ஆண்டுகளுக்கு அவர் ஆட்சியில் இருந்தார். அவருக்குப் பிறகு துக்கோஜி ஆட்சிக் கட்டில் அமர்ந்தார்.
- அவரைத்தொடர்ந்து 1739 முதல் 1763 வரை **பிரதாப் சிங்** ஆட்சி புரிந்தார். பின்னர் அவரது மகன் **துல்ஜாஜி 1787** இல் ஆட்சியில் அமர்ந்தார்.
- அந்த ஆண்டில் பத்து வயதான இரண்டாவது சரபோஜி அரியணை ஏறினார். **துல்ஜாஜியின் சகோதரர் அமர்சிங் ஆட்சியை நிர்வகித்தார்.** இந்த வாரிசு அரசியலை எதிர்த்த ஆங்கிலேயர் இரண்டாவது சரபோஜியின் மீது ஒப்பந்தம் ஒன்றை திணித்தனர்.

- அதன் அடிப்படையில் இரண்டாம் சரபோஜி தனது அரசு நிர்வாகத்தை (1798- ல்) ஆங்கிலேயர் வசம் ஒப்படைக்க நேரிட்டது. இரண்டாம் சரபோஜி தஞ்சாவூரை ஆண்ட மராத்தியரின் போன்ஸ்லே சாம்ராஜ்யத்தின் கடைசி ஆட்சியாளராவார்.

## இரண்டாம் சரபோஜி (1777 - 1832)

**இரண்டாம் சரபோஜி**



- இரண்டாம் சரபோஜி ஒரு தலைச்சிறந்த அரசர்
- ஜெர்மனிய சமய பரப்புக் குழுவைச் சேர்ந்த **ஃப்ரெட்ரிக் ஸ்வார்ட்ஸ்** மூலமாகக் கல்வி பயின்ற போதிலும் பலரும் எதிர்ப்பார்த்தப்படி அவர் கிறித்தவ மதத்தை தழுவவில்லை.
- மேற்கத்திய அறிவியல் மற்றும் மருத்துவத்தைக் கையாளும் மருத்துவராக சரபோஜி திகழ்ந்தார்.
- அனைத்துத் துறைகளையும் சார்ந்த நூலகம் ஒன்றிணை வைத்திருந்தார்.
- ஒரு அச்சகத்தை நிறுவுவது சரபோஜியின் நவீன திட்டங்களில் ஒன்றாக இருந்தது. (இதுவே மராத்தி மற்றும் சமஸ்கிருத மொழிகளுக்கான முதலாவது அச்சகமாகும்)
- சரஸ்வதி மஹால் நூலகத்தை (1824) மேம்படுத்தும் அவரது திட்டங்களில் ஒன்றாக இருந்தது
- அவரது அரசவை மூலம் நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவி ஆங்கிலம் மற்றும் பிரதேச மொழிகளில் பாடங்கள் இலவசமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் அவரது அது நவீனத்திட்டமாக இருந்தது.
- அவர் காலத்தில் வாழ்ந்த தரங்கம்பாடி சமய பரப்புக்குழுவைச் சேர்ந்த அறிஞர் **சி.எஸ்.ஜான்** என்பவரைக் கல்வித் துறையின் முன்னோடியாக மன்னர் சரபோஜி கருதினார்.
- ஜான் கல்வித்துறையில் புதிய பரிசோதனைகளையும் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டார்.
- உறைவிடப்பள்ளி முறையை அறிமுகம் செய்தார்.
- 1812 இல் ஆங்கிலேய காலனி அரசுக்கு அவர் சமர்ப்பித்த முக்கியத் திட்டத்தில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் இந்திய மாணவர்களுக்கு இலவசப் பள்ளிகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கிறித்தவர் அல்லாத மாணவர்களுக்கு ஆங்கில வழிக் கல்வி கிடைக்காத சூழல் நிலவிய காலகட்டம் அதுவாகும்.

- சென்னை ஆளுநர் தாமஸ் மன்றோ 1820 ஆம் ஆண்டில் தொடக்கப் பொதுப்பள்ளிகளுக்கான ஒரு திட்டத்தை யோசனையாக கூறினார்.
- ஆனால் கம்பெனி அரசு 1841 ஆம் ஆண்டு வரை நவீனப் பள்ளிகளை உள்ளூர் குழந்தைகளுக்குக்காகச் சென்னையில் ஏற்படுத்தவேயில்லை
- இதற்கு மாறாக ஜெர்மானிய சமயப் பரப்புக்குழு ஆங்கில வழி மற்றும் வட்டார மொழிப்பள்ளிகள் பலவற்றைத் தெற்கு மாகாணங்களில் 1707 ஆம் ஆண்டு முதல் நடத்தியுள்ளனர்.
- சரபோஜி, சமய பரப்புக்குழு மற்றும் காலணி அரசுக்கு முன்னோடியாக 1803 ஆம் ஆண்டிலேயே தஞ்சாவூரில் கிறித்தவர்கள் அல்லாத உள்ளூர் குழந்தைகளின் கல்விக்காக முதலாவது நவீனப் பொதுப்பள்ளிகளை நிறுவினார்.
- உயர்கல்வி நிறுவனங்களை இந்திய அரசர்கள் நடத்திய போதிலும் அவர்கள் தொடக்கப்பள்ளிகளை நடத்தியதில்லை.
- புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக **நவவித்யா** முறையை அரசவை நடத்திய இந்தப் பள்ளிகளில் அறிமுகம் செய்தது மற்றொரு முக்கிய முன்முயற்சியாகும்.
- 1803 இல் ஆண்டில் நிறுவப்பட்ட முக்தாம்பாள் சத்திரம் அரசரின் விருப்பமான அன்ன சத்திரமாகும்.
- அங்கு 1822 ஆம் ஆண்டில் இரண்டு வகுப்பறை காலையும் மாலையும் 15 ஆசிரியர்கள் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மொத்தம் 464 மாணவர்களுக்குக் கற்பித்தனர்.
- மனிதர்களுக்காகவும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரித்த **தன்வந்தரி மஹால்** என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை சரபோஜி நிறுவினார்.
- நோயாளிகளின் ஆவணங்களைப் பராமரிக்கும் முறையும் அறிமுகம் செய்யப்பட்டது
- நவீன மருத்துவர்கள், ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவம் ஆகியவற்றின் மருந்துகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டனர்.
- 18 தொகுதிகள் அடங்கிய ஆராய்ச்சி புத்தகத்தையும் சரபோஜி மன்னர் உருவாக்கினார்.
- பிரத்யோகமான கையடக்க ஓவியங்கள் (Miniature Painting) மூலமாக முக்கிய மூலிகைகள் பற்றியத் தகவல்களை சரபோஜி பட்டியலிட்டுப் பாதுகாத்தார்.

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

- நவீனக் கல்விமுறை தொடர்பான சரபோஜியின் புதிய முன்முயற்சிகள் தஞ்சாவூர் மேன் மக்களுக்கு அப்போதைய காலனி ஆதிக்கச் சமூக மற்றும் பொருளாதார முறைமைக்குள் நுழையவும் பயன்பெறவும் வழி செய்தன.
- அரசவை அதிகாரிகள் பெரும்பாலும் பிராமணர்களுக்கு ஐரோப்பிய பயன்பாட்டு அறிவு, தொழில் நுட்பங்கள் கலைகள், ஆகியவற்றில் பயிற்சி கிடைத்து அவர்கள் காலனி கால நவீனத்தத்துவத்தின் முன்னணி முகவர்களாக மாறினார்கள்.
- ஆங்கிலக் கல்வி கற்ற துபாஷிகள், எழுத்தர்கள் ஐரோப்பிய மற்றும் இந்திய அரசவைகளுக்கு இடையே மத்தியஸ்தம் செய்த இந்து மற்றும் கிறித்தவ மொழிபெயர்ப்பாளர்கள் பலபொறுப்புகளை ஏற்க முடிந்தது.
❖ புதிய வழிகளையும் புதிய நாடுகளையும் கண்டுபிடிப்பதில் ஸ்பானியருக்கும் போர்ச்சுகீசியருக்குமிடையே போட்டி ஏற்பட்டது. அக்காலத்தில் ஐரோப்பாவில் போப்பாண்டவர் மிக உன்னதமான வோர் கிடத்தைப் பெற்றிருந்தார். அவருடைய வாக்கினை மன்னர்களும் மீறமாட்டார்கள்

❖ ஸ்பானிய அரசர் புதிய நாடுகளை கண்டுபிடிப்பதில் போர்ச்சுகீசியருடன் ஏற்பட்ட போட்டியினைத் தீர்த்து வைக்குமாறு வேண்டிக் கொள்ள போப்பாண்டவரும் 1493-ல் ஒரு தீர்ப்பை வழங்கினார்.

❖ ஆப்பிரிக்காவின் மேற்குக் கரையோரம் வரையப்பட்ட கற்பனைக் கோட்டுக்குக் கிழக்கே உள்ள நிலப்பகுதியெல்லாம் போர்ச்சுகீசியர் குடியேற்றத்திற்கும் மேற்கே உள்ள நிலப்பகுதியெல்லாம் ஸ்பானியர் குடியேற்றத்திற்கும் என உலகம் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டது.

❖ பின்னர் அக் கற்பனைக் கோடானது கப்ராலால் கண்டுபிடிக்கப்பட்ட பிரேசிலைப் போர்ச்சுகீசியர் பெறும்படி மேற்கே தள்ளிப் போடப்பட்டது. அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பகுதியில் அவரவர்களுக்கு வியாபாரம் செய்யவும், குடியேற்றம் நிறுவும் தனியுரிமை வழங்கப்பட்டது.

❖ அவ்வுரிமையை ஆதாரமாகக் கொண்டு குடியேற்றங்களை அமைப்பதில் போர்ச்சுக்கீசியரும் ஸ்பானியரும் தீவிரமாக முனைந்தனர்.

❖ புதிய உலகில் சிறிது சிறிதாக ஸ்பானியர்கள் தென் அமெரிக்காவில் பெரும்பகுதி நடு அமெரிக்கா மெக்ஸிகோ, ஃபுளோரிடா ஆகிய இடங்களில் தங்களின் குடியேற்ற நாடுகளை நிறுவினர் போர்ச்சுக்கீசியர் புதிய உலகில் பிரேசிலை மட்டும் தங்கள் ஆளுகைக்குட்படுத்தினார்கள்.

❖ பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளின் தனி உரிமைகள் இங்கிலாந்து ஹாலந்து ஃபிரான்சு ஆகிய நாடுகளின் தாக்குதலுக்கு இரையாயின.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- இங்கிலாந்தும், ஹாலந்தும் பிராடஸ்டன்டு நாடுகளாக மாறிவிட்டமையால் போப்பாண்டவரின் கட்டளைகளை ஏற்கவில்லை எனவே, பதிய நாடுகள் கண்டுபிடிப்பது பற்றி ஸ்பெயினுக்கும், போர்ச்சுகலுக்கும் உலகை இருபகுதிகளாகப் பிரித்துக் கொடுத்தது வழங்கிய தீர்ப்பையும் ஏற்கவில்லை.
- ஸ்பெயினுக்கும் போர்ச்சுலுக்கும் வழங்கப்பட்ட பகுதிகளில் இங்கிலாந்து, ஹாலந்து, ஃபிரான்சு போன்ற பிற நாடுகள் குடியேற்றங்கள் நிறுவவும், அங்கு வாணிகம் செய்யவும் முற்பட்டன.
- மேலும் கடற்கொள்ளைக்காராா்களும், கள்ள வணிகா்களும் ஸ்பானியா், போர்ச்சுகீசியா் ஆகியோருடைய வாணிகத்தில் குறுக்கிட்டு வாணிக வளத்தை குறைத்தனா்.
- புதிய கடல் வழிகளைக் கண்டுபிடிப்பதிலும், புதிய உலகில் குடியேற்றங்களை நிறுவதிலும் இங்கிலாந்து, சிறிது காலந்தாழ்த்தியே ஈடுபட்டது.
- நூற்றாண்டுப் போரினாலும் (1337 – 1437) ரோஜா மலா் அடையாளப் போர்களாலும் (1455 – 1485) இங்கிலாந்து நலிவுற்று ஒற்றுமையின்றிக் கிடந்தது பியூடா்கள் வருகைக்குப் பிறகு நாட்டில் அமைதி நிலவியது
- மக்கள் முன்னேற்றப் பாதையில் செல்லாயினா் புதிய கடல்வழிப் பயணங்களை மேற்கொள்வதில் மிகுந்த ஆா்வம் கொண்டிருந்த போதிலும் கப்பலைச் செலுத்தும் கலையில் போதிய பயிற்சியற்றவா்களையிருந்தனா் எனவே பிறநாட்டு வழிப் பயண வீரா்களின் துணையை நாடினா்.
- டியூடா் வம்சத்தின் முதல் அரசரான ஏழாம் ஹென்றி கடல் வழிப் பயணங்களை மேற்கொள்வோருக்க ஆதரவு தந்தாா்.
- ஜினோவா நாட்டில் பிறந்த கேபட் (John Cabot) என்ற பயண வீரா் ஏழாம் ஹென்றியிடம் கீழைநாடுகளுக்குச் செல்வதற்கான வழிகளைப் பற்றித் தமது திட்டங்களைப் படைத்தாா்.
- பிரிஸ்டல் நகர வணிகா்கள் பணம் தந்து உதவ முன்வந்தனா். கேபட் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கவும் அங்கு வணிக உரிமைகளை அவரும் அவருடைய சந்ததியனரும் பெறவும் ஹென்றி ஒரு சாசனத்தை 1946-ல் வழங்கினாா்.
- தாம் புதிதாக அந்நிலப் பரப்பைக் கண்டு பிடித்தமையால் அதற்கு அப்பெயரைப் சூட்டினாா். தாம் ஆசியாவின் ஒரு பகுதிக்கு வந்துவிட்டதாக நினைத்துக் கொண்டாா்.
- அடுத்த முறை மேற்கொண்ட பயணத்தில் வட அமெரிக்க கரையோரமாக செஸாபிக் குடா வரை சென்ற போதிலும் கேபட் திரும்பி வருகையில் கடலில் காணாமற்போய் விட்டதாகப் கூறப்படுகிறது.

- அவர் மகன் செபாஸ்டியன் கேபட் தந்தை விட்டுச் சென்ற பணியை மேற்கொண்டார். இவரும் நியூ ஃபவுண்டுலாந்து பகுதியைச் சென்றடைந்து காட் மீன் வகை அப்பகுதியில் ஏராளமாகக் கிடப்பதை அறிவித்து அதில் ஆங்கில வணிகர்களை ஈடுபடச் செய்தார்.
- வட அமெரிக்கக் கடலோரத்தை ஆங்கிலேயர் கண்டறிந்தும் நில அரசியல் சூழ்நிலைகளில் காரணமாக ஏழாம் ஹென்றியின் காலத்தில் அங்குக் குடியேற்றங்களை நிறுவஇயலாத நிலையிலிருந்தனர்.
- ஏழாம் ஹென்றி தமது மகனுக்கு (பின்னர் எட்டாம் ஹென்றியானார்) ஸ்பானிய இளவரசியை மணமுடிக்க முயன்று கொண்டிருந்தார்.
- எனவே புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதில் ஒரு தொடக்கம் ஏற்பட்டது ஒழிய தீவிரமாகக் குடியேற்றங்களை நிறுவதில் ஆங்கிலுயர் ஈடுபடவில்லை.
- எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் பல அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டமையாலும் இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டமையாலும் அரசரும் மக்களும் குடியேற்றங்கள் ஏற்படுத்துவதில் அதிக நாட்டங் கொள்ளவில்லை.
- இருப்பினும் எட்டாம் ஹென்றி தமது ஆட்சியின் பிற்பகுதியில் இங்கிலாந்தின் முன்னேற்றத்திற்காக நாட்டின் கப்பற்படையை வலுப்படுத்துவதில் முனைந்தார். கப்பல் கட்டும் கலையின் நுணக்கங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு ஒரு கப்பலையே உடைத்துப் பிரித்துப் பார்த்தார்.
- விரைந்து செல்லக் கூடிய வண்ணம் கப்பல்கள் இயக்குதற்குச் சிறந்த மாலுமிகளையும் உருவாக்க வேண்டுமென்பதை ஹென்றி உணர்ந்தார்.
- மாலுமிகளையும், கப்பல் வலவர்களையும் பயிற்றுவிப்பதற்காக மூன்று கல்லூரிகளையும் தோற்றுவித்தார்.
- எட்டாம் ஹென்றி காலத்தில் செபாஸ்டியன் கேபட் வில்லியம் ஹாக்கின்ஸ் போன்ற வீரர்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் பிருலிலுக்கும் சென்று வணிகத் தொடர்பு ஏற்படுத்தினர்.
- எலிஸபெத் அரசியார் (1558 – 1603) பட்டத்திற்கு வந்ததும் குடியேற்றங்களை நிறுவுவதற்கும், வாணிகத்தைச் செழிப்புறப் பெருக்குவதற்கும் நல்லதொரு சூழ்நிலை உருவாயிற்று.
- ஆங்கிலக் கடற்பயண வீரர்கள் புதிய உலகுபற்றி ஓரளவு அறிந்துகொண்டனர் உள்நாட்டில் பரிபூரண அமைதி நிலவிற்து. வெளிநாட்டுறவிலும் அரசியார் பதவிக்கு வந்தது முதல் அடுத்த இருபது ஆண்டுகள் வரை அமைதியான சூழ்நிலையே இருந்தது.

- ❖ அரசியார் சிறப்புறச் கண்ணுங்கருத்துமாய்ப் பொருளாதார நிலைமையைக் கட்டிக்காத்தமையால் வரிச்சுமையின்றி மக்கள் வாணிகத்தில் ஆர்வங்காட்டினர்.
- ❖ எலிஸபெத் அரசியார் கப்பபடையை வலுப்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டினார் கடலால், சூழ்ந்த இங்கிலாந்திற்கு வலுமிக்க கடற்படையினர் இன்றியமையாமையை அவர் நன்குணந்தார்.
- ❖ படைக்கலச்சாலையில் படைக்கலங்களை நிரப்பி வைத்தார் வலுமிக்க கப்பல்களை இங்கிலாந்திலேயே கட்டுவித்தார் அது காணும் கப்பல்களை பிற நாடுகளிலிருந்து விலைக்கு வாங்கும் வழக்கமு இருந்து வந்தது. அவ்வழக்கத்தை மாற்றுமாறு அவர் தம் குடிமக்களை ஊக்குவித்தார்.
- ❖ ஆங்கிலப் பொறிவலர்கள் திறனும் பெருகிற்று மாலுமிகளின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று நாட்டின் கடற்படை குடிமக்களனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.
- ❖ அயல்நாட்டு வணிகத்தைச் செழிப்படையச் செய்யும் பொருட்டு வணிகர்கள் அடங்கிய தனியுரிமை நிறுவங்களை நிறுவ அவர் ஊக்கமளித்தார் மற்றும் பாரசீகம் வழியே கீழை நாடுகளுக்குத் தரைவழியாகப் பயணங்களை மேற்கொள்ளவும் சட்டபூர்வமாக இசைவளித்தார்.
- ❖ பாரசீக மன்னரும் ஆங்கில வணிகர்களுக்குப் பல சலுகைகளை அளித்தார். அதனால் ஆங்கில வணிகர்கள் நிரம்ப ஊதியம் பெற்றனர்.
- ❖ புதிய உலகில் ஸ்பானியருஜடய வாணிக முறை சிறப்புற அமையவில்லை குடியேற்றங்களை தேவைகளைத் தாய்நாடான ஸ்பெயின் பூர்த்திசெய்ய முடியவில்லை
- ❖ ஸ்பெயினில் வணிகர்கள் விலையினை உயர்த்தியும் தனியுரிமைகளைக் கட்டுப்படுத்தியும் வந்தனர். ஆனால் குடியேற்றங்களில் வாழும் மக்களோ குறைந்த விலையில் அதிகப் பொருள்களை வாங்குவதற்குக் காத்திருந்தனர்.
- ❖ ஸ்பானியக் குடியேற்றங்களில் அதிகாரிகளின் கையில் சிக்காமல் மிகுந்த ஊதியத்தோடு வாணிகம் செய்ய நல்ல சூழ்நிலை ஏற்பட்டது.
- ❖ அப்படி வாணிகம் செய்த அந்நிய நாட்டவர்க்கு உரிமையற்ற வணிகர் என்ற பெயர் தரப்பட்டது. இதனை முதலாவதாக ஆரம்பித்தவர் இங்கிலாந்தைச் சார்ந்த சர் ஜான் ஹாக்கின்ஸ் என்பவராரார். அவரு அடிமைகள் வாணிகத்தையும் தொடங்கி வைத்தார் எனலாம்.
- ❖ ஹாக்கின்ஸ் முறையாக ஸ்பானிய அரசுக்கு விண்ணப்பித்து உத்தரவு பெற்று வாணிகத்தை மேற்கொள்ளாமல் நேரடியாகப் போய் ஸ்பானியக் குடியேற்றங்களில் செலுத்த வேண்டிய சுங்கவரிகளை யெல்லாம் செலுத்தி விட்டு மிகவும் நேர்மையான வணிகன்போல நடந்து கொண்டார்.

❖ 1562-ல் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையோர நாடுகளுக்குச் சென்று 300 நீக்கிரோக்களைப் பிடித்துக் கொண்டுபோய் மேற்கிந்திய தீவுகளில் விற்றுப் பெரும் ஊதியம் பெற்றார். ஐரோப்பாவில் மிகவும் தேவைப்பட்ட சர்க்கரை மாட்டுத் தோல் ஆகியவை எளிய விலையில் பெருமளவில் பண்டமாற்றாகப் பெற்றார்.

❖ ஹாக்கின்ஸ் மேலும் அடிமை வாணிகத்திலீடுபட இசைவுதர எலிஸபெத் அரசியார் மறுத்து விட்டார். அதையும் மீறி ஹாக்கின்ஸ் பயணங்களை மேற்கொண்டார். ஒரு முறை ஸ்பானியர்களால் தாக்கப்பட்டு நற்பயனாக உயிரோடு இங்கிலாந்து திரும்பினார்.

❖ புதிய உலகில் ஸ்பானியர்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சிய ஆங்கிலேயர் பஸிபிக் பெருங்கடல் பகுதியில் நாட்டங் கொண்டனர் தென் அமெரிக்காவின் தென்கோடியிலிருந்த மெகல்லன் கடற்கோல் வழியாகச் சென்றால் ஒரு பெரும் நிலப்பரப்பை அடையலாம் என்று கருதினார்.

❖ செல்வாக்கு மிகுந்த பல ஆங்கில வணிகர்கள் ஒன்று கூடி அப்பகுதியை ஆராய ஒரு திட்டத்தைத் தீட்டினர். ஆய்வுப் பயணத்தை மேற்கொள்ள ஃபிரான்ஸிஸ் பிரேக் என்ற கடல் வீரரைத் தேர்ந்தெடுத்தனர்.

❖ டிரேக், மெகலன் கடற்கோல் வழியே சென்று தென் அமெரிக்காவின் மேற்குப் பகுதியையும் வட அமெரிக்காவின் மேற்குப் பகுதியையும் வட அமெரிக்காவில் கலிபோர்னியா வரையும் சென்று பின்பு பசிபிக் பெருங்கடல் வழியே லவங்கத் தீவுகள் சென்றடைந்து வாணிக உரிமைகள் பெற்றார். பின்னர் இந்தியப் பெருங்கடல் வழியே இங்கிலாந்து சென்றடைந்தார். டிரேக் சிறப்புற முதன்முறையாக உலகைச் சுற்றி வந்த பெருமை பெற்றார்.

❖ இங்கிலாந்திலிருந்து வடமேற்கு வழியாகச் சென்றாலும் கீழைநாடுகளைச் சென்றடையலாம் என்ற கருத்து இருந்துவந்தது. இலண்டன் மாநகர வணிகர் ஒருவர் வடமேற்கு வழியே புதிய வழி கண்டுபிடிப்பதற்கான பயணத்தை மேற்கொள்ள நிதியளிக்க முன்வந்தார்.

❖ சர் மார்டின் ஃபிராபிஷர் என்னும் கடற்பயண வீரர். வடமேற்கு வழியாகப் பயணத்தை மேற்கொண்டு நியூஃபவுண்டுலாந்து சென்றடைந்தது.

❖ அங்கிருந்த செவ்விந்தியர்களைப்பற்றிய செய்திகளறிந்து வந்தார். ஆங்கில அரசருக்குச் சொந்தமானவை என அந்நிலப்பகுதிகளை அறிவித்தார் தாம் சென்றடைந்த பகுதி ஆசியாவின் வடகிழக்குப் பகுதியென ஃபிராபிஷர் பிம்பினார்.

❖ சர் ஹம்ஃப்ரி கில்பர்ட் என்பவரும் வடமேற்கு வழியாகக் கீழைநாடுகளைக் சென்றடையலாம் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் அதுபற்றிய தம் கருத்துகளை ஒரு நூலாக வெளியிட்டார். நியூஃபவுண்டுவாந்தில் ஒரு

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

குடியேற்றத்தை நிறுவிக் கொண்டு அங்கிருந்து ஆய்வுப் பயணங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டார்.

❖ ஆனால் அவர் குடியேற்றம் ஒன்றையும் அமைக்கவில்லை அவரையடுத்து ஜான் டேவிஸ் என்பவர் அதே திசையில் பயணங்களை மேற்கொண்டார். அவர் கீரின்லாந்து சென்றடைந்து அங்கிருந்த கடற்காலுக்கு தம் பெயரைச் சூட்டினார்.

❖ அவர் பனியால் மூடப்பட்ட ஆர்க்டிக் பெருங்கடலைக் கண்டாஃரா ஒழிய ஆசியக் கண்டத்தைக் காணமுடியவில்லை பணமுடை காரணமாக டேவிஸ் தம் ஆய்வுப் பயணங்களைக் கைவிட்டார்.

❖ முதல் பிரிட்டிஷ் குடியேற்றத்தை நிறுவுவதற்கான முயற்சி வடமேற்வழிப் பயணங்களின் விளைவாகவே மேற்கொள்ளப்பட்டது. வடஅமெரிக்காவில் ஓர் அடித்தளத்தை அமைத்துக் கொண்டு அங்கிருந்து ஆய்வுப் பயணங்களே மேற்கொள்வது எளிதாயிருக்கும் எனக் கருதினர்.

❖ கில்பர்ட் அத்தகையவோர் அடித்தளத்தை நியூஃபவுண்டுலாந்தில் அமைக்க விரும்பினார். ஆனால் அவர் வெற்றி பெறவில்லை. அவர் விட்டுச்சென்ற பணியைச் சர் வால்டர் ராலே மேற்கொண்டார்.

❖ ராலே வட அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் ஒரு குடியேற்றத்தை நிறுவ முயன்றார், ஃபிலிப் அமடாஸ் ஆதத்ர் என்ற தமது இருதளபதிகளே 1584-ல் அனுப்பி வைத்தார்.

அட்லாண்டிக் கடலைக் கடந்த அடிமை வணிகம் மனிதகுல வரலாற்றில் படிந்த கறையாகும். பதினேழாம் நூற்றாண்டு பிறந்தபோது போர்த்துகீசியர்கள் ஆப்பிரிக்க அடிமை வர்த்தகத்தைத் தொடங்கினர். ஏனைய கிறித்துவ ஐரோப்பிய நாடுகளும் உடனடியாக பின் தொடர்ந்தன. அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட முதல் அடிமைகள் 1619இல் ஒரு டச்சுக் கப்பலில் வந்தனர். "சந்தேக குணமில்லாத நீக்ரோக்களை" ஆப்பிரிக்காவில் கைப்பற்றி புதிய உலகிலுள்ள (அமெரிக்கா) பெருந்தோட்டங்களில் வேலை செய்ய அவர்களை விற்பதன் மூலம் பெரும் பணம் சம்பாதிக்க இயலும் என உணர்ந்த முதல் ஆங்கிலேயர் ஜான் ஹாக்கின்ஸ் ஆவார். அவருடைய செழிப்பான வெற்றி, பெரும் லாபம் ஆகிய காரணங்களால் முதலாம் எலிசபெத் அரசியால் நைட் பட்டம் சூட்டப்பட்டார். 11 மில்லியன்களுக்கும் மிகையான ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாக அமெரிக்காவைச் சென்றடைந்தனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ சமயச் சீர்திருத்தத்தின் விளைவாகப் போப்பாண்டர் எலிஸபெத் அரசியாரைக் கத்தோலிக்க திருச்சபையினின்று விலக்கினார். இதன் விளைவாக இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்குமிடையேயிருந்த உறவுநிலை மாறலாயிற்று

❖ ஸ்பானிய அரசர் கத்தோலிக்க நாடுகளின் தலைவராகவும் இங்கிலாந்தின்அரசியார் பிராடஸ்டண்டு நாடுகளின் தலைவியாகவும் மக்களால் கொண்டாடப்பட்டனர்.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

ஸ்பானிய அரசரான இரண்டாம் ஃபிலிப் போப்பாண்டவரின் ஆதரவோடு பிராடஸ்டண்டு நாடான இங்கிலாந்தைக் கைப்பற்றிடத் திட்டமிட்டார்.

- ❖ எலிஸபெத் அரசியாரைக் கொலை செய்யவும் அதற்குப் பின் ஏற்படும் குழப்பநிலையில் ஒரு கத்தோலிக்கரை அரச பதவிக்கு கொண்டுவரவும் சதித் திட்டம் ஒன்றும் உருவாயிற்று
- ❖ இதனையறிந்த ஆங்கிலேயர் வெகுண்டெழுந்தனர் இருநாடுகளுக்குமிடையே உறவு முறிந்தது போர் மூண்டது வரலாற்றுச் சிறப்புமிக்க இப்போரில் (1585 -88) ஸ்பானியக் கப்பற்படை ஆங்கிலக் கப்பற்படையால் சின்னா பின்னமாக்கப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டது.
- ❖ ஆங்கிலேயர் பெற்ற வெற்றி புதிய உலகின் வரலாற்றின் ஒரு திருப்பு முனையெனக் கொள்ளலாம் ஸ்பானியக் கப்பற்படையின் புகழ் மங்கி, பிரிட்டிஷ் கப்பற்படையின் புகழ் ஓங்க ஆரம்பித்தது.
- ❖ ஸ்பெயினின் வலிமை குன்றியமையால் ஆங்கிலேயர் துணிவுடன் குடியேற்றங்களை நிறுவுவதில் முனைந்தனர். ஸ்பானியர் அவற்றை எதிர்த்தால் போர் மீண்டும் மூளுமோ என்று அஞ்சி விட்டுவிட்டனர்.

## பிரிட்டிஷ் குடியேற்றங்கள்

- ❖ முதலாம் ஜேம்ஸ் 1603-ல் முடிசூட்டிக் கொண்டபோது பிரிட்டிஷ் பேரரசு என்று ஒன்று இல்லை எலிஸபெத் அரசியாரது ஆட்சிக் காலத்தின் இறுதியில் வர்ஜினியாவில் குடியேற்றம் ஒன்றும் ஒன்று நிறுவ முயன்று கைவிடப்பட்டது.


மேபிளவர் கப்பல்

- ❖ கீழைநாடுகளோடு வாணிகத் தொடர்பு கொள்வதற்காகக் கிழக்கி ந்தியக் கம்பெனி 1600 -ல் நிறுவப்பட்டது. ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்த ஆண்டு தான் அக்கம்பெனி தனது இந்தியப் பயணத்தில் வெற்றிக் கண்டு மீண்டது.

அமெரிக்காவில் பிரிட்டிஷ் குடியேற்றங்கள்




www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- ❖ ஸ்டூவர்ட் அரசர்களின் வருகையோடு பிரிட்டிஷ் பேரரசும் உருவாயிற்று எனலாம். பேரரசை உரு வாக்கும் பணியிலும், உள்நாட்டு நிகழ்ச்சிகளிலும் பிரிட்டிஷாரின் வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டுக் குறிப்பிடத்தக்கது.
- ❖ ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் பல குடியேற்ற நாடுகளை நிறுவுவதற்கான நல்லவொரு சூழ்நிலை யை டியூடர்கள் உருவாக்கிவிட்டுச் சென்றிருந்தனர். கடல் வாணிகம் வளர்ச்சி பெற்று நாட்டின் செல்வநிலை உயர்ந்திருந்தது.

1587இல் சர் வால்டர் ராலே என்பார் வடகரோலினாவிற்கு அருகே இருந்த ரோவனோக் தீவில் ஒரு குடியேற்றத்தை ஏற்படுத்தி, கன்னிமை அரசியான ராணியார் முதலாம் எலிசபெத்தின் நினைவாக வெர்ஜினியா எனப் பெயரிட்டார். ஆனால் பூர்வகுடி இந்தியர்களின் வலுவான எதிர்ப்பால் தொடக்கத்தில் குடியேறிய பலர் இங்கிலாந்து திரும்பினர். சில ஆண்டுகள் கழித்து ஆங்கிலேய மாலுமிகள் அங்கு சென்றபோது குடியேற்றம் இருந்தற்கான எந்தச் சுவடும் அங்கில்லை. ரோவனோக் தீவு இழக்கப்பட்ட குடியேற்றமானது.

- ❖ ஸ்டூவர்ட்டுகள் காலத்தில் இங்கிலாந்தில் பொருளாதாரத் துறையில் நிலவிய குழப்பமும் சமயத்துறையில் மன்னர்கள் சகிப்புத் தன்மை இன்றி நடத்து கொண்டமையால் மக்களுக்கு ஏற்பட்ட துயரமும் குடியேற்றங்களின் வளர்ச்சிக்கு உதவி புரிந்தன.

**வர்ஜீனியா**

- ❖ எலிஸபெத் அரசியார் காலத்து வர்ஜீனியாவிலும் நியூ ஃபவுண்ட்லாந்திலும் குடியேற்ற நாடுகளை நிறுவ ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காது போயின.
- ❖ இருப்பினும் ஆங்கிலேயர் குடியேற்றங்களை நிறுவுவதற்கான திட்டங்களைக் கைவிட்டுவிடவில்லை. 1605 ஆம் ஆண்டு ஓர் ஆய்வுப் பயணம் வடஅமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ அப்பயணத்தின்பின் குடியேற்றங்களை நிறுவுவதற்கான தக்க சூழ்நிலை இருப்பதாக எண்ணப்பட்டது. அதன் பயனாக அடுத்த ஆண்டு முதலாம் ஜேம்ஸ் ஒரு குழுவை நியமித்தார்.
- ❖ அக்குழுவிற்கு அமெரிக்காவின் கடலோரத்தில் நிறுவப்படும் குடியேற்றங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை பார்க்க உரிமை அளிக்கப்பட்டது. அக்குழுவின் கண்காணிப்பில்பிளைமவுத் கம்பெனி இலண்டன் கம்பெனி ஆகிய இரண்டு நிறுவனங்களும் இயங்க ஆரம்பித்தன.
- ❖ பிளைமவுத் கம்பெனியால் நிலையான பணி எதையும் செய்ய முடியவில்லை. இலண்டன் கம்பெனி தனது பணியைச் சிறப்புறச் செய்தது. படற்படைத் தளபதி கிறிட்டோஃபர் நியூபோர்ட் என்பவரின் தலைமையில் நூறு பேர் புதிய உலகிற்கு பயணமாயினர்.

❖ அவர்கள் செசாபீக்குடாவில் 1607 ல் போய்ச் சேர்ந்தனர் நியூபோர்ட் தம்முடன் அரசு ஆணை ஒன்றினை கொண்டு வந்திருந்தார்.

❖ அதில் குடியேற்றத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கவனிக்க ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தமக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

❖ வர்ஜீனியாக் குடியேற்றத்தின் கோட்டை ஒன்றைக் கட்டுவித்து அதன்று ஜேம்ஸ்டவுன் என்று பெயர் சூட்டினர் குடியேறியவர்கள் தங்களது உணவுத் தேவைகளுக்கு இங்கிலாந்தையே நம்பியிருந்தனர்.

❖ உணவுப் பண்டங்களைக் கொண்டு வரும் கப்பல்கள் வருவதில் ஏதேனும் தாமதமுற்பட்டால் குடியேற்றத்தினர் உணவின்றி அல்லலுற்றனர். அதனுடன் இந்தியப் பழங்குடியினரும் அதிகத் தீங்கு விளைவித்தனர்.

❖ இவை காரணமாக ஒரு சமயம் இக்குடியேற்றம் அழிவுறும் நிலையிலிருந்து ஆனால் நற்பயனாகத் தளபதி ஜான் ஸ்மித் நயம்பட இந்தியர்களோடு நட்பு கொண்டு குடியேற்றத்தினருக்கு வேண்டி உணவுப் பொருள்களை பெற்றுக் காப்பாற்றினார்

❖ இலண்டன் கம்பெனியால் நிறுவப்பட்ட இக்குடியேற்றம் சரிவரச் செயற்படாமையைக் கேள்வியுற்ற அரசர் வர்ஜீனியாக்கம்பெனி என்ற வேறு நிறுவனம் ஒன்றுக்கு அக் குடியேற்றத்தை நிருவகிக்கும் உரிமையை வழங்கினார்.

❖ 1609 -ல் ஒரு சாசனமும் அக் கம்பெனிக்கு வழங்கப்பட்டது. அதே நேரத்தில் பொதுமக்களும் ஆர்வங்காட்டலாயினர் பல பேர் நாடுவிட்டுக் குடிபெயர முன்வந்தனர். முதலீடு செய்யவும் விரும்பினர்.

❖ டெலவர் பிரபு, சர்தாமஸ் டேல், சர்தாமஸ் கேட்ஸ் ஆகியோர் ஆளுநராக இருந்த முதல் சில ஆண்டுகளில் வர்ஜீனியாக் குடியேற்றம் நிலை பெற்று மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளுமளவுக்குத் தன்னிறைவு பெற்றது.

❖ வர்ஜீனியாக் கம்பெனி குடியேறி மக்களுக்குச் சொந்தமாக நிலங்களைப் பிரித்துத் தந்தது. அதனால் குடியேறிகளுக்குத் தத்தம் நிலத்தில் உழைக்க ஊக்கமேற்பட்டது.

❖ புகையிலைச் சாகுபடி அங்கு முதன்முதலாகச் செய்யப்பட்டது அதனால் குடியேறிகள் அதிக ஊதியம் பெற்றனர் ஆஃபிரிக்காவிலிருந்து அடிமைகள் பலர் கொண்டுவரப்பட்டனர்

❖ அவர்களின் உழைப்பால் வரிஜினியாவின் செல்வம் கொழித்தது. விரைவில் ஆங்கிலேயர் அனுபவித்து வந்த உரிமைகளெல்லாம் குடியேறிகளுக்கு பிரிட்டனால் வழங்கப்பட்டன.

- 1619 ஆம் ஆண்டு வர்ஜினிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உ றுப்பினர்கள் கொண்ட சட்டசபையொன்று ஜேம்ஸ் டவுனில் கூடியது இதுவே புதிய உலகில் கூடிய மக்களாட்சி அடிப்படையிலான முதல் சட்டசபையாகும்
- முதலாம் ஜேம்ஸீக்கு ஆரம்பத்திலிருந்தே வர்ஜீனியாவின் வளர்ச்சியில் பொறாமையிருந்து வந்தது. அதனால் புகையிலை வாணிகத்தின்மீது அளவுக்கு மீறிய சுங்கவரி விதித்தார்.
- இதன் விளைவா வணிகர்கள் கள்ள வாணிகத்திலீடுபடலாயினர் வர்ஜீனியாக் கம்பெனியின் பங்குதாரர்களுக்கு ஆதாயப்ப பங்கு ஒழுங்காக அளிக்கப்படவில்லை.

**புதிய இங்கிலாந்தின் குடியேற்றங்கள்**



❖ வர்ஜீனியாவைப் போலல்லாமல் புதிய இங்கிலாந்து என்பது ஒரு தனிக் குடியேற்றமன்று பல குடியேற்றங்கள் கொண்ட பகுதியாகும். பிளைமவுத், (1620), மாசாசுசெட்ஸ் (1629), களெக்டிகட் (1636), ரோடு ஐலந்து (1636), நியூசேதவன் (1638) ஆகிய குடியேற்றங்கள் கொண்ட பகுதியே புதிய இங்கிலாந்து என்று வழங்கப்பட்டது.

❖ இவற்றோடு நீயூ ஹாம்ப்ஷயரையும், மெயினையும், சேர்க்கலாம். ஆனால் இவை இரண்டிலும் 1635 -லேயே மக்கள் சிலர் குடியேறியபோதும் தனிக் குடியேற்றங்களெனச் சொல்வதற்குரிய அளவுக்கு வளர்ச்சியுறவில்லை.

**பிளைமவுத்**

❖ புதிய இங்கிலாந்துக் குடியேற்றங்களில் குடியேறியவர்களெல்லாம் இங்கிலாந்திலிருந்து வந்த பியூரிடான்களேயாவர் சமயச் சீர்திருத்தத்திற்குப் பிறகு ஆங்கிலக்கத் திருச்சபை நிறுவப்பட்ட திருச்சபையாக இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் தூய்மைப்படுத்தவேண்டும் என ஒரு சிலர் வாதாடினர்

❖ அவர்களே பியூரிட்டன்களாவர் பீயூரிட்டன்களுடைய கொள்கைகளை எலிஸபெத் அரசியாரும் முதலாம் ஜேம்ஸீம் முதலாம் சார்லஸீம் அடியோடு வெறுத்தனர்.

❖ அவர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பி அங்கிருந்து புதிய புதிய உலகுக்குக் சென்று சமய உரிமையோடு வாழத் திட்டமிட்டனர். அதற்கு முதலாம் பின்னர் இசைவு தந்தாரே பொழியச் சாசனம் ஏதும் தரவில்லை

❖ பியூட்டானியர் சிலர் ஒன்று கூடி வர்ஜீனியாக் கம்பெனியிடமிருந்து இசைவானை பெற்று வர்ஜீனியாவின் வட எல்லைப் பகுதியில் சென்று குடியேற இரண்டு கப்பல்களைத் தயார் செய்தனர் அவை மேஃபிளவர் ஸ்பீட்வெல் என்பன.

❖ இப்பயணத்திற்குத் தேவையான சில இலண்டன் மாநகர வணிகர்கள் முதலீடாகக் கொடுக்க முன்வந்தனர் அக்குடியேற்றத்தை நடத்திய நிறுவனம் பிளைமவுத் வர்ஜீனியாக் கம்பெனி என்று வழங்கப்பட்டது. பின்னர் நியூ இங்கிலாந்துக் கம்பெனி எனப்பட்டது.

❖ ஸ்பீட்வெல் கப்பல் பயணத்திற்குச் தகுதியற்றதாயிற்று அதனால் மேபிளவர் கப்பலில் நூறுபேர் புதிய உலகை நோக்கிப் புறப்பட்டனர், அறுபத்தைந்து நாள் பயணத்திற்குப் பிறகு அவர்கள் காட்டுமுனை நிலப் பகுதியில் இறங்கினர்.

❖ தங்களை ஆண்டவன் இடரில்லாதுகரை சேர்ந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு தாங்கள் இறங்கிய பகுதிக்கு புதிய இங்கிலாந்து எனப் பெயர் சூட்டினார் அத் தீரமிக்க பியூட்டானியரே யாத்திரிகத் தந்தையர் என்றழைக்கப்பட்டனர்.

❖ கரை சேரந்தும் குடியேறிகள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதற்கு மேபிளவர் ஒப்பந்தம் என்று பெயர்.

❖ அதன்படி தங்களுக்குள் ஒருவரை ஆளுநராகத் தேர்ந்தெடுக்கவும் இங்கிலாந்தின் அரசரிடத்துத் தங்களது முழு பற்றுறுதியைச் செலுத்தவதென்றும் ஒப்புக்கொண்டனர்

❖ முதல் ஆளுநராக ஜான் கார்வர் பணியாற்றினார் இரண்டாவது ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லியம் பிராட் போர்டு ஒரு கர்மவீரர் அவருடைய தளரா உழைப்பினால் தான், பிளைமவுத் குடியேற்றம் வெற்றிகரமாக வளர ஆரம்பித்தது.

❖ அதில் மேலும் பலர் அடுத்தடுத்து வந்து குடியேறினர் மீன்பிடிப்புத் தொழிலும் மகுறுமென் மயிர்த்தோல் தொழிலும் ஏற்றுமதியைப் பெருக்கின அதன் விளை இலண்டண் மாநகர வணிகர்கள் தந்திருந்த முதலீட்டினைத் திருப்பித்தர முடிந்தது.

❖ பிளைமவுத் ஆட்சிமுறை வர்ஜீனியாவினின்று சிறிது வேறுபட்டிருந்தது பிளைமவுத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக் காலம் ஒரே ஓர் ஆண்டு தான்.

❖ ஆனால் வில்லியம் பிராட்போர்டு போன்ற நற்பணியாளர்கள் மீண்டும் மீண்டும் பன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்கள் தொகை கூடுதலாக நகரங்கள் தோன்றின. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட ஒரு சட்டசபையும் அமைக்கப்பட்டது

❖ ஆனால் வாக்குரிமை எல்லாருக்கும் தரப்படாமல் பீயூட்டானிய திருச்சபையின் உறுப்பினர்களுக்கு மட்டுமே தரப்பட்டிருந்தது. பிளைமவுத் சில ஆண்டுகள் கழித்து மாசா சூசெட்ஸோடு இணைந்தது.

## மாசாசூசெட்ஸ் – 1629

❖ இங்கிலாந்தில் முதலாம் சார்லஸின் ஆட்சிக் காலத்தில் பீயூட்டானியருக்கு இன்னல்கள் அதிகமாயின சார்லஸீக்குச் சமயத்துறையில் ஆர்ச்பிஷப் லாடு ஆலோசகராக விளங்கினார், லாடு பியூட்டானியருக்கெதிராக கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார்.

❖ எனவே பெருமளவில் பியூட்டானியர் புதிய உலகிற்குக் குடிபெயர்ந்து சென்றனர். அவர்களில் சிலர் புதிய இங்கிலாந்து கம்பெனியிடமிருந்து இசைவுப் பெற்றுப் பிளைமவுத்தை அடுத்துள்ள நிலப்பகுதியில் குடியேறத் திட்டமிட்டனர்.

❖ இவர்களால் அமைக்கப்பட்ட நிறுவனம் மசாசூடெட்ஸ்டே கம்பெனி என்றழைக்கப்பட்டது. ஜான் என்டிகாட் என்ற முயற்சியாளரின் தலைமையில் 1629-ல் வடஅமெரிக்கர் சென்று பிளைமவுத்தருகில் குடியேறினர் அவர்கள் முதலாம் சார்லஸிடமிருந்து பட்டயம் ஒன்றையும் பெற்றனர்.

❖ ஓர் ஆளுநரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் குடியேற்றத்தை ஆளுவதற்கான சட்டங்களை இயற்றவும் உரிமை வழங்கப்பட்டது.

❖ 1630 மேலும் ஓராயிரம் பேர் சேலத்தில் ஏற்கனவேயிருந்த குடியேறிகளுடன் சேர்ந்து கொண்டனர் நற்பயனாக முதல் ஆளுநராக ஜான் யின்திராப் என்ற சிறந்த தலைவரை மசாசூசெட்ஸ் பெற்றது

❖ 1642 அதன் மக்கள்தொகை பதினாறாயிரமாகும் அக்குடியேற்றத்தில் இருந்த பாஸ்டன் சுறுசுறுப்பான துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்தது. ஐரோப்பிய நாடுகளுடன் வருவாய் மிக்க வாணிகம் நடைப்பெற்றது. மசாசூசெட்ஸ் அரசருடைய குடியேற்றமாகத் திகழ்ந்தது

## கனெக்டிக்கட் – 1636

❖ பிளைமவுத்திலும் மசாசூசெட்யிலும் நிறுவப்பட்ட குடியேற்றங்களின் விளைவாக பியூட்டன்களுக்கு அமெரிக்காவில் உரிமையுடன் வாழ்வதற்கு நிலையானதோர் இடம் கிடைத்தது அவர்கள் அங்கிருந்து பிற பகுதிகளுக்கும் சென்று குடியேற முற்பட்டனர்.

❖ மசாசூசெட்ஸில் வாழ்ந்த பீயூட்டன்களிளையே சில தீவிரவாதிகள் நிம்மதியற்ற வர்களாயிருந்தனர். அவர்கள் மசாசூசெட்ஸீக்கு மேற்கிலிருந்த கனெக்டிக்கட் ஆற்றிப் பள்ளத்தாக்கில் சென்று வாழ முற்பட்டனர்.

❖ இங்கிலாந்தில் முன்னிலை மீட்சிக்குப் பிறகுதான் கனெக்டிக்கட் பட்டயம் பெற்றது அது முதல் தனியுரிமை பட்டயம் பெற்றக் குடியேற்றமாகத் திகழ்ந்தது

## ரோடு ஜலண்டு

❖ மாசூசெட்லிலிருந்து மற்றொரு பிரிவினர் சமய அடிப்படையில் கருத்து வேறாடு கொண்டு இடம் பெயர்ந்து போய் ரோடு ஜலண்டு என்ற புதிய குடியேற்றத்தைத் தோற்றுவித்தனர்.

❖ ரோகர் வில்லியம் என்ற பீயூட்டானிய திருச்சபை சமய குருவுக்கும் ஆளுநரான வின் திராப்பிற்கும் இடையே திருச்சபையின் உறுப்பினர்களான தகுதி பற்றி கருத்து வேறுபாடு உண்டாயிற்று

❖ அரசியல் உரிமைகளைப் பெற ஒருவருடைய சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளக் கூடாதென ரோகர் வில்லியம் ஸ் வாதாடினார். வில்லியம் கருத்தை ஏனையோர் ஏற்க மறுத்தனர்.

❖ இரண்டாண்டுகள் கழித்து மற்றுமொரு பிரிவினர் ஆன்ஹட்சின்ஸன் என்னும் பெண்மணியின் தலைமையில் வின்திராப்போடு கருத்து வேறுபாடு கொண்டு வெளியேறினர்.

## QUESTIONS

1. அமெரிக்காவிற்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான சர்ச்சை எதன் மீதான அமெரிக்காவின் ஆர்வத்தால் எழுந்தது?

(A).கியூபா (B).பிலிப்பைன்ஸ்

(C).பனாம் (D).இந்தோனேசியா

2. அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் பாசிசத்தை எதிர்க்கும் நாடுகளுக்கு உதவுவதாக இதன் மூலம் உறுதியளித்தார்?

(A).மார்ஷல் திட்டம் (B).ட்ரூமன் திட்டம்

(C).மெக் ஆர்தர் திட்டம் (D).கடன்-குத்தகை முறை

3. ஆகஸ்ட் 1942 இல் மெக்ஆர்தர் தலைமையிலான அமெரிக்கப் படைகள் எப்பகுதியில் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டது?

(A).பசிபிக் (B).மத்திய தரைக்கடல்

(C).அட்லாண்டிக் (D).செங்கடல்

4. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் ………… ஆகும்.

(A). சீட்டோ (B). நேட்டோ

(C). சென்டோ (D). வார்சா ஒப்பந்தம்

5. மார்ஷல் உதவித் திட்டத்தின் குறிக்கோள் ........

(A). ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறுகட்டுமானம் செய்வது

(B). முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பது

(C). ஐரோப்பாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது

(D). சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராணுவக்கூட்டமைப்பை உருவாக்குவது

6. குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன்- குத்தகைமுறை ..... வகையில் உதவி புரிந்தது.

(A).பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்

B).யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்துவிட்ட கொலை வெறித் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்

C).தோழமைநாடுகளின் வளங்களைப் பெருக்கி, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் வழங்குதல்

D).இரண்டாம் உலகப்போரில் காயமடைத்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்

7. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக்பகுதியில் தலைமையேற்று வழிநடத்தியவர் .......... ஆவார்.

(A).மெக்ஆர்தர்

B).ஐசன்ஹோவர்

C).ஜெனரல் டி கால்

D).ஜார்ஜ்மார்ஷல்

8. போர்ட்ஸ் மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்தநாடு ..................... ஆகும்.

(A).ஸ்பெயின் (B).பிரிட்டன்

(C).அமெரிக்க ஐக்கிய நாடு (D).பிரான்ஸ்

9. அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ........... கடன் குத்தகைத் திட்டம் தொடங்கினார்.

(A). சர்ச்சில் (B). ரூஸ்வெல்ட்

(C). உட்ரோ வில்சன் (D). கிளமன்சோ

10. 1898 முதல் 1902 வரை ........................... அமெரிக்காவின் ராணுவ ஆட்சியின் கீழிருந்தது.

(A). மெக்சிக்கோ (B). பெரு

(C). கியூபா (D). பிரேசில்

11. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ............ காலத்தில் அமெரிக்கா, அரசியல் ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் மேம்பட்ட செல்வாக்குப் பெற்ற நாடானாது.

(A). உட்ரோ வில்சன் (B). தியோடர்

(C). லிங்கன் (D). ஹோவார்டு

12. வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள் _____

(A) போர்த்துகீசியர் (B) ஸ்பானியர்

(C) டேனியர் (D) ஆங்கிலேயர்

13. அமெரிக்க சுந்திரப் போரில் ஆங்கில படைகளுக்கு தலைமை தாங்கியவர்

(A) ரிச்சல்டு லீ (B) ஜார்ஜ் வாஷிங்டன்

(C) வில்லியம் ஹோவே (D) ராக்கிங்காம்

14. _____ தொடக்கத்தில் செயின்ட் டோமிங்கோ என அறியப்பட்டது.

(A) மெக்சிகோ (B) பனாமா

(C) ஹைட்டி (D) ஹவானா

15. எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன்வைத்தார்?

(A). உட்ரோ வில்சன் (B). ட்ரூமன்

(C). தியோடர் ரூஸ்வேல்ட் (D). பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்

16. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

கூற்று: குடியரசுத்தலைவர் ரூஸ்டவெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

காரணம்: அவர் 1941 இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.

(A). கூற்றும் காரணமும் சரி

(B). கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(C). காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை

(D). காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை

17. நேச நாடுகளின் படைகளுக்குத் தலைமைத் தளபதியாக இருந்த அமெரிக்க ஜெனரல்

(A).படோக்லியோ (B).விக்டர் இம்மானுவேல்

(C).ஆர்லாய்டோ (D).ஐசனோவர்

18. டிசம்பர் 7 ஆம் நாள் ஜப்பானிய விமானப்படை தாக்குதல் நடத்திய பேர்ல் துறைமுக கடற்படைத் தளம் அமைந்துள்ள இடம்.

(A).ஹவாய் தீவுகள் (B).அலுசியன் தீவுகள்

(C).அலாஸ்கா தீவுகள் (D).பிலிப்பைன்ஸ்

19. கடன் குத்தகை திட்டத்தை தொடங்கி வைத்தவர்

(A). தியோடார் ரூஸ்வெல்ட் (B). W. புஷ்

(C). J. கென்னடி (D). F.D. ரூஸ்வெல்ட்

20. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?

(A). க்வாடல்கெனால்போர் (B). மிட்வே போர்

(C). ஹிரோஷிமா (D). நாகசாகி

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

TEACHER'S CARE ACADEMY
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB HISTORY 2022-2023



## UNIT - 9
## HISTORY OF EUROPE

*Your Success is Our Goal....*

www.Padasalai.Net

Website : www.tcaexamguide.com Mobile App : tcaexamguide

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

## HISTORY

### UNIT – IX

### History of Europe (1453 – 1870) & History of England




## COMPETITIVE EXAM

## For

## UG TRB –HISTORY – 2022-23

www.Padasalai.Net

**TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM**
**TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER**
**HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080**
**B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018**
**B.Off 3: 266-C - Advaitha Ashram Road, Opp to New Bus Stand,Salem - 4.**
**Trichy: 76399 67359 Salem: 93602 68118**

UG TRB HISTORY UNIT -9 – ஐரோப்பிய வரலாறு


| வ. எ | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | கான்ஸ்டான்டி னோப்பிளின் வீழ்ச்சி 1453 (ஏப்ரல் 6 – மே 29) | 1 |
| 2. | இத்தாலியின் மறுமலர்ச்சி | 8 |
| 3. | ஜெர்மனியில் சீர்திருத்தம் மற்றும் எதிர்சீர்திருத்தம் | 17 |
| 4. | புதிய பாதைகள் மற்றும் புதிய நிலங்களின் கண்டுபிடிப்பு<br>(i) கண்டுபிடிப்புகள் | 31 |
| 5. | தேச அரசுகளின் எழுச்சி<br>(i) தேசிய வாதம் | 43 |
| 6. | முப்பது ஆண்டுகாலப் போர் | 46 |
| 7. | கருணையுள்ள சர்வாதிகள்<br>(i) ஹிட்லர்<br>(ii) முசோலினி<br>(iii) ஸ்டாலின் | 47 |
| 8. | பிரெஞ்சி புரட்சி | 50 |
| 9. | பயங்கரவாத ஆட்சி | 52 |
| 10. | I நெப்போலியன் | 54 |
| 11. | வியன்னா காங்கிரஸ் | 57 |
| 12. | மெட்டர்னிக் | 60 |
| 13. | புனிதக் கூட்டணி | 63 |
| 14. | ஐரோப்பாவின் தொடர்பு | 67 |
| 15. | இத்தாலியை ஒருங்கிணைத்தல் | 70 |
| 16. | ஜெர்மனியை ஒருங்கிணைத்தல் | 74 |
| 17. | பிஸ் மார்க் | 78 |
| 18. | கிழக்கு பிரச்சனை | 80 |
| 19. | முதல் உலக போர் | 82 |

| | | |
|---|---|---|
| | (i) இரகசிய கூட்டணிகள்<br>(ii) செராஜாவோ படுகொலை<br>(iii) போரின் முடிவு | |
| 20. | பாரிஸ் அமைதி மாநாடு | 86 |
| 21. | வெர்செய்ஸ் ஒப்பந்தம் | 88 |
| 22. | லீக் ஆஃப் நேஷனல் | 90 |
| 23. | ரஷ்யப் புரட்சி | 92 |
| 24. | பாசிச இத்தாலி | 94 |
| 25. | நாசிச ஜெர்மனி | 95 |
| 26. | பெரும் மந்தநிலை | 96 |
| 27. | இரண்டாம் உலகப் போர் | 100 |
| 28. | ஐ.நா. அமைப்பு | 104 |
| 29. | இங்கிலாந்தின் வரலாறு | 106 |
| 30. | I ஜேம்ஸ் மற்றும் பாராளுமன்றத்துடனான உறவு | 112 |
| 31. | I சார்லஸ்<br>(i) நீண்ட பாராளுமன்றம் | 114 |
| 32. | ஸ்டுவர்ட்களின் கொள்கை | 118 |
| 33. | உள்நாட்டுப் போர் | 122 |
| 34. | பொது சட்டம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் | 124 |
| 35. | ஆலிவர் கிராம் வெல் | 127 |
| 36. | ஸ்டூவர்ட்ஸ் | 128 |
| 37. | II சார்லஸ் | 130 |
| 38. | பிரிட்டனில் கட்சி அமைப்புகளின் தோற்றம் | 131 |
| 39. | II ஜேம்ஸ் | 135 |
| 40. | புகழ்பெற்ற புரட்சி | 138 |
| 41. | III வில்லியம் மற்றும் மேரி | 142 |
| 42. | ராணி அன்னே | 146 |
| 43. | யூனியன் சட்டம் | 150 |
| 44. | இங்கிலாந்தில் அமைச்சரவை அமைப்பு | 153 |
| 45. | அமெரிக்க சுதந்திர போர் | 155 |
| 46. | தொழிதுறை மற்றும் விவசாய புரட்சி | 157 |
| 47. | ராணி விக்டோரியா சகாப்தம் | 163 |
| 48. | V ஜார்ஜ் | 167 |
| 49. | பார்லிமென்ட் சட்டம் 1911 | 170 |


www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 50. | VI ஜார்ஜ் | 174 |
| 51. | இங்கிலாந்து இரண்டிற்கும் இடையே உலகப் போர்கள் | 178 |
| 52. | வின்ஸ்டன் சர்ச்சில் | 180 |
| 53. | லார்ட் அட்லி | 183 |
| 54. | இரண்டாம் எலிசபெத் மகாராணி | 190 |



# UG TRB – HISTORY – 2022-23

## UNIT – IX

## ஐரோப்பாவின் வரலாறு

### 9.1. கான்ஸ்டான்டி நோபிள் வீழ்ச்சி – 1453 (ஏப்ரல் 6 – மே 29)

- கிழக்கு ரோமானிய பேரரசு என்பது **பைசாண்டைன் பேரரசு** (அல்லது) **பைசான்டியம்** என்றும் குறிப்பிடப்படுகிறது
- 324-இல், பண்டைய நகரமான பைசாண்டியம் கோஸ்டான் டினூபோலிஸ் ரோமானிய பேரரசர் கான்ஸ்டைன் – I -இன் கீழ் நிறுவப்பட்ட பின்னர் **"கான்ஸ்டன்டைன் நகரம்"** அல்லது **கான்ஸ்டான்டினோபிள்** என்ற பெயரைப் பெற்றது
- கான்ஸ்டான்டிநோபிள் இன்று "இஸ்தான்புல்" நவீன துருக்கியில் உள்ளது.
- மேற்கு நாடுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு ரோமானியப் பேரரசின் எஞ்சியிருக்கும் ஒரே தலைநகரமாக நகரம் மாறியது.
- 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து 13 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்,ரோப்பாவின் மிகப்பெரிய மற்றும் செல்வந்த நகரமாக இருந்தது
- மத்திய தரைக்கடலின் கலாச்சாரம் மற்றும் கல்வியின் மையமாகவும் இருந்தது.
- கிறிஸ்துவ **மதகுருமாரின் இல்லமாகவும்** கிறிஸ்துவ மண்டலத்தின் **பாதுகாவலராகவும்** கிறித்துவத்தை முன்னேற்றுவதில் கருவியாகவும் இருந்தது.
- மக்களின் மொழியில் கான்ஸ்டான்டிநோபிள் பயபக்தியுடன் குறிப்பிடப்பட்டது.
- கிழக்கு மரபுவழி தேவாலயத்தின் கதீட்ரல், ஹாகியா சோபியா போன்ற கட்டிடக்கலை தலைசிறந்த படைப்புகளுக்கு நகரம் பிரபலமானது
- பாரம்பரியமான கோட்டைகளுக்கு புகழ் பெற்றது
- இந்த நகரம் ரோமுக்கு போட்டியாக கட்டப்பட்டது

- மேலும் அதன் சுவர்களுக்குள் **உள்ள பல உயரங்கள் ரோமின் "ஏழு மலைகளுடன்"** பொருந்துவதாகக் கூறப்பட்டுள்ளது
- கிழக்கு மத்தியத் தரைக்கடல் மற்றும் மேற்கு ஆசியாவின் செல்வம் கான்ஸ்டான்டினோப்பிளில் பாய்ந்தது.
- 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெரும்பகுதியைக் சிலர் கைப்பற்றினர்.
- மேற்கில் இருந்து தாக்குதலால் **"கான்ஸ்டான்டி னோப்பிளை"** அச்சுறுத்தினர்.
- அதே நேரத்தில் **"பாரசீக சாசனிடுகள்"** கிழக்கு மாகாணத்தை மூழ்கடித்து அன்டோலியாவிற்குள் ஆழமாக ஊடுருவினர்.
- 8-9 ஆம் நூற்றாண்டுகளில் **"ஐகானோக்ளாஸ்ட் இயக்கம்"** பேரரசு முழுவதும் தீவிர அரசியல் அமைதியின்மையை ஏற்படுத்தியது.



**கான்ஸ்டன்டைன்**




### கான்ஸ்டான்டினோபிளின் வீழ்ச்சி

- கான்ஸ்டான்டினோப்பிளின் வீழ்ச்சி ஒட்டோமான் பேரரசால் கைப்பற்றப்பட்டது.
- 29, மே -1453 – அன்று நகரம் வீழ்ந்தது
- ஏப்ரல் -6 அன்று தொடங்கி 53-நாள் முற்றுகையின் உச்ச கட்டமாக இருந்தது
- கான்ஸ்டான்டினோப்பிளின் பாதுகாவலர்களை விட அதிகமாக இருந்தது ஒட்டோமான் இராணுவம்.

- 21 வயதான சுல்தான் **மெஹ்மத் கான்ஸ்டான்டிநோப்பிளை** புதிய ஒட்டோமான் தலைநகராக மாற்றினார். **"அட்ரியானோபிளை"** என்று பெயரிட்டார்.
- நகரத்தின் வீழ்த்தி இராணுவ வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது
- பழங்காலத்தில் இருந்தே, நகரங்களும் அரண்மனைகளும் படையெடுப்பாளர்களைத் தடுக்க கோட்டைகள் மற்றும் சுவர்களை சார்ந்திருந்தன.
- கான்ஸ்டான்டிநோப்பிளின் சுவர்கள், குறிப்பாக தியோடோசியன் சுவர்கள், அந்த நேரத்தில் உலகின் மிகவும் மேம்பட்ட தற்காப்பு அமைப்புகளாக இருந்தன.
- முற்றுகைப் போரில் ஒரு மாற்றத்தை முன்னறிவிக்கும் வகையில், குறிப்பாக பெரிய பீரங்கிகளின் மற்றும் குண்டுவீச்சுகளின் வடிவில் துப்பாக்கி பொடிகளைப் பயன்படுத்தி இந்தக் கோட்டைகள் முறியடிக்கப்பட்டன.

**முற்றுகையின் தொடக்கம்**

- நகருக்கு வெளியே பைசண்டைன் கோட்டைகளைக் குறைக்க **"மெஹ்மத்"** தனது சிறந்த துருப்புக்களில் சிலவற்றை அனுப்பினார்.
- போஸ்பரஸில் உள்ள **தெரபியா கோட்டையும்**, மர்மாரா கடலுக்கு அருகில் உள்ள **ஸ்டுடியஸ் கிராமத்தில்** உள்ள ஒரு சிறிய கோட்டையும் சில நாட்களில் எடுக்கப்பட்டது.
- மர்மாராக கடலில் உள்ள இளவரசர் தீவுகள் அட்மிரல் பால்டோக்லுவின் கடற்படையால் கைப்பற்றப்பட்டன.
- மெஹ்மத்தின் பீரங்கிகள் சுவர்களில் பல வாரங்களாகச் சுட்டுத் தாக்கியது.
- ஆனால் அவற்றின் துல்லியமற்ற தன்மை மற்றும் மிக மெதுவான தீ விகிதத்தின் காரமணமாக, பைசண்டைன்கள் ஒவ்வொரு துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகும் பெரும்பாலான சேதங்களைச் சரிசெய்து, ஒட்டோமான் பீரங்கிகளின் விளைவைத் தணிக்க முடிந்தது.
- வெளிநாட்டுக் கப்பல்கள் **கோல்டன் ஹார்னுக்குள் நுழைவதைத் தடுப்பதே** கடற்படையின் **முக்கியப்** பணிகளில் ஒன்றாக இருந்தது
- ஏப்ரல் -20 அன்று, நான்கு கிறிஸ்தவக் கப்பல்களைக் கொண்ட சிறிய கப்பல் சில கடுமையான சண்டைகளுக்குப் பிறகு உள்ளே வரமுடிந்தது. இது பாதுகாவலர்களின் மன உறுதியை வலுப்படுத்தியது
- மெஹ்மத் கோல்டன் ஹார்னின் வடக்குப் பகுதியில் குறுக்கே நெய் தடவிய மரக்கட்டைகளால் சாலை அமைக்க உத்தரவிட்டார்.

- ஏப்ரல் -28-இரவு, கோல்டன் ஹார்னில் உள்ள ஒட்டோமான் கப்பல்களை “தீயணைப்புக் கப்பல்களைப்” பயன்படுத்தி அழிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- 40 இத்தாலியர்கள் மூழ்கும் கப்பலில் இருந்து தப்பி வடக்கு கரைக்கு நீந்தினர். மெஹ்மத்தின் உத்தரவின் பேரில், அவர்கள் கழுமரத்தில் தூக்கலிடப்பட்டனர்.
- ஒட்டோமன்இராணுவம் கான்ஸ்டான்டினோப்பிளின் நிலச் சுவரில் பல தாக்குதலை நடத்தியது.
- மே -25 வரை சுரங்கங்களை உருவாக்குவதன் மூலம் சுவர்களை உடைக்க முயன்றனர்.
- பைசாண்டைன் துருப்புகள் சுரங்கத்திற்குள் நுழைந்துசுரங்கத் தொழிலாளர்களைக் கொல்ல அனுமதித்தார்.
- மே -23 பைசாண்டைன்கள் இரண்டு துருக்கிய அதிகாரிகளைக் கைப்பற்றி சித்திரவதை செய்தனர்.
- மெஹ்மத் கான்ஸ்டான்டினோபிளுக்கு ஒரு தூதரை அனுப்பினார். மேலும் அவர்கள் நகரத்தை அவருக்குக் கொடுத்தால் முற்றுகையை நீக்குவதாகக் கூறினார்.
- இந்த நேரத்தில் **மெஹ்மத்** தனது மூத்த அதிகாரிகளுடன் இறுதிக் குழுவை நடத்தினார்.




## Byzantine disposition and taetise (பைசாண்டைன் மனநிலை மற்றும் போர் நிலை)

- மேற்கிலிருந்து உதவி வரும் வரை தாங்களை காத்துக் கொள்ள முடியும் என்று பாதுகாவலர்களுக்கு காரணத்தை அளித்தது அரசு.
- பைசண்டைன் சுவர்களை முழுவதுமாக ஆக்கிரமிக்க போதுமானதாக இல்லாததால், வெளிப்புற சுவர்கள் மட்டுமே பாதுகாக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டது

- ❖ கான்ஸ்டன்டைன் மற்றும் அவரது கிரேக்க துருப்புக்கள் நிலச் சுவர்களின் நடுப்பகுதியான **“மெசோடீச்சியோனை”** காத்தனர்.
- ❖ நகரத்தில் இரண்டு தந்திர இருப்புக்கள் நிறுத்தினர். ஒன்று நிலச்சுவர்களுக்குப் பின்னால், பெட்ராமாவட்டத்தில் மற்றொன்று ஆகும்
- ❖ பைசண்டைன்களும் பீரங்கிகளை வைத்திருந்தாலும், அந்த ஆயுதங்கள் ஒட்டோமான்களின் ஆயதங்களைவிட மிகவும் சிறியதாக இருந்தன.
- ❖ இந்த நேரத்தில் **“ஐரோப்பாவில் சிறந்த பாதுகாக்கப்பட்ட நகரம்”** என்றும் கூறப்பட்டது.

**ஒட்டோமான் போரின் உத்திகள்**




- ❖ நகரத்தை கடலில் இருந்து முற்றுகையிட **மெஹ்மத்** ஒரு கப்பற்படையை **கல்லி போலியில்** நிறுத்தியதாக கூறப்படுகிறது.
- ❖ கான்ஸ்டான்டி நோபிள் முற்றுகைக்கு முன், ஒட்டோமான்கள் நடுத்தர அளவிலான பீரங்கிகளை வீசும் திறனைக் கொண்டிருந்தனர்.
- ❖ **12 முதல் 62** பீரங்கிகள் நிலை நிறுத்தினர்
- ❖ பீரங்கி குண்டுகள் மிகக் குறைந்த விநியோகத்தில் இருந்தன.
- ❖ பீரங்கிகள் ஆறு வாரங்களுக்குப் பிறகு பின்னடைவின் கீழ் சரிந்ததாகக் கூறப்படுகிறது.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- ❖ இறுதித் தாக்குதலுக்காக **"மெஹ்மது" 70 பெரிய** பீரங்கிகள் கொண்ட ரயிலை எடிர்னில் உள்ள அவரது தலைமையகத்திலிருந்து இழுத்துச் செல்லப்பட்டது
- ❖ தியோடோசியன் சுவர்களைத் தக்க மெஹ்மத் திட்டமிட்டார்.
- ❖ ஒட்டோமான் இராணுவத்தின் பெரும்பகுதி கோல்டன் ஹார்னுக்கு தெற்கே முகாமிட்டிருந்தது
- ❖ ஐரோப்பிய துருப்புக்கள் சுவர்களின் முழுநீளத்திலும் நின்றனர்
- ❖ துப்பாக்கிகள் மற்றும் உயரடுக்கு **Janissary** படைப்பிரிவுகள் நிலை நிறுத்தப்பட்டன.
- ❖ நோய்களை தடுக்க, சடலங்களை எரிக்க, கழிவுகளை அகற்ற தண்ணீர் ஆதாரமாக இருக்கும் என்பதில் கவனமாக இருந்தனர்.

## இறுதித் தாக்குதல்

- ❖ ஒட்டோமான்கள் பொதுத் தாக்குதலுக்குத் தங்கள் ஆள்பலத்தை விரிவாகத் திரட்டினர்.
- ❖ மே-28 அன்று இறுதித் தாக்குதல் தொடங்கப்படுவதற்கு முன், சிப்பாய்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டது
- ❖ பைசண்டைன் பக்கத்தில் **12 கப்பல்களைக்** கொண்ட ஒரு சிறி வெனிஸ் கடற்படை இருந்தது
- ❖ ஒட்டோமான்கள் 55,000 பவுண்டுகள் துப்பாக்கியைப் பயன்படுத்தி தங்கள் பீரங்கிகளில் இருந்து 5000 ஷாட்களைச் சுட்டனர்.
- ❖ ஒட்டோமான் பேரரசின் கிறிஸ்தவ துருப்புக்கள் முதலில் தாக்கின.
- ❖ துர்க்மென் கூலிப்படையினர் சுவர்களின் இந்த பகுதியை உடைத்து நகரத்திற்குள் நுழைந்தனர்
- ❖ இறுதியாக உயரடுக்கு ஜானிசரிகளைக் கொண்ட கடைசி அலை, நகரச் சுவர்களைத் தாக்கியது
- ❖ கான்ஸ்டைன், போர்வீரர்கள் ஜானிஸரிகளுக்கு எதிராக தங்கள் நிலைப்பாட்டை தொடர்ந்தனர்
- ❖ கான்ஸ்டன்டைன் வீரர்களால் தடுக்க முடியவில்லை போராட்டத்தில் சிலர் வீடு, திரும்பினர், சரண் அடைந்தனர், சிலர் பின்வாங்கினர்
- ❖ நகரத்தைத் தாக்க முடிவாக இருந்தனர்

- திடீர் புயலுக்குப் பிறகு சாக்கடைகளில் மழைநீர் போல, நகரத்தில் இரத்தம் பாய்வதையும், துருக்கியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் உடல்கள் “கால்வாயில் முலாம்பழம் போல” கடலில் மிதப்பதையும் வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்தனர்.

**கான்ஸ்டான்டினோப்பிளின் காலவரிசை**

- கி.பி – 330 – கான்ஸ்டான்டிநோபிள் நிறுவப்படுதல்
- கி.பி – 404/05 – தியோடோசியன் சுவர்களின் கட்டுமானம்
- கி.பி – 474 – கான்ஸ்டான்டினோப்பிளின் பெரும் தீ
- கி.பி – 626 – கான்ஸ்டான்டினோப்பிளின் முதல் முற்றுகை
- கி.பி- 674 -678 – கான்ஸ்டான்டினோப்பிளின் முதல் அரபு முற்றுகை
- கி.பி- 717 – 718 – கான்ஸ்டான்டினோப்பிளின் இரண்டாவது முற்றுகை
- கி.பி- 1204 – கான்ஸ்டான்டினோப்பிள் பதவி நீக்கம்
- கி.பி – 1261 – கான்ஸ்டான்டினோப்பிள் மீண்டும் கைப்பற்றுதல்
- கி.பி – 1391 – கான்ஸ்டான்டினோப்பிளின் முதல் ஒட்டோமான் முற்றுகை
- கி.பி – 1394 – 1402 – கான்ஸ்டான்டினோப்பிளின் இரண்டாவது ஒட்டோமான் முற்றுகை
- கி.பி – 1411 – கான்ஸ்டான்டினோப்பிளின் மூன்றாவது ஒட்டோமான் முற்றுகை
- கி.பி – 1422 – கான்ஸ்டான்டினோப்பிளின் நான்காவது ஒட்டோமான் முற்றுகை
- கி.பி – 1453 – கான்ஸ்டான்டினோப்பிளின் வீழ்ச்சி May – 29 – 1453

**கான்ஸ்டான்டிநோபிள் வீழ்ச்சிக்குப்பின் ஏற்பட்ட விளைவுகள்**

- ஒட்டோமன் பேரரசு – நவீன துருக்கியை மையமாகக் கொண்ட ஒரு துருக்கிய சுல்தானிய பெரிய அரசு
- இந்த வெற்றிக்குப் பிறகு **பேரரசாக மாறியது**
- **மெஹ்மத் – II** “தி கான்குவரர்” என்ற பட்டத்தையும் பெற்றார் (போருக்குப்பின்)
- தென்கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஆசியாவின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்திய பேரரசு
- ஐரோப்பாவிலும் மறுமலர்ச்சி காலம் தொடங்கியது
- பீரங்கிகளும் துப்பாக்கி மருந்துகளும் பயன்படுத்தப்பட்டது
- ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமான நிலவழி பாதை துருக்கியரின் கையில் வந்தது.

- இசுலாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் சிலுவை போர்கள் நடைபெறுவதற்கு காரணமாக இருந்தது
- அடுத்த 53 ஆண்டுகளில் 1526 – பீரங்கி இந்தியா வருவதற்கு (துருக்கியர்) இது காரணமாயிற்று.
- முகலாய பேரரசுக்கு அடித்தளம் அமைத்தார்.

## 9.2. இத்தாலியின் மறுமலர்ச்சி

### மனிதாபிமானம்

- மனிதாபிமானம் என்னும் கருத்து மறுமலர்ச்சியின் மையக்கூறாகும். இது கண்ணியத்தையும் இயல்பையும் வலியுறுத்தியது.
- இடைக்காலத்தில் மனிதர்கள் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதாகவே படைக்கப்பட்ட முகவர்கள் என்ற கருத்து நிலவியது.
- மேலுலகம் நோக்கிய அவர்களின் பார்வையை இவ்வுலகம் நோக்கித் திரும்பியது
- ஆன்மீக உலகிலிருந்து பொருள் உலகை நோக்கித் திருப்பியது.

### மறுமலர்ச்சிக்கான காரணங்கள்

- சிலுவைப் போர்களின் போது (முஸ்லீம் ஆட்சியில் இருந்து புனித நிலத்தை மீட்பதை குறிக்கோளாக கொண்ட சமயப்போர்கள்) ஏற்பட்ட புதிய அனுபவங்கள் வாயிலாக **இலண்டன், ஆண்ட்வெர்ப், ஹாம்பர்க்** ஆகிய சுதந்திரமான வர்த்தக நகரங்கள் உருவானது.
- பல பயணிகள் வந்து சென்றதும் மறுமலர்ச்சியின் பிறப்புக்குத் தேவையான தொடக்க நிலைமைகளை உருவாக்கின.
- தத்துவார்த்த விவாதங்கள் பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கி, பல அறிவார்ந்த மக்களை உருவாக்கியது. 13 ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க அறிவார்ந்த நபர்களில் முதன்மையானவர் **ரோஜர்பேக்கன் (1214 – 1294)** என்பவர் ஆவர்.
- **நவீன நடைமுறைச் சோதனை அறிவியலின் தந்தை** என அழைக்கப்படுபவர். அவர் மனித குலமானது சமய மரபு மற்றும் அதிகாரத்தினால் ஆட்சி செய்யப்படாமல் காரண காரியங்களால் ஆட்சி செய்யப்பட்ட வேண்டும் என்று விரும்பினார்.
- துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி **பைசாண்டியப் பேரரசிடம்** இருந்து ஒரு கோரிக்கையுடன் 1393 ஆம் ஆண்டில்

கான்ஸ்டாண்டி நோபிளைச் சேர்ந்த பிரபல அறிஞர் **மானுவேல் கிரைசாலோரஸ்** வெனிஸ் நகருக்கு சென்றார்.

- செவ்வியல் அறிஞர்கள் மேற்கத்திய ஐரோப்பாவிற்கு சென்றதால் செவ்வியல் படைப்புகளை கற்கும் நடவடிக்கைகள் ஊக்கம் பெற்றன.
- சீனாவில் இரண்டாம் நூற்றாண்டில் காகிதம் தோன்றியிருந்தாலும், ஜெர்மனிக்கு காகிதம் 14 ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. அதன்பிறகு **ஜோவின்னஸ் குட்டன்பெர்க்** என்பவரால் நகரும் தட்டச்சு அல்லது அச்சகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.
- இத்தாலி மறுமலர்ச்சி காலத்தில் மிகச்சிறந்த ஓவியக் கலைஞர்களை ஆதரித்த பெருமை ஐந்தாம் நிக்கோலஸ், **இரண்டாம் பயஸ், இரண்டாம் ஜீலியஸ்** மற்றும் பத்தாம் லியோ ஆகிய போப்பாண்டவர்களையே சாரும்.

**மறுமலர்ச்சியின் தாயகமாக பிளாரன்ஸ்**

- பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவரான **ஜீயோவனி பொக்காசியோ** (1313 – 1375) பிளேக் என்ற கருங்கொள்ளை நோயிலிருந்து தப்பிக்கும் பொருட்டு, பிளாரன்ஸ் நகருக்கு வெளியே குடியிருப்பில் தங்கியிருந்த போது கூறியதாக 100 கதைகளின் தொகுப்பை **டெக்கமரான்** என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிடல்.

**நிக்கோலோ மாக்கியவல்லி – 1469 – 1527**

- நிக்கோலோ மாக்கிய வல்லியின் **தி பிரின்ஸ்** என்ற படைப்பு ஆட்சியாளர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக அமைந்தது.
- தாம் ஆளும் நாட்டின் அதிகாரம் மற்றும் பாதுகாப்பை பராமரிப்பது ஒரு ஆட்சியாளரின் தலையாய கடமை என்று அவர் கருத்து கொண்டிருந்தார்.
- நீதி அல்லது கருணை அல்லது ஒப்பந்தங்களை பின்பற்றுவது ஆகியன இவரின் தலையாய கடமைக்கு குறுக்கே வரக்கூடாது.

**கலையின் மீதான தாக்கம்**

- மறுமலர்ச்சிக்கால ஓவியங்களும் சிற்பங்களும் எதார்த்தப் பண்புடனும் இயல்பு சார்ந்த இயற்கையான தன்மையுடனும் அமைந்தவை.
- மத்தியகால ஓவியங்கள், சிற்பங்களின் அமைப்பிலிருந்து மேம்படுத்தப்பட்டவை. மத்தியகாலப் படைப்புகள் அழகியல் பாணியில், எதார்த்தமற்றவையாகவும் இரட்டைப் பரிமாணம் கொண்டவையாகவும் அமைந்திருந்தன.

**லியானர்டோ டாவின்சி 1452 – 1519**

- ❖ பல்துறைகளில் திறன்மிகுந்த ஒரு மேதை அவர் ஓர் ஓவியர், சிற்பி, கட்டடவடிவமைப்பாலர், ராணுவப் பொறியியலாளர் உடற்கூறியல் வல்லுநர் மற்றும் கவிஞர்.
- ❖ பண்ணையில் வேலை பார்த்த பணிப்பெண்ணின் மகன் ஆவார். லத்தீன் மற்றும் கணிதத்தை அவர் சுயமாக கற்றுத் தேர்ந்தார்.
- ❖ மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஆவர். பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட டாவின்சி, **மறுமலர்ச்சிகால மனிதர்** என்று அழைக்கப்பட அனைத்துத் தகுதிகளையும் கொண்டு திகழ்ந்தார்.
- ❖ **வர்ஜீன் ஆஃப் தி ராக்ஸ் (Virgin of the Rocks), இறுதி விருந்து (The last Supper), மோனலிசா (Monolisa)** ஆகியன டாவின்சியின் மிகச் சிறப்பான படைப்புகளில் ஒன்றாகும்.
- ❖ வர்ஜின் ஆஃப்தி ராக்ஸ் என்ற ஓவியப்படைப்பில் **கன்னிமேரி** இருட்டில் இருந்து வெளியே வருவார். இளையவரான ஜானை **பிராட்டஸ்டன்ட்** கிறித்தவக் குழந்தையாகக் கொண்டிருப்பார்.
- ❖ மிஸானில் உள்ள டொமினிகன் துறவிகள் மடத்துக்காக இயேசு சிலுவையில் அறையப்படும். முன் அவரது சீடர்களுடன் உண்ட இறுதி விருந்தை, 'Last Supers' அவர் ஓவியமாகத் தீட்டினார்.
- ❖ புகழ்பெற்ற மோனலிசா ஓவியம் பிளாரன்ஸைச் சேர்ந்த செல்வந்த வணிகரான **பிரான்ஸிஸ் கோடெல் ஜியோ கோண்டோவின்** மனைவி லிலோ கெரார்டினியின் உருவமாக கருதப்படுகிறது. **ஜியோகோண்டோ** இதனை வெளியிட்டார்.

**மைக்கேல் ஆஞ்சிலோ 1475 – 1564**

- ❖ 1460 களில் பைபிளின் நாயகரான **டேவிட்டின்** உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்தும் சிறப்பான ஓவியத்தை முதன்முதலில் வரைந்த ஓவியர்களில் **டொனடெல்லோவும்** ஒருவராவார்.
- ❖ மறுமலர்ச்சி காலத்தின் மிகப்பெரிய சிற்பியான மைக்கேல் ஆஞ்சிலோ டி லொடோவிகோ ப்யூனரோட்டி சைமோனியை அவரின் ஆளுமை பெரும் தக்கத்தை ஏற்படுத்தியது.
- ❖ போப்புகளால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயம் மைக்கேல் ஆஞ்சிலோவால் நவீனமயமானது.

❖ புகழ்பெற்ற **பியட்டா** என்ற கன்னிமரியாளின் சிலையையும் அவர் வடித்துள்ளார்.

❖ மத்திய இத்தாலியின் **கெர்ரேராவில்** இருந்து கொண்டுவரப்பட்ட நரே பளிங்குக் கல்லில் இந்தசிலை வடிக்கப்பட்டது.

## ரபேல் – 1483 – 1520

❖ ரபேலின் மிகச்சிறந்த படைப்பான **மடோனாவும் குழந்தையும்** என்ற பெயரிடப்பட்ட ஓவியமானது கன்னிமரியாளும் குழந்தை இயேசுவும் இருப்பதை சித்தரிப்பதாக உள்ளது.

❖ போப் இரண்டாவது ஜீலியாஸின் நூலகச் சுவர்களில் பல சமயக் கருப்பொருள்களில் ரபேல் அவர்கள் வரைந்த ஓவியங்கள் அலங்கரித்தன.

❖ மறுமலர்ச்சி கால கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் **ஏதென்ஸ் பள்ளி** குறித்த கருப்பொருள் அவற்றில் ஒன்றாகும்.

❖ ஆன்மீகத்துக்கும், மனித நேயத்துக்கும் இடையே அவர் வாழ்ந்த காலங்களில் நிலவிய தத்துவார்த்த விவாதத்தை வெளிப்படுத்தும்.

## மறுமலர்ச்சி காலத்தின் போது அறிவியல்

❖ பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலத்தின் போது அறிவியல் அதிவேக வளர்ச்சி பெற்று அறிவியல் புரட்சிக்கு வித்திட்டது.

❖ போலந்து நாட்டு விஞ்ஞானியான நிக்கோலஸ் கோபர்நிகஸ் (1473 – 1543) சூரியக் குடும்பத்தில் சூரியன் மையத்தில் உள்ளது. பூமியும் இதரக் கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன என்ற **சூரியமையக் கோட்பாட்டை** கண்டறிந்து வெளியிட்டார்.

❖ இந்தக் கொள்கைக்கு மாறாக **பூமியை மையமாகக்** கொண்டு கோள்கள் செயல்பட்டதாக தேவாலய நிர்வாகம் கருத்துகொண்டிருந்தது.

❖ பூமி சூரியனைச் சுற்றி வருவதாக வலியுறுத்திய **ஜியார்டனோ புரூனோ** என்ற இத்தாலியர் **1600** இல் ரோமில், தேவாலய நிர்வாகத்தில் எரிக்கப்பட்டார்.

❖ சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் சுற்றும் சூரியமையக் கோட்பாட்டுக்கு மிக முக்கியமான வானியல் ஆதாரத்தை **பிரபல வானியது நிபுணர் கலிலோ கலிலி** (1564 – 1642) வெளியிட்டார்.

❖ ஒரு தொலைநோக்கி கொண்டு **வியாழன் கிரகத்தின் செயற்கைக்கோள்கள், சனி கிரகத்தின் சுற்றுவட்டங்கள், சூரியனின் பள்ளிகள்** ஆகியவற்றை அவர் கண்டுபிடித்தார்.

❖ கோபர்நிகஸின் கருத்துகளை அவர் ஏற்றார். தேவால நிர்வாகத்துக்கு எதிரான கருத்துக்களைக் கூறியதாக வழக்கு தொடர்ப்பட்டு அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

❖ பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்களில் முக்கிய மனிதராக **வில்லியம் ஹார்வி** 1578 – 1657 திகழ்ந்தார். அவர் மனித உடலில் இரத்த ஓட்டம் குறித்து இறுதியில் நிரூபித்தார்.

**மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சியின் பரவல் இங்கிலாந்தில் மறுமலர்ச்சி**

❖ இத்தாலியில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி உட்பட ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளில் **மறுமலர்ச்சி** தனது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

❖ இங்கிலாந்தில் அது அழமான அடையாளத்தை ஏற்படுத்தியது. முதலாம் எலிசாபெத் (1558 – 1603) அவர்களின் ஆட்சி, எலிசபெத் காலம் என்று அழைக்கப்பட்டது.

❖ ஆங்கில மறுமலர்ச்சியில் எலிசபெத் காலம் பல அறிஞர்களை உருவாக்கியது. **வில்லியம் ஷேக்ஸ்பீயர், கிறிஸ்டேபெர் மர்லோவ், பிரான்ஸிஸ் பேக்கன்** ஆகியோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

❖ ஆங்கில நாடக ஆசிரியரான கிறிஸ்டோபர் மார்லோவ், **டிடோ, தி குயீன் ஆஃப் கார்தேஜ் டம்பர்லெய்ன் திகிரேட்** ஆகிய முக்கிய படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

❖ ஆங்கில இலக்கியத்தின் முடிசூடா மன்னர் வில்லியம் ஷேக்ஸ்பியர், ஸ்டிராட்போர்டு, **அபான் ஏவன்** என்ற நகரத்தில் பிறந்த அவர் 38 நாடகங்களையும், அன்பு, கோபம், சோகமான நிகழ்வு, ஆகிய மனித உணர்வுகளையும் பல்வேறு உணர்வுகள் குறித்து பல கவிதைகளையும் படைத்துள்ளார்.

❖ எஸ்யூலைக் இட், தி டேமிங் ஆஃப் தி ஷ்ரு(The Taming of the Shrew) மற்றும் மிட் சம்மர் நைட்ஸ் ட்ரீம் (Mid Summer Night's Dream) ஆகியன அவரது **நகைச்சுவை** நாடகங்களாகும்.

❖ **ஒத்தெல்லோ, ஹாம்லெட், கிங்லியர்,** ரோமியோவும் ஜூலியட்டும் ஆகியன சோகமயமான நாடகங்களுக்கு உதாரணங்களாகும். லண்டனில் குளோப் அரங்கில அரங்கேற்றப்பட்ட அவரது நாடகங்கள் பிரசித்தி பெற்றவையாகும்.

❖ ஆங்கில மொழியின் மிகப்பெரிய தாக்கம் பெற்ற அவரது நாடகங்கள் தொழிற் புரட்சிக்குப் பிறகு பிரிட்டன் ஒரு அரசாங்கமாக உருவெடுத்த நிலையில் உலகம் முழுவதிலும் பரவின.

❖ பிரான்ஸிஸ் பேக்கன் அவர்கள், **அனுபவ வாதத்தின் தந்தை** என்று கருதப்படுகிறார். தூண்டல் பகுத்தறிவு என்பதே விஞ்ஞான அறிவின் அடிப்படை

என்று அவர் வாதிட்டார். லத்தீன் மொழியில் அவரால் எழுதப்பட்ட **நோவும் ஆர்கனும்** முக்கிய தத்துவப்படையாக விளங்குகிறது.

**மறுமலர்ச்சியின் விளைவுகள்**

- ❖ தனிநபர்வாதம், மதச்சார்பற்ற தன்மை, தேசியவாதம் ஆகியவற்றை நோக்கிய ஒரு திட்டவட்டமான நகர்வை அது அடையாளப்படுத்தியது.
- ❖ வட்டார மொழியில் எழுதுவது என்பதன் அறிமுகம், நடைமுறையும் தாந்தேயிலிருந்து தொடங்கியது. அது வட்டார மொழிகளின் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தியது.
- ❖ தேசிய அரசுகளின் எழுச்சிக்கு அறிவார்ந்த ஓர் அடித்தளத்தை வழங்கியது. திருச்சபையின் உலகியல் ரீதியான ஊழல் மலிந்த நடைமுறைகளை விமர்சிப்பதில் மறுமலர்ச்சி ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியது.
- ❖ **ஏராஸ்மகம், தாமஸ்மூரும்** மறைமுகமாக மதசீர்த்தவாத இயக்கத்தை உற்சாகப்படுத்தினர்.
- ❖ மறுமலர்ச்சியின் தாயகம் - **இத்தாலி**
- ❖ மறுமலர்ச்சி இயக்கத்தின் தொட்டில் ஐரோப்பாவின் கல்விக்கூடம் - **இத்தாலி**
- ❖ பண்டைய நாகரிகத்தின் தொட்டில் இலத்தீன் மொழியின் தாயகம் - **இத்தாலி**
- ❖ கலை, இலக்கியத்தை போற்றி வளர்த்த இத்தாலிய நகரங்கள் - **பிளாரன்ஸ், வெனிஸ்**
- ❖ இத்தாலியின் முதல் அச்சுக்கூடம் நிறுவப்பட்ட ஆண்டு - 1465
- ❖ உலகில் முதல் அச்சுக்கூடம் நிறுவியவர் - **ஜான் குட்டன்பர்க் - 1454**
- ❖ இவர் ஜெர்மனியின் மெயின்ஸ் நகரை சேர்ந்தவர்.
- ❖ ஜான் குட்டன்பர்க் அச்சிட்ட முதல் நூல் - **விவிலியம் (பைபிள்)**

## இலக்கியத்தில் மறுமலர்ச்சி (Italy)

- ❖ மறுமலர்ச்சி இயக்கத்தின் தனிச்சிறப்பு - பண்டைய கிரேக்க ரோமானிய இலக்கியங்கள் புத்துயிர் பெற்றது. இதற்கு காரணமான அறிஞர்கள்.

### 1. தாந்தே (கி.பி. 1265 - 1321)

- ❖ மறுமலர்ச்சியின் முன்னோடி
- ❖ பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவர், தத்துவ அறிஞர், கவிஞர்.
- ❖ பொலாக்னோ பாத்வா பல்கலைக்கழகங்களில் பயின்றவர்

❖ இவரின் படைப்புகள்.
  ➢ தெய்வீக இன்பியல் - (Divine Comedy) - **புகழ்பெற்ற படைப்பு**
  ➢ டி மானார்கியா
❖ இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றிய இடம் - **பிளாரன்ஸ்**
❖ பிளாரன்ஸ்டன் மறுமலர்ச்சி இயக்கம் தோன்ற காரணமாக அமைந்த தாந்தே படைப்பு - **தெய்வீக இன்பியல்** (இலத்தீன் மொழியில் எழுதப்பட்டது) .
❖ தத்துவம், மதத்துறைக்கு தாந்தே கருத்துக்கள் இலக்கணமாக அமைந்தன.

## 2. பெட்ராரக் (கி.பி. 1304 - 1374)

❖ பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவர். (இத்தாலி)
❖ மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை - **(Father of Renaissance)**
❖ மனிதாபிமான இயக்கத்தின் தந்தை (Father of Humanists)
❖ உலக வாழ்வியல் இயக்கத்தின் தந்தை (மறுபிறப்பு இயக்கத்தின் தந்தை)
❖ பிளாட்டோ,அரிஸ்டாடில், சிசரோ ஆகியோரின் படைப்புகளை சேகரித்து தொகுத்தது அவரது அரும்பணி .
❖ இவரின் சீடர் - **பொக்காசியோ**

### இவரது படைப்புகள்

❖ இரகசியம் (Secret) - அகஸ்டின் முனிவருடன் இவர் செய்த கற்பனை உரையாடல்
❖ ஆப்பிரிக்கா (Africa) - வெர்ஜிலை பின்பற்றி எழுதப்பட்டது. கி.பி. 202 - ல் நடைபெற்ற Zama போர்களத்தில் ஹன்னிபாலைத் தோற்கடித்த ரோம் படைத்தளபதி சிபியோ ஆஃபிரிகானாஸ்-ன் வாழ்க்கை மற்றும் சாதனைகளை இந்நூல் கூறுகிறது. (காப்பியம்) நாத்திக எழுத்தாளர்களுக்கு இவர் எழுதிய கடிதங்களின் தொகுப்பு - அறிமுகமான கடிதங்கள் (Familiar letters)
❖ பண்டைய இலக்கியங்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் - **பெட்ராரக்**

## 3. பொக்காசியோ (கி.பி. 1313 - 1375)

❖ பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவர்
❖ பெட்ராரக்கின் புகழ்பெற்ற சீடர்
❖ இத்தாலிய உரைநடையின் தந்தை

### இவரின் படைப்புகள்

❖ டெக்கமரான் (Deccamaran) - பொக்காசியோவின் புகழ்பெற்ற படைப்பு இதுவாகும் கற்பனை காவியம்

- ❖ காண்டர்பரி கதைகள் (Canterbury Stories) - **சாசா ( இங்கிலாந்து)**
- ❖ டெக்கமரான் கதையை பின்பற்றி எழுதப்பட்டது. கி.பி. 1390-ல் வெளியிடப்பட்டது.
- ❖ டெக்கமரான் 100 கதைகளின் தொகுப்பு ஆகும்.

**4. மாக்கியவல்லி**

1. பிளாரன்ஸ் நகரை சேர்ந்தவர்

   **இவரின் படைப்புகள்**

2. இளவரசன் (The prince) - **அரசியல் அறிவியலின் மிகச்சிறந்த படைப்பு**
3. பிளாரன்ஸ் வரலாறு (History of Flarunce) - **(8 தொகுதிகள்)**
4. மேன்திரகோலா

**5. மேனுவல் கிரிசாலோரஸ் (Manuel Chrysolorus)**

- ❖ கான்ஸ்டான்டி, நோபிளிலிருந்து இத்தாலிக்கு வந்த அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்.
- ❖ பிளாரன்ஸ் நகரில் கிரேக்க மொழி மற்றும் இலக்கியத்தை கற்பித்தார்.

**பிற அறிஞர்கள்**

- ❖ டேசிடஸ், லிவி, சோபோகிளஸ் ஆகியோரின் பண்டைய நூல்களை தேடி தொகுத்தவர் - பிராசியோலினி
- ❖ வாட்டிகன் நூல் நிலையத்தை நிறுவியவர் - போப்பாண்டவர் (ஐந்தாம் நிக்கோலஸ்)
- ❖ இத்தாலிய வரலாறு எழுதியவர் - **செஸ்கோ குய்சியார்டினி**
- ❖ மறுமலர்ச்சி இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்ட இத்தாலிய பிரபுக்கள் - காசிமோ டி மெடிசி, லரான்சோ டி மெடிசி
- ❖ இத்தாலியில் தோன்றிய மொழி ஆராய்ச்சிக் கூடங்கள் - Roman Academy, **Napoleon Academy** - இவைகள் இலத்தின் மொழி இலக்கியங்களை உயிர்ப்பிக்கும் பணியை செய்தது.
- ❖ இத்தாலிய மறுமலர்ச்சியின் பிறப்பிடம் – **பிளாரன்ஸ்**

**கலையில் மறுமலர்ச்சி**

1. கட்டிடக்கலை

- ❖ மறுமலர்ச்சிக் கால புதிய கட்டிடக் கலையின் தந்தை – **புரூனல்ஷி (Brunellischi)**

❖ செயின்ட் பீட்டர் தேவாலயம் (ரோம்) கட்டுவதில் பெரும் பங்காற்றியவர்கள் - பிரமாந்தி (Bramanti), ரபேல், மைக்கேல் ஆஞ்சலோ, பல்லோடியா (pallodia)

## 2. ஓவியம்

### 1. லியானார்டோ டாவின்சி (கி.பி. 1452 - 1519)

❖ மறுமலர்ச்சி கால மனிதர் என்றழைக்கப்பட்டார்.

❖ மிலான் நகர் பிரபுக்கள் ஊக்கம்

**படைப்புகள்**

❖ மோனலிசா - உலகப் புகழ் பெற்ற ஓவியம்(மோனலிசா இயற்பெயர் - ஜியாண்டா)

❖ இறுதி விருந்து (The Last Supper) ஓவியம் (1495-ல் சாந்த மரியா மடாலயச்சுவரில் உள்ளது)

❖ பாறைக்கன்னி (The Virgin of Rocks)

❖ கன்னியும் சிசுவும்

❖ புனிதர் ஆனி

❖ ரத்தம் உடல் முழுவதும் சுற்றி வருகிறது என்று முதலில் கூறியவர் - லியானார்டோ டாவின்சி

### 2. மைக்கேல் ஆஞ்சலோ (கி.பி. 1475 - 1564)

❖ ஓவியர், சிற்பி, கட்டிடக்கலைஞர்.

❖ மெடிசி பிரபுக்கள் குடும்பத்தினரால் ஆதரிக்கப்பட்டார்.

❖ லாரன்சோ டி மெடிசி என்ற பிரபுவின் கீழ் தன் பணியை தொடர்ந்தார். வாடிகன் சிஸ்டைன் தேவாலய ஓவியங்களை இவர் வரைந்தார்.

**படைப்புகள்**

❖ இறுதி தீர்ப்பு (Last Judgement) உலகின் சிறந்த ஓவியங்களுள் ஒன்று)

(The fall of man) (1536 முதல் 1541 வரை இறுதிப்பு ஓவியம் வரையப்பட்டது)

❖ டேவிட், மோசஸ் மைக்கேல் ஆஞ்சலோவின் உலகப் புகழ்பெற்ற சிற்பங்கள் (டேவிட் சிலை சலவைக் கல்லால் ஆனது)

❖ புனித பீட்டர் தேவாலயம் (ரோம் ) - மைக்கேல் ஆஞ்சலோவின் திட்டப்படி கட்டப்பட்டது

### 3. ரபேல் (கி.பி. 1483 - 1520)

❖ ஓவியர்களின் இறைத்தூதர்.

❖ இவர் காலத்தில் இத்தாலிய ஓவியக்கலை உச்சத்தை அடைந்தது

❖ இவர் ஓவியங்கள் பக்திச்சுவையும், அழகுணர்வும் நிறைந்தது.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- II போப் நூலகத்தில் சமயக் கருப்பொருள் ஓவியம் வரைந்தார்.
- சமய உணர்வைத் துண்டும் ஓவியங்கள் படைப்புகள்
  - அன்னை மேரி
  - ஏதென்ஸ் பள்ளி
  - சிஸ்டைன் மடோனா (புகழ் பெற்றது)
- வெனிஸ் நகர புகழ் பெற்ற ஓவியர்கள் - **திதியன், திண்டோரெட்ட**
- பிளாரன்ஸ் நகர புகழ் பெற்ற ஓவியர்கள் - **பாத்திசெல்லி, பிராமென்டி, பெர்னினி**

**சிற்பம்**

- மறுமலர்ச்சி கால சிற்பத்தின் முன்னோடி - **லோரக்சோ கிபர்டி (1378 - 1455)**
- St. George சிலை (பிளாரன்ஸ்), St.Marks சிலை (வெனிஸ்) - **டொன டொல்லா**
- இறந்த கோலியாத் மீது டேவிட் நிற்கும் சிற்பத்தை படைத்தவர் - **டொனடெல்லா**
- மறுமலர்ச்சி கால கட்டிடக்கலைக்கு சான்றாக விளங்குவது - **செயின்ட் பீட்டர் தேவாலயம்**
- நிதியுதவி அளித்தவர்கள் - **2ம் ஜீலியஸ் போப், பத்தாம் லியோ போப்**

## 9.3. ஜெர்மனியில் சீர்திருத்தம் மற்றும் எதிர்சீர்திருத்தம்

**ஜெர்மானிய சீர்திருத்தம்**

- இடைக்கால ஐரோப்பாவில் மக்களில் பெரும்பான்மையான **கிறித்தவர்கள்** கடவுளின் ஆற்றலில் நம்பிக்கை வைத்தார்கள்.
- பிறப்பு முதல் இறப்புவரை பொதுமக்களுக்கு தேவாலயங்கள் தான் முக்கிய மையப்புள்ளியாக விளங்கியது. போப்பாண்டவரின் அதிகாரத்துக்கு மதித்து நடக்காத பின்பற்றாத ஒரு சில போக்குகளும் அவ்வப்போது இருந்தன.

**சீர்திருத்த இயக்கத்துக்கான காரணங்கள்**

- பாவமன்னிப்பு வழங்கும் முறைக்கு பணம் பெற்றது (ஒருவரின் பாவத்தை மன்னித்து அவருக்கு புனிதத்தை வழங்கும் போப்பாண்டவரின் பாவமன்னிப்புக்கு பணம் பெற்றது) வேண்டியவர்களுக்கு வேலை வழங்குவது.
- தேவாலயப் பணிகளை பணத்துக்கு விற்பது ஆகியன தாக்குதலுக்கு உள்ளானது. போப்பாண்டவரிடம் பாவமன்னிப்பைப் பெற ஏழைகள் பணம் கொடுக்க நேரிட்டதால் அவர்கள் பணமின்றி தவித்தார்கள்.

# QUESTION

1. செப்டம்பர், 1940 இல் லண்டன் மீது குண்டு வீசப்பட்ட நிகழ்வு.

(A).பிலிட்ஸ்க்ரிக் (B).பிலிட்ஸ்

(C).கிலிட்ஸ் (D).டிலிட்ஸ்கிரீக்

2. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் .......... .ஆவார்.

(A).யாமமோடோ B).ஸ்கூஸ்னிக்

C).இரண்டாம் கெய்சர்வில்லியம் D).ஹிரோஹிடோ

3. இங்கிலாந்து ........... ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.

(A).1833 (B).1836

(C).1843 (D).1858

4. பன்னாட்டு சங்கத்திலிருந்து ரஷ்யா வெளியேற்றப்பட்ட ஆண்டு.

(A).1937 (B).1938

(C).1939 (D).1940

5. நிகிலிசவாதிகளுடன் தொடர்புடையவை.

(A).யூதர்களை அழித்தல் (B).U - படகு சம்பவம்

(C).லூசிடானியா சம்பவம் (D).ரஷ்யப் புரட்சி

6. செர்பியா மீது ஆஸ்திரியா போரை அறிவித்த நாள்.

(A).ஜீலை 1, 1914 (B).ஆகஸ்ட் 1, 1914

(C).ஜீலை 28, 1914 (D).செப்டம்பர் 30, 1914

7. மூவர் கூட்டணியில் (Triple Alliance) இடம் பெறாத நாடு.

(A).ஜெர்மனி (B).ஆஸ்திரியா - ஹங்கேரி

(C).இத்தாலி (D).பிரான்ஸ்

8. ______ 1945 இல் முறையாகக் கையெழுத்திட்டதும் இரண்டாம் உலகப்போர் ஓர் முடிவுக்கு வந்தது.

(A). ஜீலை 2 (B). ஆகஸ்ட் 2

(C). ஜீன் 2 (D). செப்டம்பர் 2

9. ______ இல் வின்ஸ்டன் சர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமரானார்.

(A). 1945 (B). 1939

(C). 1940 (D). 1941

10. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?

(A). ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, உதுமானியர்

(B). ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, ரஷ்யா

(C). ஸ்பெயின், போர்ச்சுக்கல், இத்தலி

(D). ஜெர்மனி, ஆஸ்திரிய – ஹங்கேரி, இத்தாலி

11. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

(A). பிரிட்டன் (B). பிரான்ஸ்

(C). டச்சு (D). அமெரிக்க ஐக்கிய நாடுகள்

12. முசோலினி ______ ல் எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தார்

(A). 1935 (B). 1945

(C). 1939 (D). 1940

13. லேட்டரன் உடன்படிக்கை எக்காரணத்தால் முக்கியத்துவமானது?

(A). வாட்டிகன் நகரத்தை ஒரு சுதந்திர அரசாக முசோலினி அங்கீகரித்தார்.

(B). திருச்சபை இத்தாலிய அரசை அங்கீகரித்தது.

(C). (A), (B) இரண்டும்.

(D). (A) மட்டும் சரி.

14. ஹிட்லர் குடியரசு தலைவராகவும், ராணுவத்தின் தலைமை தளபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்ட ஆண்டு.

(A). 1933 (B). 1934

(C). 1935 (D). 1936

15. இரண்டாம் பால்கன் போரின் முடிவில் எந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது?

(A). புகாரெஸ்ட் உடன்படிக்கை

(B). பிரஸ்ட் – லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை

(C). லண்டன் உடன்படிக்கை

(D). பாரிஸ் உடன்படிக்கை

16. செராஜிவோவில் கொல்லப்பட்ட ஆஸ்திரிய இளவரசரின் பெயர்

(A). இரண்டாம் கெய்சர் வில்லியம் (B). பிரான்சிஸ் பெர்டினாண்டு

(C). பிரான்ஸ் ஜோசப் (D). பிரின்ஸப்

**TEACHER'S CARE ACADEMY**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118,7639967359

# UG TRB HISTORY 2022-2023




## UNIT - 10
## History of Modern World

*Your Success is Our Goal....*

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# TEACHER'S CARE ACADEMY

## KANCHIPURAM

## HISTORY

### UNIT - X



# COMPETITIVE EXAM

## For

# UG TRB –HISTORY – 2022-23

www.Padasalai.Net

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

TEACHER'S CARE ACADEMY, KANCHIPURAM
TNPSC-TRB- COMPUTER SCIENCE -TET COACHING CENTER
HEAD OFFICE: NO. 38/23, VAIGUNDA PERUMAL KOIL, SANNATHI STREET, KANCHIPURAM – 1. CELL: 9566535080
B.Off 2: 65C, Thillai Ngr(West), 4th Cross St, Trichy – 620018
B.Off 3: 266-C - Advaitha Ashram Road, Opp to New Bus Stand,Salem - 4.
Trichy: 76399 67359 Salem: 93602 68118

## UG TRB 2022-23 - HISTORY - Unit – X


| S.No. | INDEX | P.No. |
|---|---|---|
| **10.1.** | **இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்** | **1** |
| | 10.1.1. போருக்கு பின் ஐரோப்பாவின் நிலை | 2 |
| | 10.1.2. இரு – துருவ உலகம் உருவாதல் | 3 |
| | 10.1.3. பனிப்போர் எதனால் ஏற்பட்டது. | 4 |
| | 10.1.4. ஸ்டாலினின் வெளியுறவுக் கொள்கைகள் | 5 |
| | 10.1.5. யால்டா மாநாடு (Feb – 1945) (Yalta Conference) | 6 |
| | 10.1.6. போடஸ்டாம் மாநாடு (Potsdam Conference) | 7 |
| | 10.1.7. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் நிறுவப்படல் (Communism Established in Eastern Europe) | 7 |
| | 10.1.8. ரஷ்யர்கள் கிழக்கு ஐரோப்பாவில் தங்கள் பிடியைத் தொடர்ந்து இறுக்கிக் கொள்ளுதல் | 8 |
| | 10.1.9. ட்ரூமன் கோட்பாடு மற்றும் மார்ஷல் திட்டம் | 8 |
| | 10.1.10. கம்யூனிஸ்டுகளின் தகவல் தொடர்பு (The Cominform) | |
| | 10.1.11. செக்கோஸ்லோவக்கியாவை கம்யூனிஸ்ட் கைப்பற்றுதல் (1948 பிப்ரவரி) | 9 |
| | 10.1.11. பெர்லின் முற்றுகை மற்றும் விமானப் போக்குவரத்து | 10 |
| **10.2.** | **ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation)** | **11** |
| | 10.2.1. அறிமுகம் | 11 |
| | 10.2.2. ஐக்கிய நாடுகள் நிறுவப்படுதல் | 12 |
| | 10.2.3. ஐ.நா. வின் நோக்கம் | 15 |

| | | |
|---|---|---|
| | 10.2.4. பொதுச் சபை | 16 |
| | 10.2.5. பாதுகாப்பு சபை | 17 |
| | 10.2.6. பொருளாதார சமூக அவை | 18 |
| | 10.2.7. அறங்காவலர் குழு (அ) தர்மகர்த்தா சபை | 19 |
| | 10.2.8. பன்னாட்டு நீதி மன்றம் | 19 |
| | 10.2.9. தலைமைச் செயலகம் | 21 |
| **10.3.** | **ஐ.நா.வின் சாதனைகள்** | **22** |
| | 10.3.1 கொரியப் போர் (1950 – 1953) | 22 |
| | 10.3.2. ஐ. நா. வின் இதர முக்கிய துணை அமைப்புகள் | 23 |
| | 10.3.3. பொது செயலாளர்களின் பட்டியல் | 24 |
| | 10.3.4. ஐ.நா. பொது சபையின் – நாடுகளுக்கிடையேயான சிக்கல்களை தீர்க்கும் முயற்சிகள் | 26 |
| | 10.3.5. அரசியல் சாராத பணிகள் | 27 |
| | 10.3.6. ஐ.நா.வின் துணை நிறுவனங்கள் | 28 |
| **10.4.** | **கெடுபிடிப் போர் (அ) பனிப்போர் – (Cold War)** | **33** |
| **10.5.** | **நேட்டோ (NATO – North Atlantic Treaty Organization 1949)** | **35** |
| **10.6.** | **சீட்டோ (SEATO) (அ) மணிலா ஒப்பந்தம் (1954)** | **35** |
| **10.7.** | **சென்டோ (CENTO) அல்லது பாக்தாத் ஒப்பந்தம் (1955)** | **36** |
| **10.8.** | **வார்சா ஒப்பந்தம் (1955 மே 14)** | **37** |
| **10.9.** | **அரபு லீக் - 1945** | **37** |
| **10.10.** | **தென் கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் (ASEAN - Association of South East Asian Nations)** | **41** |
| **10.11.** | **ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC - European Economic Community)** | **41** |
| **10.12.** | **அணிசேரா இயக்கம் 1955 (NAM)** | **43** |

| | | |
|---|---|---|
| 10.13. | காமன் வெல்த் (Commonwealth) | 44 |
| 10.14. | சார்க் மற்றும் மண்டல அமைப்புகள் (SAARC- South Asian Association for Regional Co-Operation) | 45 |
| 10.15. | ஒபெக் கூட்டமைப்பு - OPEC – (Organization of the Petroleum Exporting Countries) | 46 |
| 10.16. | ப்ரிக்ஸ் [BRICS – (Brazil, Russia, India, China and South Africa)] | 49 |
| 10.17. | இலத்தின் அமெரிக்க நாடுகள் | 54 |
| 10.18. | பிடல் காஸ்ட்ரோவின் கீழ் கியூபா - 1962 | 55 |
| 10.19. | அரபு - இஸ்ரேல் மோதல்கள் | 56 |
| 10.20. | வளைகுடாப் போர் (1990 – 91) | 59 |
| 10.21. | எண்ணெய் நெருக்கடி | 60 |
| 10.22. | சோவியத் யூனியன் சிதைவு – 1991 | 62 |
| | 10.22.1. போரிஸ் யெல்ட்சின் (1931 – 2007)<br>10.22.2. கொரியப் போர் (1950 ஜீன் 25)<br>10.22.3. சூயஸ் கால்வாய் சிக்கல் (1956)<br>10.22.4. வியட்நாம் போர் | 63<br>64<br>65<br>66 |
| 10.23. | நெல்சன் மண்டேலா (1918 – 2013) | 67 |
| 10.24. | தென்னாப்பிரிக்காவில் நிறவெறி | 74 |
| 10.25. | தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் & உலகமயமாக்கல் (LPG – Liberalization, Privatisation & Globalisation) | 78 |
| | 10.25.1. தாராளமயமாக்கல் (Liberalization)<br>10.25.2. தனியார் மயமாக்கல் (Privatisation)<br>10.25.3. உலகமயமாக்கல் (Globalisation | 79<br>80<br>82 |
| 10.26. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கிய போக்குகள் | 86 |


www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| **10.27.** | **அணுஆயுதக் குறைப்பு (Nuclear Disarmament)** | **87** |
| **10.28.** | **CTBT (Comprehensive Nuclear-Test-Ban Treaty) – NPT (Non-Proliferation of Nuclear)** | **88** |
| | 10.28.1. முழுமையான அணு சோதனை தடை உடன்படிக்கை (Comprehensive Nuclear-Test-Ban Treaty) – CTBT | 88 |
| | 10.28.2. CTBT -இல் இந்தியாவின் நிலை | 88 |
| | 10.28.3. அணு ஆயுத தடை ஒப்பந்தம் (NPT) 1968 (Treaty on the Non – Proliferation of Nuclear Weapons) OR (Nuclear Non – Proliferation Treaty) | 89 |
| | 10.28.4. சர்வதேச அரசு – சாரா நிறுவனங்கள் | 89 |
| **10.29.** | **மூலோபாய ஆயுத வரம்பு பேச்சு [(Strategie Arms Limitation Talks (SALT)]** | **91** |
| **10.30.** | **விண்வெளி மற்றும் தொடர்பு** | **92** |
| | 10.30.1. நாசா அங்கீகாரச் சட்டம் -2017 | 94 |
| | 10.30.2. இந்தியாவின் விண்வெளி ஆராய்சி மற்றும் வளர்ச்சி | 95 |
| | 10.30.3. இந்தியாவின் தயாரிக்கப்பட்ட செயற்கை கோள்கள் | 99 |
| | 10.30.5. புதிய தொலைத் தொடர்புக் கொள்கை 1999 | 100 |
| **10.31.** | **புவி வெப்பமடைதல்** | **101** |
| | 10.31.1. பசுமை இல்ல விளைவு (Green House Effect) | 101 |
| | 10.31.2. அமில மழை (Acid Rain) | 102 |
| | 10.31.3. ஓசோன் படல சிதைவு (Ozone Depletion) | 103 |
| | 10.31.4. நகர வெப்பத்தீவு (Urban Heat Island) | 104 |
| **10.32.** | **பேரிடர் மேலாண்மை (Disaster management)** | **105** |
| | 10.32.1. பள்ளிப் பேரிடர் மேலாண்மை | 105 |
| | 10.32.2. நில நடுக்கம் (Earthquake) | 106 |
| | 10.32.3. நிலச் சரிவு (Landslide) | 107 |
| | 10.32.4. புயல் (Hurricane, Cyclone) | 107 |
| | 10.32.5. வெள்ளப் பெருக்கு (Flooding) | 108 |
| | 10.32.6. வறட்சி (Drought) | |




Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 10.32.7. மின்னல் (Lightning)<br>10.32.8. ஆழிப் பேரலை (சுனாமி - Tsunami) | 109<br>109<br>110 |
| 10.33 | **மேலும் முக்கியத் தகவல்கள் (More Important Information)** | 111 |
| 10.34 | Multiple Choice Questions (100) | 139 |


# UG TRB – HISTORY – 2022-23

## UNIT - X

### 10.1. இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம்

❖ **இரண்டாம் உலகப்போர் 1939 முதல் 1945** வரை நடைபெற்றது இதில் உலக நாடுகள் இரு அணிகளாக பிரித்து செயல்பட்டது. அவை **அச்சு நாடுகள்** என்றும் **நேச நாடுகள்** என்றும் செயல்பட்டது.

❖ அச்சு நாடுகள் **"ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்"** ஆகியன.

❖ நேச நாடுகள் **"இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா"** ஆகியவைகள் இருந்தன, பின்னர் **அமெரிக்காவின் (பியர்ல் ஹார்பர் – Pearl Harbour) முத்து துறைமுகம் 1947 டிசம்பர் 7** ஆம் தேதியன்று தாக்கப்பட்டதன் விளைவாக **"அமெரிக்கா"** நேச நாடுகளின் அணியில் இணைந்தது.

❖ நேச நாடுகளிடையே கருத்தியல் அடிப்படையில் வேறுபாடுகள் நிலவியதால் **ஜெர்மனியின் பாசிசம்** உலக நாடுகளை போரில் ஈடுபட செய்தது.

❖ இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே கருத்தியல் ரீதியாக வேறுபாடுகளும் உருவாயின.

❖ ரஷ்யாவும், அமெரிக்காவும் தங்களுடைய நிலைப்பாட்டை உறுதி செய்ய பல்வேறு நாடுகளுடன் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அணிகளை உருவாக்கின.

❖ **இந்தியா** மற்றும் பல்வேறு பல **ஆசிய – ஆப்பிரிக்கா** நாடுகள் எந்த அணியிலும் இணையாமல் ஒன்றிணைந்து **"அணிசேரா இயக்கத்தை"** உருவாக்கின (அணிசேரா இயக்கம் – 1955)

❖ முதல் உலகப்போரை காட்டிலும் இரண்டாம் உலகப்போர் மிக அதிகமான **புலப்பெயர்ச்சியையும்** ஏற்படுத்தியது மீண்டும் ஒரு போர் ஏற்படக் கூடாது எனும்

நோக்கத்தில், அதனை தடுப்பதற்கான ஒரு அமைப்பு உலகளவில் தேவை என்பதை உலகத்தலைவர்கள் உணர்ந்தனர்.

- இதனடிப்படையில் **"1945 அக்டோபர் 24" -**ல் உலக நாடுகள் இணைத்து **"ஐக்கிய நாடுகள் சபை"** உருவாக்கப்பட்டது. இது பல்வேறு கிளைகள் கொண்ட அமைப்பாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையில் மொத்தம் **"193 நாடுகள்"** உள்ளன, கடைசியாக இதில் இணைந்த நாடு **தெற்கு சூடான்** ஆகும்.
- ரஷ்யா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கிடையே நிலவிய கருத்தியல் வேறுபாடு சூழ்நிலையே பனிப்போராக மாறியது, இப்பனிப்போர் ஐக்கிய நாடுகள் சபையை சுதந்திரமாக செயல்படவிடாமல் தடுத்தது.

## 10.1.1. போருக்கு பின் ஐரோப்பாவின் நிலை

- முதல் உலகப்போரைக் காட்டிலும் இரண்டாவது உலகப்போர் அதிகமான பேரழிவுகளை ஏற்படுத்தியது.
- 60 மில்லியன் பொதுமக்கள் போரினால் கொல்லப்பட்டனர்.
- திட்டமிடப்பட்ட இன அழிப்பில் **"நாஜிகள் (ஜெர்மனி) 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்களைக் கொன்றனர்"**.
- பல மில்லியன் கணக்கான மக்கள் வீடற்றவர்களாகவும் அகதிகளாகவும் ஆக்கப்பட்டனர் மற்றும் விவசாய நிலங்களும் தொழிற் சாலைகளும் அழிக்கப்பட்டன.
- **"வார்சா, கீவ், டோக்கியோ** மற்றும் **பெர்லின்"** போன்ற மாபெரும் நகரங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டது.
- போருக்கு முன் பன்னாட்டு அரசியல் அரங்கில் செல்வாக்குடன் உலா வந்த இங்கிலாந்தும், பிரான்சும் நிலைகுலைந்தன.
- கம்யூனிச இயக்கம் செயல்துடிப்புடன் விளங்கிய கீரிஸ், துருக்கி ஆகிய நாடுகளில் இடது சாரி சார்பு கொண்ட இயக்கங்களையும் கட்சிகளையும் சோவியத் யூனியன் ஆதரித்தது.
- 1948 காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பாவில் குறிப்பாக ருமேனியா, பல்கேரியா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளில் சோவியத் ரஷ்யா இடதுசாரி அரசுகளை நிறுவியது.
- **யுகோஸ்லோவியாவில்** நடத்தப்பட்ட தேர்தலில் ஏற்கனவே **"மார்ஷல் டிட்டோவின்"** தலைமையில் ஒரு **கம்யூனிச அரசு** உருவாகியிருந்தது.

❖ கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் வலிமையடைந்தால் மேற்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனின் செல்வாக்கில் இருந்த கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிவிடுமோ எனும் அச்சத்தினால் அமெரிக்காவும் இங்கிலாந்தும் கவலைக் கொண்டன.

## 10.1.2. இரு – துருவ உலகம் உருவாதல்

❖ ஜெர்மனியின் தோல்வியைத் தொடர்ந்து 1945 ஜீலையில் ஜெர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதிப்பதற்காக முதலில் **ஸ்டாலின் ட்ருமன்** மற்றும் **சர்ச்சில்** ஆகியோரும் பின்னர் சர்ச்சிலுக்குப் பதிலாக **கிளமெண்ட் அட்லியும்** பெர்லினுக்கு அருகேயுள்ள **போட்ஸ்டாம்** எனும் இடத்தில் சந்தித்தனர்.

❖ இச்சந்திப்பின் போது ஸ்டாலின் ட்ருமன், சர்ச்சிலிடம் **அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதைப்** பற்றி கூறினார். சில நாட்கள் கழித்து ஜப்பானிய நகரங்களான **"ஹிரோஷிமா 1945 ஆகஸ்டு – 6** மற்றும் **நாகசாகி 1945 – ஆகஸ்டு – 9"** ஆகியவற்றின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியது.

❖ ஜப்பானியப் பேரரசர் **ஹிரோஹட்டோ** தனது நிபந்தனையற்ற சரணடைதலை அறிவித்தார்.

❖ அமெரிக்காவின் செயலைக் கண்ட **ரஷ்யா 1949 -இல் தானும் அணுகுண்டை தயாரித்தது** மற்றும் இரு நாடுகளுக்கிடையே பகைமை உணர்வு மேலும் வளர இச்சம்பவம் வழிவகுத்தது.

❖ உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதியம் (International Monetory Fund – IMF) ஆகியவற்றை உருவாக்குவதில் இரு நாடுகளிடையே கருத்து வேறுபாடுகள் எழுந்தன.

❖ 1946 பிப்ரவரி 22-இல் மாஸ்கோவில் அமெரிக்காவின் வெளியுறவு விவகாரங்களுக்குப் பொறுப்பு வகித்துவருமாறு ஜார்ஜ் கென்னன் அமெரிக்க அரசாங்கத்திற்கு **8000 வார்த்தைகள் கொண்ட தந்தியொன்றை** அனுப்பினார்.

❖ **"நீண்ட தந்தி"** என்றறியப்பட்ட இத்தந்தியில் அவர் முதலாளித்துவ உலகத்துடன் நீண்ட கால அமைதியான சமாதான சகவாழ்வை மேற்கொள்ளும் வாய்ப்பை சோவியத் யூனியன் பார்க்கவில்லை என உறுதியாக கூறி உலக நாடுகளில் கம்யூனிசம் **"விரிவாக்கத்தை கட்டுப்படுத்துவது"** சிறந்த உத்தியாக இருக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

❖ **1946 மார்ச்** மாதத்தில் அமெரிக்காவின் **மிசௌரி** மாநிலத்தில் **ஃபுல்டன்** எனுமிடத்தில் உரையாற்றியபோது **சர்ச்சில்** சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிச அரசுகளை நிறுவிய செயல்பாடுகளைச் கண்டனம் செய்தார்.

- சர்ச்சில் ஆற்றிய உரை **பனிப்போருக்கான சைகையாகக்** கருதப்பட்டது மற்றும் பால்டிக்கிலுள்ள ஸ்டெடின் முதல் போடப்பட்டுவிட்டது என அறிவித்தார்.
- சர்ச்சிலை போர் விரும்பி என ஸ்டாலின் விமர்சனம் செய்தார் மற்றும் **கிழக்கு ஐரோப்பிய நாடுகள்** மீதான சோவியத் யூனியனின் பிடி மேலும் இறுகியது.
- 1947 இன் இறுதிக்குள் **செக்கோஸ்லோவாக்கியா** தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் கம்யூனிச ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- **"போலந்து, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, அல்பேனியா"** ஆகிய நாடுகளில் **கம்யூனிஸ்ட் அரசாங்கம் ஆட்சிக்கு** வந்தது மற்றும் 1945 மற்றும் 1948 க்கு இடையில் சோவியத் ஒன்றியம் கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பாலான மாநிலங்களை அதன் சுற்றுப் பாதையில் இழந்தது.
- அமெரிக்கா ஜப்பானை மீட்டெடுப்பதை விரைவுப்படுத்தி அதனை ஒரு நட்பு நாடாக தன் சார்பில் வளர்த்தது.
- மேலும் **"பிரிட்டன் மற்றும் 14 பிற ஐரோப்பிய நாடுகளுடன்"** நெருக்கமாகப் பணியாற்றியது. அதே போல் **துருக்கியுடனும்** நெருக்கமாகப் பணியாற்றியது.

## 10.1.3. பனிப்போர் எதனால் ஏற்பட்டது.

### 1. கொள்கை வேறுபாடுகள் (Differences of Principle)

- **"கம்யூனிஸ்ட் அரசுகளுக்கும் முதலாளித்துவ அல்லது தாராளவாத ஜனநாயக அரசுகளுக்கும் இடையே உள்ள கொள்கை வேறுபாடுகள்"** தான் மோதலின் அடிப்படைக் காரணம்.
- அரசு மற்றும் சமூகத்தை ஒழுங்காக்கும் கம்யூனிச அமைப்பு **"கார்ல் மார்க்சின்"** கருத்துகளை அடிப்படையாகச் கொண்டது.
- ஒரு நாட்டின் செல்வம் அனைவருக்கும் கூட்டாகச் சொந்தமாக இருக்க வேண்டும் மற்றும் அவை **"பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்"** என்று அவர் நம்பினார்.
- முதலாளித்துவத்தின் பின்னால் உள்ள உந்து சக்திகள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் தனியார் நிறுவனங்களாகும் மேலும் தனியாருடைய செல்வத்தின் சக்தியைப் பாதுகாக்கின்றன.
- **"1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் (USSR) ஏற்படுத்தப்பட்ட உலகின் முதல் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை"** மற்ற நாடுகள் அவநம்பிக்கையுடன் பார்த்தன மற்றும் கம்யூனிசம் தங்கள் நாடுகளில் பரவும் என்றும் அவை பயந்தன.
- **"1941 இல் ரஷ்யா மீதான ஜெர்மனியின் படையெடுப்பு"** அதனை சரியாக நிரூபித்து ஜெர்மனி மற்றும் ஜப்பானுக்கு எதிரான சுய – பாதுகாப்பு தேவை

சோவியத் ஒன்றியம் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றாக வேலை செய்ய வழிவகுத்தது.

## 10.1.4. ஸ்டாலினின் வெளியுறவுக் கொள்கைகள்

- ஐரோப்பாவில் ரஷ்யா செல்வாக்கை வலுப்படுத்த இராணுவ சூழ்நிலையைப் பயன்படுத்தி கொள்வதே இவரின் நோக்கமாக இருந்தது. நாஜி படைகள் வீழ்ச்சியடைந்தால் அவர் தன்னால் முடிந்தவரை ஜெர்மன் பிரதேசத்தை ஆக்கிரமிக்க முயன்றார் ஸ்டாலின்.
- பின்லாந்து, போலந்து மற்றும் ரூமேனியா போன்ற நாடுகளில் இருந்து எவ்வளவு நிலத்தை பெறமுடியுமோ அவ்வளவு நிலத்தை ஸ்டாலின் கையகப்படுத்தினார்.
- ஸ்டாலின் உலகம் முழுவதிலும் கம்யூனிசத்தைப் பரப்புவதில் உறுதியாக இருந்தார்.

### அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் நாடுகள் சோவியத்திற்கு எதிராக செயல்படல்:

- **இரண்டாம் உலகப் போரின் போது ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின்** கீழ் அமெரிக்கா அனைத்து வகையான போர் கருவிகளையும் **"ரஷ்யாவிற்கு லென்ட் – லீஸ்"** என்ற அமைப்பின் கீழ் அனுப்பியது.
- பின்னர் ரூஸ்வெல்ட் இறந்த பிறகு, ஏப்ரல் 1945-இல் அவரது வாரிசான **ஹாரி – எஸ் ட்ரூமன்** மிகவும் சந்தேகத்திற்குரியவராக இருந்தார் மற்றும் கம்யூனிஸ்டுகள் மீதான தனது அணுகுமுறையை அவர் கடுமையாக்கினார்.
- அமெரிக்காவும் பிரிட்டனும் இன்னும் கம்யூனிசத்தை அழிக்க ஆர்வமாக இருப்பதாக ஸ்டாலின் சந்தேகித்தார். பிரான்சின் மீதான படையெடுப்பு அவர்களின் தாமதம் ரஷ்யர்கள் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை சோர்வடையச் செய்ய வேண்டுமென்ற கணக்கிடப்பட்டதாக அவர் உணர்ந்தார்.
- **கென்னன்** சோவியத் ஒன்றியத்தின் அரசியல் பொருளாதார மற்றும் இராஜதந்திர வழிகளில் கட்டுப்படுத்தல் கொள்கையை அறிவுறுத்தினார்.
- **மார்ஷல் எய்ட்** போன்ற அமெரிக்க பொருளாதாரக் கொள்கைகள் ஐரோப்பாவில் அமெரிக்க அரசியல் செல்வாக்கை அதிகரிக்க வேண்டுமென்று வடிவமைக்கப்பட்டவை என்று நம்புகிறார்கள்.
- கம்யூனிசத்தைப் பரப்புவதற்கு ஸ்டாலினிடம் நீண்டகாலத் திட்டங்கள் இல்லையென்றாலும் அவர் சோவியத்தின் செல்வாக்கை விரிவுப்படுத்த மேற்கில் உள்ள எந்த பலவீனத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பவாதி என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

- **"1989 – 91 -ல் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிசம் மற்றும் சோவியத் யூனியனின் சரிவுடன் பனிப்போர் முடிவுக்கு"** வந்தபோது அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் இரண்டையும் மதிப்பாய்வு செய்யும் பல புதிய பனிப்போர் வரலாறுகள் தோன்றின.
- 2006 ஆம் ஆண்டில் **ஜான் லூயிஸ் காடிஸ்,** உலகில் ஆதிக்கம் செலுத்துவதற்கான ரஷ்ய முயற்சிகளே இதற்குக் காரணம் என்று தனது நம்பிக்கையை மீண்டும் கூறினார்.
- சீனர்கள் மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளையும் அவ்வாறே செய்யும்படி அழுத்தம் கொடுத்து வந்தனர். இதுவே 1979 முதல் ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீட்டுடன் சேர்ந்து சோவியத் ஒன்றியத்தை பலவீனப்படுத்தி இறுதியாக வீழ்த்தியது.

## 10.1.5. யால்டா மாநாடு (Feb 4 முதல் 14 வரை– 1945) (Yalta Conference) or கிரிமியா மாநாடு (அ) ஆர்கோனா மாநாடு:

- **யால்டா மாநாடு** மாநாடானது, **ரஷ்யாவில் (கிரிமியாவில்)** நடைபெற்ற மாநாடு ஆகும் இதில் நேச நாட்டுத் தலைவர்களான **"ஸ்டாலின், ருஸ்வெல்ட்** மற்றும் **சர்ச்சில்"** ஆகியோர் கலந்து கொண்டனர் இதில் இரண்டாம் உலகப் போர் முடிவடையும் தருணத்தில் என்ன நடக்கும் என்பதை திட்டமிடலாம் என்று அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.
- தோல்வியுற்ற பன்னாட்டு கழகத்திற்கு பதிலாக ஒரு புதிய அமைப்பு (ஐக்கிய நாடுகள் சபை) தோன்றியது.
- ஜெர்மனியை மண்டலங்களாகப் பிரிக்க வேண்டும், ரஷ்யன் அமெரிக்கன் மற்றும் பிரிட்டிஷ் (பிரெஞ்சு மண்டலம் பின்னர் சேர்க்கப்பட்டது) அதே நேரத்தில் பெர்லினும் தொடர்புடைய மண்டலங்களாகப் பிரிக்கப்படும், மேலும் ஆஸ்திரியாவிலும் இதே போன்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- கிழக்கு ஐரோப்பாவின் மாநிலங்களின் சுதந்திரமான தேர்தல்கள் அனுமதிக்கப்படும்.
- சகாலின் தீவு முழுவதையும், மஞ்சூரியாவில் உள்ள சில நிலப்பரப்பையும் ரஷ்யா பெற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஜப்பானுக்கு எதிரான போரில் சேர ஸ்டாலின் உறுதியளித்தார்.
- லண்டனை தளமாகக் கொண்ட அரசாங்கத்தின் சில உறுப்பினர்கள் (கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள்) லுப்னின் அரசாங்கத்தில் சேர அனுமதிக்கப்பட வேண்டும் என்று

யால்டாவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதே சமயம் ரஷ்யா 1939 இல் இணைத்த கிழக்கு போலந்தின் ஒரு பகுதியை வைத்திருக்க அனுமதிக்கப்படும்.

- இருப்பினும் ஓடர் மற்றும் நெய்ஸ்ஸே நதிகளுக்கு கிழக்கே உள்ள அனைத்து ஜெர்மன் பிரதேங்களையும் போலந்துக்கு வழங்கப்பட வேண்டும் என்ற ஸ்டாலின் கோரிக்கைகள் குறித்து ரூஸ்வெல்ட் மற்றும் சர்ச்சில் மகிழ்ச்சியடையவில்லை. இந்த விஷயத்தில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை.

## 10.1.6. போடஸ்டாம் மாநாடு (Potsdam Conference July – 1945)

- மாநாட்டில் தொடக்கத்தில் இருந்த மூன்று தலைவர்கள் **ஸ்டாலின், ட்ரூமன்** (ஏப்ரலில் இறந்த ரூஸ்வெல்ட்டுக்கு பதிலாக) மற்றும் **சர்ச்சில்**, ஆனால் தொழிகட்சியின் தேர்தல் வெற்றிக்குப் பிறகு சர்ச்சிலுக்குப் பதிலாக புதிய பிரிட்டிஷ் லேபர் பிரதம மந்திரியான **கிளமென்ட் அட்கீ** நியமிக்கப்பட்டார்.
- போலந்து மீதுதான் முக்கிய கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ட்ரூமன் மற்றும் சர்ச்சில் ஆகியோர் இதன் காரணமாக எரிச்சலடைந்தனர், ஏனெனில் **ஓடர் – நெய்ஸ் கோட்டுக்கு** கிழக்கே ஜெர்மனி ரஷ்ய துருப்புக்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. மற்றும் கம்யூனிஸ்ட் சார்பு போலந்து அரசாங்கத்தால் நடத்தப்பட்டது.
- ஜெர்மானியர்கள் போரின் போது அவர்கள் ஏற்படுத்திய சேதங்களை சரிசெய்ய இழப்பீடுகள் வழங்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

## 10.1.7. கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் நிறுவப்படல் (Communism Established in Eastern Europe)

- போட்ஸ்டாம் மாநாடு முடிந்த அடுத்த சில மாதங்களில், ரஷ்யர்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் சார்பு அரசாங்கங்களை அமைப்பதற்கு திட்டமிட்ட வகையில் தலையிட்டனர். இது போலந்து ஹங்கேரி, பல்கேரியா, அல்பேனியா மற்றும் ருமேனியாவில் நடந்தது.
- 1946 பிப்ரவரியில் "**கம்யூனிசமும், முதலாளித்துவமும் ஒரு போதும் நிம்மதியாக வாழ முடியாது என்றும் கம்யூனிசத்தின் இறுதி வெற்றியை அடையும் வரை எதிர்காலப் போர்கள் தவிர்க்க முடியாதவை என்றும் 1946"** ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு பரவலாகப் பேசப்பட்ட உரையின் மூலம் **ஸ்டாலின்** மேற்கத்திய நாடுகளை மேலும் பயமுறுத்தினர்.
- ரஷ்யர்கள் தங்கள் சக்தி மற்றும் கோட்பாடுகளின் காலவரையற்ற விரிவாக்கத்தில் முனைந்துள்ளனர் என்று கூறி கம்யூனிச அச்சுறுத்தலுக்கு எதிராக உறுதியாக நிற்கும் மேற்கத்திய கூட்டணிக்கு அழைப்பு விடுத்தார்.

### 10.1.8. ரஷ்யர்கள் கிழக்கு ஐரோப்பாவில் தங்கள் பிடியைத் தொடர்ந்து இறுக்கிக் கொள்ளுதல்:

- 1947 இன் இறுதியில் செக்கோஸ்லோவாக்கியாவைத் தவிர அந்தப் பகுதியில் உள்ள அனைத்தும் மாநிலங்களும் முழு கம்யூனிச அரசாங்கத்தைக் கொண்டிருந்தன.
- தேர்தல்களில் மோசடிகள் செய்யப்பட்டன, கூட்டணி அரசாங்கங்களின் கம்யூனிஸ்ட் அல்லாத உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டு தூக்கலிடப்பட்டனர் இறுதியில் மற்ற **அனைத்து அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டன**.
- **யூகோஸ்லாவியா** மட்டுமே இந்த மாதிரிக்கு பொருந்தவில்லை இங்கே **"மார்ஷல் டிட்டோவின் கம்யூனிஸ்ட் அரசாங்கம் 1945 இல் சட்டப்பூர்வமாக"** தேர்ந்தெடுக்கப்பட்டது.
- யால்டாவில் ஸ்டாலினின் இலவச தேர்தல் வாக்குறுதியை புறக்கணித்த கிழக்கு ஐரோப்பாவை, ரஷ்யா நடத்தும் விதத்தால் மேற்கு நாடுகளுக்கு ஆழ்ந்த எரிச்சல் ஏற்பட்டது.
- கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதி ரஷ்யாவின் செல்வாக்கு மண்டலமாக இருக்க வேண்டும் என்று ஸ்டாலின் கூறியதை 1944 ஆம் ஆண்டு சர்ச்சில் ஒப்புக்கொண்டார்.
- ஸ்டாலினின் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான வழிமுறைகள் மேற்கு நாடுகளை வருத்தப்படுத்தியது மேலும், அவை அடுத்த பெரிய முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தன.

### 10.1.9. ட்ரூமன் கோட்பாடு மற்றும் மார்ஷல் திட்டம் (1947)

- **ட்ரூமன் கோட்பாடு** இது **கிரேக்கத்தில்** நடந்த நிகழ்வுகளில் இருந்து உருவானது, அங்கு கம்யூனிஸ்டுகள் முடியாட்சியை அகற்ற முயன்றனர். 1944 -ல் ஜெர்மனியர்களிடமிருந்து கிரேக்கத்தை விடுவிக்க உதவிய பிரிட்டிஷ் துருப்புகள் முடியாட்சியை மீட்டெடுத்தன.
- **பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி எர்னஸ்ட் பெவின்** அமெரிக்காவிடம் முறையிட்டார் மற்றும் **ட்ரூமன் (மார்ச் 1947)** ஆயுதமேந்திய சிறுபான்மையினரால் வெளிப்புற அழுத்தங்களால் அடிபணிவதை எதிர்க்கும் சுதந்திர மக்களை ஆதரிக்கும் என்று அறிவித்தார்.
- கிரீஸ் உடனடியாக பெருமளவிலான ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்களைப் பெற்றது மேலும் **"1949 வாக்கில் கம்யூனிஸ்டுகள் தோற்கடிக்கப்பட்டனர்"**.

www.tcaexamguide.com (95665 35080; 9786269980; 76399 67359; 93602 68118 )
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

- **"ஜீன்-1947 -ல் மார்ஷல் திட்டம்"** அறிவிக்கப்பட்டது. இது ட்ரூமன் கோட்பாட்டின் பொருளாதார விரிவாக்கமாகும் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் **ஜார்ஜ் மார்ஷல்** தனது **"ஐரோப்பிய மீட்பு திட்டத்தை (ERP – European Recovery Program)"** தயாரித்தார் இது தேவைப்படும் இடங்களில் பொருளாதார நிதி உதவியினை வழங்கியது.
- ஒரு வளமான ஐரோப்பா, அமெரிக்க ஏற்றுமதிகளுக்கு லாபகரமானச் சந்தைகளை வழங்கும் ஆனால் அதன் முக்கிய நோக்கம் அநேகமாக அரசியலாகவே இருந்தது. செழிப்பான மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டது.
- **"ஐரோப்பியப் பொருளாதார நிலைமையானது, 1947- க்குப் பிறகு மிக விரைவாக மீண்டு வந்ததைச்"** சுட்டிக் காட்டுகிறார்கள், ஆனால் மீட்சிக்கான நிலைமைகள் ஏற்கனவே இருந்திருக்க வேண்டும்.
- கிழக்கு ஐரோப்பாவிற்கு கோட்பாட்டளவில் உதவி கிடைத்தாலும், ரஷ்ய வெளியுறவு மந்திரி **மொலோடோவ்** முழு யோசனையும், **டாலர் ஏகாதிபத்தியம்** என்றும் கண்டனம் செய்தார்.

## 10.1.10. கம்யூனிஸ்டுகளின் தகவல் தொடர்பு (The Cominform)

- இந்த **"கம்யூனிஸ்ட் தகவல் பணியகம் (The Cominform)"** மார்ஷல் திட்டத்திற்கு சோவியத் பதில் அளிக்கும் விதமாக **"1947 செப்டம்பரில், ஸ்டாலினால்"** நிறுவப்பட்டது. இது கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒன்றிணைக்கும் அமைப்பாக செயல்பட்டது.
- ஸ்டாலினின் நோக்கம் செயற்கைக்கோள்களின் மீதான தனது பிடியை இறுக்குவதாகும். கம்யூனிஸ்டாக இருந்தால் போதாது – அது ரஷ்ய பாணி கம்யூனிசமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.
- 1947 ஆம் ஆண்டில் **செயற்கைக் கோளுக்கு ரஷ்ய உதவி வழங்கும் "மொலோடோவ்"** திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றொரு அமைப்பு அவர்களின் பொருளாதார கொள்கைகளை ஒருங்கிணைக்க அமைக்கப்பட்டது.

## 10.1.11. செக்கோஸ்லோவக்கியாவை கம்யூனிஸ்ட் கைப்பற்றுதல் (1948 பிப்ரவரி)

- **"கிழக்கு ஐரோப்பாவில் எஞ்சியிருக்கும் ஒரே ஜனநாயக அரசு"** என்பதால் இது மேற்கத்திய முகாமுக்கு பெரும் அடியாக அமைந்தது.
- 1946 -ல் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டுகள் மற்றும் பிற இதுடசாரிக் கட்சிகளின் கூட்டணி அரசாங்கம் இருந்தது.

❖ பிரதம மந்திரி கிளெமென்ட் சாட்வால்ட் கம்யூனிஸ்ட் ஜனாதிபதி பெனெஸ் மற்றும் வெளியுறவு மந்திரி ஜான் மசாரிக் ஆகியோர் செக்கோஸ்லோவாக்கியா அதன் வளர்ந்த தொழில்கள் கிழக்கு மற்றும் மேற்கு இடையே ஒரு பாலமாக இருக்கும் என்று அவர்கள் நம்பினர்.

❖ தேர்தல்கள் மே மாதம் நடத்தப்பட்டன. ஆனால் ஒரே ஒரு வேட்பாளர் பட்டியல் மட்டுமே இருந்தது. பெனஸ் ராஜினாமா செய்தார், கோட்வால்ட் ஜனாதிபதி ஆனார்.

❖ மேற்கு நாடுகளுடானான செய்தி தொடர்புகளை ஏற்காத ஸ்டாலின் மற்றும் மார்ஷல் எய்ட் மீதான ஆர்வம், செக் கம்யூனிஸ்டுகளை நடவடிக்கை எடுக்கத் தூண்டியது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

## 10.1.11. பெர்லின் முற்றுகை மற்றும் விமானப் போக்குவரத்து

❖ இரண்டாம் உலகப்போரின் முடிவில் யால்டா மற்றும் போட்ஸ்டாமில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி **“ஜெர்மனி மற்றும் பெர்லின் ஒவ்வொன்றும் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டன**.

❖ மூன்று மேற்கத்திய சக்திகளும் தங்கள் மண்டலங்களின் பொருளாதார மற்றும் அரசியல் மீட்சியை ஒழுங்கமைக்க தங்களால் இயன்றதைச் செய்தபோது ரஷ்யாவிற்கு ஏற்படுத்தப்பட்ட அனைத்து சேதங்களுக்குமான இழப்பீட்டினை ஜெர்மனி செலுத்த வேண்டும் என்பதில் ஸ்டாலின் உறுதியாக இருந்தார்.

❖ 1948 ஆம் ஆண்டில் தொடக்கத்தில் மூன்று மேற்கு மண்டலங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு ஒற்றைப் பொருளாதாரப் பிரிவினை உருவாக்கியது.

❖ மேற்கு நாடுகளானது, நான்கு மண்டலங்களும் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டு கூடிய விரைவில் சுயராஜ்யம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்பின, ஆனால் ஸ்டாலின் ரஷ்ய மண்டலத்தை அதன் சொந்த கம்யூனிஸ்ட், ரஷ்ய சார்பு அரசாங்கம் பாதுகாக்கும் என்று முடிவு செய்திருந்தார்.

❖ மூன்று மேற்கு மண்டலங்களும் மீண்டும் ஒன்றிணைவதற்கான வாய்ப்பு ஸ்டாலினுக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏனென்றால் அவை மேற்கு மண்டலத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

❖ **“ஜீன் 1948 -ல் மேற்கு மண்டலம், ஒரு புதிய நாணயத்தை அறிமுகப்படுதத்தியது”** மற்றும் அவர்களின் மண்டலத்திலும் மேற்கு பெர்லினிலும் விலைக் கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டுவந்தது.

❖ மேற்கண்ட செயலுக்கான ரஷ்யாவின் பதில் உடனடியாக மேற்கொள்ளப்பட்டது, இதன் விளைவாக மேற்கு பெர்லின் மற்றும் கால்வாய் இணைப்புகள் மூடப்பட்டன.

அவர்களின் நோக்கம் மேற்கு பெர்லினை பட்டினி நிலையை அதிகரிப்பதன் மூலம் மேற்கு நாடுகளை உடனடியாக வெளியேறும்படி கட்டாயப்படுத்துவதாகும்.

- இவ்வாறாக இரண்டாம் உலகப்போரின் முடிவில் உலகம் பல்வேறு அணிகளாக பிரிந்து செயல்பட்டது. இதில் அமெரிக்கா ரஷ்யா மற்றும் ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் பிரிந்து செயல்பட்டன.

## 10.2. ஐக்கிய நாடுகள் சபை (United Nations Organisation)

### 10.2.1. அறிமுகம்

- முதல் உலகப் போரைவிட இரண்டாம் உலகப்போர் மனித குலத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்தியது.
- **"முதன் முறையாக அணு ஆயுதங்கள்"** பயன்படுத்தப்பட்டன. அத்தகைய போர்கள் எதிர்காலத்தில் நிகழுமானால் உலகம் என்ன ஆகும் என்ற அச்சம் உலக மக்கள் மனதில் எழுந்தது.
- சச்சரவுகளில் ஈடுபடும் நாடுகளை சமாதான பேச்சவார்த்தைக்கு இட்டுச் செல்ல ஒரு அமைப்புத் தேவைப்பட்டது.
- அமெரிக்கா, சோவியத் ரஷ்யா மற்றும் கிரேட் பிரிட்டன் போன்ற நாடுகள் உலக அமைதிக்கு ஓர் அமைப்பு தேவை என உணர்ந்தன.
- முதல் உலகப் போரின் போது ஏற்படுத்தப்பட்ட அமைப்பு தோல்வியில் முடிந்த போதிலும் மீண்டும் ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், உலக நாடுகள் அமைதி பெற வேண்டும் என்று எண்ணினார்கள்.
- இம்முயற்சியின் பயனால் விளைந்ததே **ஐக்கிய நாடுகள் அவை** ஆகும்.



### 10.2.2. ஐக்கிய நாடுகள் நிறுவப்படுதல் (நியூயார்க் நகரம்):



- அமெரிக்க குடியரசுத் தலைவர் **“பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்”**டினால் **“ஐக்கிய நாடுகள் சபை”** உருவாக்கப்பட்டது.
- முதன் முதலாக **“1942 இல் இருபத்தி ஆறு நாடுகளின் பிரதிநிதிகள்”** கையெழுத்திட்டு, ஐக்கிய நாடுகள் சபைக்கான ஒப்பந்தத்தை செயல்முறைக்கு கொண்டு வந்தனர்.
- **1944, செப்டம்பர் 7-ல் ஆகஸ்டில்** சீனா சோவியத் யூனியன், இங்கிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் **“டம்பார்டன், ஓக்ஸில்”** சந்தித்து புதிய சர்வதேச அமைப்பிற்கான அடிப்படை வரைவை உருவாக்கினார்கள்.
- **1945 ல் ஜீன் 26** ஆம் நாள் **“சான் பிரான்சிஸ்கோ நகரில் 50 நாடுகளை”** சேர்ந்த பிரதிநிதிகள் ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டனர்.
- நீண்ட விவாதங்களுக்குப் பிறகே இந்த சாசனம் **“50 நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது”**.
- **“1945 அக்டோபர் 24 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்டது”**.
- ஐக்கிய நாடு அமைப்பின் தலைமையகம் **“அமெரிக்காவிலுள்ள நியூயார்க் (மன்ஹாட்டன்)”** நகரில் அமைந்துள்ளது.
- இதற்கான நிலத்தை **“ஜான்.டி.ராக்பெல்லர்”** வழங்கினார். இது **39 மாடிகளைக்** கொண்டுள்ளது
- ஐக்கிய நாடுகள் சபை (UN - United Nations) என்பது **“சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவு உறவுகளை வளர்த்தல், சர்வதேச ஒத்துழைப்பை அடைதல் மற்றும் நாடுகளின்**

**நடவடிக்கைகள் உகந்ததாக இருக்கும்படி இணங்க வைக்கும் மையமாக இருத்தல்"** ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்ட அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.

- இது உலகின் மிகப்பெரிய மற்றும் அனைத்து நாட்டினருக்கும் மிகவும் பரிச்சயமான ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- **"ஐ.நா. வின் தலைமையகம் நியூயார்க் நகரில் உள்ள சர்வதேச நிலப்பரப்பில் (International Territory)"** உள்ளது, மேலும் ஜெனீவா, நைரோபி, வியன்னா மற்றும் **"தி ஹேக் (The Hague [சர்வதேச நீதிமன்றத்தின் தலைமையிடம்]"** ஆகிய இடங்களில் மற்ற முக்கிய அலுவலகங்கள் உள்ளன.
- ஐக்கிய நாடுகள் சபையானது **"இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு எதிர்காலப் போர்களைத் தடுக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது"**, இது பயனற்ற லீக் ஆஃப் நேஷன்ஸைத் (ineffective League of Nations) தொடர்ந்து உருவாக்கப்பட்டது.
- ஏப்ரல் 25, 1945 இல், 51 அரசாங்கங்கள் சான் பிரான்சிஸ்கோவில் ஒரு மாநாட்டிற்காகச் சந்தித்து, **ஐ.நா. சாசனத்தை** உருவாக்கத் தொடங்கின, இது **"25 ஜூன் 1945"** இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது மற்றும் 24 அக்டோபர் 1945 இல் நடைமுறைக்கு வந்தது. சாசனத்தின்படி, அமைப்பின் நோக்கங்களில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மனிதாபிமான உதவிகளை வழங்குதல், நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துதல் ஆகியவை அடங்கும்.
- ஐ.நா. உருவாக்கப்படும்போது, **51 உறுப்பு நாடுகளைக்** கொண்டிருந்தது; 2011 இல் தெற்கு சூடானின் சேர்க்கையுடன், உறுப்பினர்களின் எண்ணிக்கை **தற்போது 193 ஆக உள்ளது**, இது உலகின் அனைத்து இறையாண்மையுள்ள (Sovereign) நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- உலக அமைதியைப் பாதுகாப்பதற்கான இந்த அமைப்பின் நோக்கமானது, அதன் ஆரம்ப தசாப்தங்களில் (Decades) அமெரிக்காவிற்கும், சோவியத் யூனியனுக்கும், இவ்விரண்டு நாடுகளின் நட்பு நாடுகளுக்கும் இடையிலான பனிப்போரால் சிக்கலானது. அதன் பணிகளில் முதன்மையாக நிராயுதபாணியான இராணுவ பார்வையாளர்கள் மற்றும் லேசான ஆயுதம் ஏந்திய துருப்புக்கள் முதன்மை கண்காணிப்பு, அறிக்கை தாக்கல் செய்தல் மற்றும் நம்பிக்கையை வளர்க்கும் பாத்திரங்களைக் கொண்டிருந்தன.
- 1960 களில் தொடங்கிய பரவலான காலனித்துவ நீக்கத்தைத் தொடர்ந்து ஐ.நா உறுப்பினர் எண்ணிக்கை கணிசமாக வளர்ந்தது. அப்போதிருந்து,

அடிமைப்பட்டிருந்த சுமார் 80 காலனிகள் மற்றும் 11 அறக்கட்டளைப் பிரதேசங்கள் சுதந்திரம் பெற்றுள்ளன, இவை அறங்காவலர் குழுவால் கண்காணிக்கப்பட்டன.

❖ 1970களில், பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஐ.நா.வின் வரவு செலவுத் திட்டம், அமைதி காப்பதற்கான அதன் செலவினங்களை விட அதிகமாக இருந்தது. பனிப்போர் முடிவுக்கு வந்த பிறகு, ஐ.நா. தனது கள செயல்பாடுகளை மாற்றியது மற்றும் விரிவுபடுத்தியது, பல்வேறு சிக்கலான பணிகளை மேற்கொண்டது.

❖ UN ஆனது **ஆறு முக்கிய உறுப்புகளைக்** கொண்டுள்ளது:

- **பொதுச் சபை (General Assembly),**
- **பாதுகாப்பு கவுன்சில் (Security Council),**
- **பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் (Economic and Social Council - ECOSOC);**
- **அறங்காவலர் குழு (Trusteeship Council),**
- **சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) மற்றும்**
- **ஐ.நா செயலகம் (UN Secretariat).**

❖ **“உலக வங்கி குழு (World Bank Group), உலக சுகாதார அமைப்பு (World Health Organization), உலக உணவுத் திட்டம் (World Food Programme), யுனெஸ்கோ (UNESCO) மற்றும் UNICEF (United Nations Children's Fund)”** போன்ற பல சிறப்பு நிறுவனங்கள், நிதிகள் மற்றும் திட்டங்களை UN அமைப்பு கொண்டுள்ளது. கூடுதலாக, அரசு சாரா நிறுவனங்களுக்கு ECOSOC மற்றும் பிற நிறுவனங்களுடந் ஐ.நா.வின் பணிகளில் பங்கேற்க ஆலோசனை அந்தஸ்து வழங்கப்படலாம்.

❖ ஐ.நா.வின் தலைமை நிர்வாக அதிகாரியாக அதன் பொதுச்செயலாளர் உள்ளார், தற்போது இருப்பவர் **“போர்த்துகீசிய அரசியல்வாதி மற்றும் தூதர் அன்டோனியோ குட்டெரெஸ் (António Guterres)”** ஆவார், அவர் தனது முதல் ஐந்தாண்டு பதவிக்காலத்தை 1 ஜனவரி 2017 அன்று தொடங்கி, பின்னர் **8 ஜூன் 2021 அன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்**. இந்த அமைப்பு **“அதன் உறுப்பு நாடுகளின் மதிப்பிடப்பட்ட மற்றும் தன்னார்வ பங்களிப்புகளால் நிதியைப் பெற்றுக் கொள்கிறது”**.

❖ ஐ.நா., அதன் அதிகாரிகள் மற்றும் அதன் ஏஜென்சிகள் **“பல நோபல் அமைதி பரிசுகளை”** வென்றுள்ளனர், இருப்பினும் அதன் செயல்திறன் பற்றிய மற்ற மதிப்பீடுகளின் விமர்சனங்கள் கலவையாகவே அமைந்துள்ளன.

### 10.2.3. ஐ.நா. வின் நோக்கம்

- ❖ பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரித்தல்.
- ❖ நாடுகளுக்கிடையே நட்புறவையும் அமைதியையும் ஏற்படுத்துதல்.
- ❖ அனைத்து நாடுகளுக்கும் சம உரிமைகளையும் சுய நிர்ணய உரிமைகளையும் வழங்குதல்.
- ❖ பன்னாட்டு ஒத்துழைப்புடன் பொருளாதார, சமூக பன்னாட்டு மற்றும் மனித குல பிரச்சனைகளை தீர்ப்பது.
- ❖ மனித உரிமைகள், கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை போற்றி வளர்த்தல்.
- ❖ எந்தவொரு நாட்டின் உள்விவகாரங்களிலும் நேரடியாக தலையிடாமல் இருத்தல்.

**ஐ.நா. வின் நான்கு முக்கிய நோக்கம்**

1) இராணுவ பாதுகாப்பு
2) பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு
3) மனித உரிமைகளை பாதுகாப்பு
4) சர்வதேச நீதி.




### 10.2.4. பொதுச் சபை

- ❖ ஐ.நா. அமைப்பின் விவாதங்கள் நடைபெறும் முக்கிய இடமாக இது திகழ்கிறது.
- ❖ ஒவ்வொரு உறுப்பு நாடும் தலா **ஐந்து பிரதிநிதிகள்** வரை பொது அவைக்கு அனுப்புகின்றன. ஆனால் அவர்கள் **“ஒரு வாக்கினை மட்டுமே செலுத்த முடியும்”**.

- **"பன்னாட்டு அமைதி, பாதுகாப்பு"** குறித்த பிரச்சனைகளை இந்த அவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறது.
- ஐ.நா. அவையின் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக **"ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யா, சீனா** மற்றும் **அரேபிய மொழிகள்"** உள்ளது.
- ஐ.நா. அவையில் மொத்தம் **193 நாடுகள்** உறுப்பினராக இருக்கின்றன.
- பொதுச்சபையின் கூட்டமானது ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் நடைபெறுகிறது. பெரும்பான்மையான தீர்மானங்கள் **"செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிடையே"** நிறைவேற்றப்படுகின்றன.
- மிகவும் பரந்த அளவிலான பிரச்சனைகளான **"தீவிரவாதம், போர், வறுமை, பசி** மற்றும் **நோய்கள்"** குறித்ததாக விவாதங்கள் அமைகிறது.
- பொதுச் சபையின் பணிகள், **ஆறு குழுக்களின்** வழியே மேற்கொள்ளப்படுகிறது. இதுவே ஐ.நா. சபையின் நிரந்தர அமைப்பாகும்.
- இது ஐ.நா. வின் அனைத்து நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் பெற்றுள்ள அமைப்பாகும்.
- ஐ.நா. வின் விவாதங்கள் நடைபெறும் முக்கிய இடமாகவும் இது அமைந்துள்ளது.
- உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகளை அனுப்ப அனுமதிக்கப்பட்டாலும், ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு செலுத்தும் அதிகாரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதன் கூட்டங்கள் வருடம் ஒரு முறை கூட்டப்படுகின்றது (**செப்டம்பர் மாதம்**).
- வரவு-செலவு திட்டத்தை (Budjet) நிறைவேற்றுகிறது.
- பாதுகாப்பு சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளை தேர்ந்தெடுக்கின்றது.
- **"1953-ம் ஆண்டு ஐ.நா .சபையின் பொதுச்சபை தலைவராக இந்தியாவின் திருமதி .விஜயலட்சுமி பண்டிட்"** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பொதுச்சபையின் ஆறு முக்கிய குழுக்கள்**

1) ஆயுத குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு
2) பொருளாதாரம் மற்றும் நிதி.
3) சமூகம், மனிதநேயம், மற்றும் பண்பாடு
4) சிறப்பு அரசியல் மற்றும் காலனிய ஒழிப்பு
5) நிர்வாகம் மற்றும் நிதிநிலை அறிக்கை
6) சட்டம் போன்ற குழுக்களைக் கொண்டு பொதுச் சபை செயல்பட்டது.

### 10.2.5. பாதுகாப்பு சபை

- ஐ.நா.வின் முக்கிய நிர்வாக அமைப்பு அதன் **"பாதுகாப்பு சபையேயாகும்"**.
- ஐ.நா.வின் சாசனப்படி பாதுகாப்புச் சபையானது **"சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான"** பொறுப்பு மிக்க அமைப்பாகும்.
- இது பொதுச்சபையை போல் வழக்கமாக கூடுவதில்லை மாறாக **"சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது எந்த நேரத்திலும்"** இதன் கூட்டமானது நடைபெறும்.
- பாதுகாப்புச் சபையில் ஓர் தீர்மானமானது இயற்றப்பட வேண்டுமெனில், பதினைந்தில் ஒன்பது உறுப்பினர்களின் ஒட்டு தேவைப்படுகிறது.
- **பாதுகாப்பு சபையில் 15 உறுப்பினர்கள்** உள்ளனர். **"ரஷ்யா, சீனா, அமெரிக்கா பிரான்ஸ்** மற்றும் **இங்கிலாந்து"** இதில் நிரந்தர உறுப்பினராக உள்ளது.
- நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கு **"சிறப்பு ரத்து அதிகாரம்** (VETO POWER)"** வழங்கப்பட்டுள்ளது.
- சிறப்பு ரத்து அதிகாரத்தை (Veto Power) அதிகமாக பயன்படுத்திய நாடு **ரஷ்யா** ஆகும்.
- இது ஐ.நா. வின் முக்கிய நிர்வாக அமைப்பாகும்.
- **5 நிரந்தர உறுப்பு நாடுகள்** உள்ளன - அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா & சீனா
- **தற்காலிக உறுப்பு நாடுகள்** 10 - இதன் **பதவிக்காலம் 2 ஆண்டுகள்.**
- பாதுகாப்பு சபையின் மொத்த உறுப்பு நாடுகள் - **15 (10+5)**
- நிரந்தர உறுப்பு நாடுகள் சிறப்பு ரத்து அதிகாரத்தை (VETO POWER) பெற்றுள்ளது. (USA, Britain, France, Russia & China)
- ஆரம்பத்தில் தற்காலிக உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை - **6**
- 1965-ல் இதன் எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப்பட்டது.
- அக் 25,1971-ல் ஐ.நா. சபை மற்றும் பாதுகாப்பு சபையின் நிரந்த உறுப்பு நாடாக இருந்த தேசிய சீனா வெளியேற்றப்பட்டு (National China), செஞ்சீனா சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- 1941 - மாசேதுங்- செஞ்சீனா - சீன மக்கள் குடியரசு (Peoples Republic of China)
- 1941 - சியாங்கேஷேக் -தேசிய சீனா - தைவான், பார்மோசா.
- மொத்தமுள்ள 15 உறுப்பு நாடுகளில் 9 நாடுகளின் ஆதரவு இருந்தால் ஒரு தீர்மானம் நிறைவேறும் (5-உறுப்பு நாடுகள் கட்டாயம் இருக்க வேண்டும்).

# MULTIPLE CHOICE QUESTION

1) ஐ.நா.சபை தற்போது எத்தனை உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது?

(A) 192 (B) 193 (C) 195 (D) 189

2) மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடன சாசனத்தை ஐ.நா.சபை ஏற்றுக்கொண்ட ஆண்டு …………………..

(A) 1947 (B) 1948 (C) 1949 (D) 1950

3) ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடுகள்

(A) 10 (B) 5 (C) 15 (D) 3

4) எந்த வருடம் சென்டோ (CENTO) ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?

(A) 1991 (B) 1970 (C) 1975 (D) 1979

5) ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்தம் ………………. உறுப்பு நாடுகள் உள்ளன.

(A) 26 (B) 27 (C) 28 (D) 29

6) யூத நாடு என்ற பெயரில் துண்டு பிரசாரத்தை வெளியிட்டவர்

(A) ஹோ சி மின் (B) யாசர் அரபாத்

(C) தோடார், ஹெர்செல் (D) அன்வர் சாதத்

7) அரேபியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு

(A) 1945 (B) 1930 (C) 1941 (D) 1931

8) பிடல் காஸ்ட்ரோ அமெரிக்காவிற்கு சொந்தமான ………… ஆலைகளை தேசியமயமாக்கினார்.

(A) இரும்பு மற்றும் எஃகு (B) சர்க்கரை

(C) சிமெண்ட் (D) பருத்தி

9) யூதர்களின் பண்டைய தாயகம்

(A) அரேபியா (B) ஈரான் (C) பாலஸ்தீனம் (D) இஸ்ரேல்

10) பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எடு?

(A) சீனா (B) ஜப்பான் (C) கொரியா (D) மங்கோலியா

11) சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

i) துருக்கியப் பேரரசு, பால்களில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.

ii) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.

iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றியது.

iv) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

(A) i), ii) ஆகியன சரி (B) i), iii) சரி

(C) iv) சரி (D) i), ii), iv) ஆகியன சரி

12) **கூற்று** : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

**காரணம்** : சொந்த நாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

(A) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.

(B) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

(C) கூற்று காரணம் இரண்டுமே தவறு.

(D) காரணம் சரி, ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

13) லத்தீன் அமெரிக்காவுடன் "நல்ல அண்டை வீட்டுக்காரன்" எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?

(A) ரூஸ்வெல்ட் (B) ட்ருமன் (C) உட்ரோவில்சன் (D) ஐசனோவர்

14) உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபதியத்தை விரும்பவில்லை?

(A) ஐரோப்பா (B) லத்தீன் அமெரிக்கா

(C) இந்தியா (D) சீனா

15) தென்னாப்பிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்?

(A) வெர்வோர்டு (B) ஸ்மட்ஸ் (C) ஹெர்சாக் (D) போதா

16) தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரித்தப்படுத்தியது எது?

(A) அமெரிக்கா அளித்த உதவி (B) நெப்போலியனின் படையெடுப்புகள்

(C) சைமன் பொலிவரின் பங்கேற்பு (D) பிரெஞ்சுப் புரட்சி

17) லத்தீன் அமெரிக்க விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக மன்றோ கொள்கையில் திருத்தம் கொண்டு வந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்?

(A) தியோடர் ரூஸ்வெல்ட் (B) ட்ரூமென்

(C) ஐசனோவர் (D) உட்ரோ வில்சன்

18) சரியான கூற்றைத் தேர்வு செய்க.

**கூற்று** : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னிறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.

**காரணம்** : அமெரிக்கா, கட்னபட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.

(A) கூற்று, காரணம் இரண்டுமே சரி

(B) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல

(C) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே தவறு.

(D) காரணம் சரி ஆனால் கூற்றுக்குப் பொருந்தவில்லை.

19) முதலாளித்துவத்தின் உச்சகட்டமே ஏகாதிபத்தியமென கூறியவர் ……………….

(A) லெனின் (B) ஸ்டாலின் (C) மண்டேலா (D) மார்ஷல்

20) கடன்பட்ட ஒரு நாடாகப் போரில் நுழைந்த …………………… போருக்குப் பின்னர் உலகத்திற்கே கடன் கொடுக்கும் நாடாக மேலெழுந்தது.

(A) அமெரிக்கா (B) ரஷ்யா (C) இங்கிலாந்து (D) ஜெர்மனி

21) பன்னாட்டு நீதிமன்றமானது ………………………… நகரில் அமைக்கப்பட்டது.

(A) தி ஹேக் (B) நியூயார்க் (C) வாஷிங்டன் (D) கலிபோர்னியா

22) மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க நாடு ……………. திட்டத்தை அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்தினார்.

(A) ட்ரூமன் (B) மார்ஷல் (C) தியோடர் (D) லிங்கன்

23) …………………… 1955 ஆம் ஆண்டு நேட்டோ ஒப்பந்தத்தில் இணைந்தது.

(A) ஜப்பான் (B) இத்தாலி (C) கிரீஸ் (D) ஜெர்மனி

24) ஆசிய, ஆப்பிரிக்கநாடுகள் 1955 ஆம் ஆண்டு ………………………… கூடியது.

(A) பாண்டுங் (B) பெல்கிரேடு (C) பாரிஸ் (D) மாஸ்கோ

25) அரேபிய கூட்டமைப்பு மார்ச் 1945 இல் ………………. வில் உருவாக்கப்பட்டது.

(A) பாண்டுங் (B) பெல்கிரேடு (C) பாரிஸ் (D) கெய்ரோ

26) ………………. ல் கூடிய ஜெனீவா மாநாட்டில் வியட்நாம், கம்போடியாவும் லாவோஸும் சுதந்திரம் பெற்ற நாடுகளானது.

(A) 1945 (B) 1950 (C) 1954 (D) 1948

27) ஒற்றை ஐரோப்பியச் சட்டம் 1 ஜீலை ………………… இல் நடைமுறைக்கு வந்தது.

(A) 1991 (B) 1987 (C) 1990 (D) 2001

www.Padasalai.Net www.Trbtnpsc.Com


For more details Contact

9566535080, 9360268118
7639967359

Online Class for
UG TRB
Started

# UG TRB (2022-2023)

All 10 Units

Website
www.tcaexamguide.com

Mobile App
tcaexamguide

Experienced professors
&
Any time any where access to class

Multiple time can be watched
&
Access from Mobile app and Website

Teachers care Academy is the foremost coaching Institution for various competitive examinations such as P.G.TRB, TET Papers I &II TNPSC including special Teachers Eligibility Test. The Academy was established on 5th April 2013 by learned energetic and multifaceted chairperson Mrs. RAVIMAGESHWARI in the holy temple town of Kanchipuram.

## Our Other Competitive Exam. Guides

- PG-TRB (Tamil, English, Mathematics, History, Physics, Chemistry, Commerce, Economics, Botany, Zoology)
- Polytechnic-TRB (English, Mathematics, Physics, Chemistry, CSE, ECE, Civil, EEE, Mech)
- Computer Instructor Grade-1
- Block Educational Officer
- Teachers Eligibility Test (TET Paper-1 & Paper-2) & UG-TRB
- TNEB – Assessor
- Tamil Nadu – Forest Guard
- TNPSC ( Group-1, Group-2, Group-3, Group-4)
- NEET

*Your Success is Our Goal....*

Teachers Care Academy

tcaexamguide

tcaexamguide@gmail.com

www.tcaexamguide.com

**Teachers Care Publication**
38/23, Vaigundaperumal Koil Street, Kanchipuram-1
Mobile : 95665 35080, 97862 69980
Help Line Numbers : 9360268118 7639967359

1st Edition


Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com